மனிதம்

18 புரட்டாதி – ஐப்பசி

ஜேர்மனியில் •••

அந்தச் சிறுமிக்கு வயது ஐந்துதான் இருக்கும். பெயர் க்ஷணி, "கண்ணனும் பொன்னனும்" கதையைச் சொன்ன பாங்கும், நடிப்பும் இன்னும் கண்முன் அடிக்கடி வந்து போகிறது.

வினோதஉடைப் போட்டிக்கு ஒரு சிறுவன் வந்தான். ஒரு கால் நீட்டிக் கால்சட்டையுடனும், மற்றக்கால் கட்டைக் கால்சட்டையுடனுமாக காட்சியளித்தான். இத்துடன் இன்னும் சில வார்த்தைகளை உதிர்த்து இரட்டைக்கலாச்சார குழலுக்குட்பட்டு, அவதியுறும் ஒருவனாகத் தன்னை வெளிப்படுத்தினான்.

"சின்னப்பாப்பா எங்கள் செல்லப்பாப்பா
"சொன்ன பேச்சைக் கேட்டால்தான் நல்லபாப்பா"

என்ற பழைய சிறுவர் சினிமாப்பாடல் ஒன்றுக்கு பாவைப்பிள்ளைகளுடன் வந்த சின்னஞ்சிறுமிகள் ஆடிய நடனம், இன்னும் கண்களை அலங்கரித்து நிற்கிறது.

கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என்று மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி, கதை சொல்லல் போட்டி வினோத உடைப்போட்டி என்ற அனைத்துப் போட்டிகளிலுமாக சுமார் 70க்கு மேற்பட்ட சிறுவர்கள் கலந்து கொண்டனர். அந்நிய மண்ணில் நிகழ்ந்த இப்போட்டிகளில் சிறுவர்களின் சொற்பிரயோகங்கள் தாய் மண்ணை நினைவுகூருமளவுக்கு சிறப்பாக இருந்தமை குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

19. 9. 92 சனிக்கிழமை Köln நகருக்கு அண்மித்த Horrem என்னும் இடத்தில் "சிறுவர் அமுதம்" (ஜேர்மனியில் இருந்து வெளிவரும் சிறுவர் பத்திரிகை. நடாத்திய இச்சிறுவர் விழாவில் சிறுவர்களுடன் பெற்றோர் – பார்வையாளர்களுமாக சுமார் 300 பேர் வரை கலந்துகொண்டனர். காலை 11 மணியில் இருந்து இரவு 9 மணிவரை நடந்த இவ்விழாவில் பிள்ளைகளும் பெற்றோர்களும் சலிப்பின்றி குதூகலமாகக் காட்சியளித்தனர்.

மத்திய போசனம்வரை நிகழ்ந்த போட்டிகள் முடிவுற்றதும் சுமார் 3.30 மணிக்கு சிறுவர்விழா நிகழ்ச்சிகள் குறிப்பாக கலை நிகழ்ச்சிகள் ஆரம்பித்தன. குறவன் குறத்தி நடனம், அபிநயப்பாட்டு, மயில் நடனம், கும்மி நடனம், மேலைத் தேச நடனம், ஓர்கன் வாத்திய இசை, "சவாரி சண்முகம்" சிறுவர் நாடகம் ஆகியனவும், செல்விகள் ஜனனி, யாழரசி, வானதி ஆகியோரின் பரத நாட்டியமும் இன்னும் பல கலை நிகழ்ச்சிகளுமாக சிறுவர் சிறுமிகளினால் நிகழ்த்தப்பட்ட அனைத்து நிகழ்ச்சிகளும் சேர்ந்து – நிகழ்ச்சியில் சிறு, சிறு குறைபாடுகளும், பரத நாட்டியத்தில் முத்திரைகளுக்கு முக்கியத்துவம் குறைக்கப்பட்டிருந்தன என்றாலும் – விழாவைச் சிறப்பித்தன.

மேலும் மாணவர்களை ஊக்கிவிக்கும் நோக்காக போட்டிகளிலும், நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றிய அனைவருக்கும், பரிசில்கள் வழங்கப்பட்டமை பாரட்டுதற்குரிய சிறப்பம்சமாகும். குறிப்பாக பரிசில்கள் என்றால் "தங்கப்பதக்கங்கள்", "வெள்ளிப்பதக்கங்கள்" இருக்கவேண்டும் என்ற எமது "தமிழ் மரபு" இங்கு தகர்க்கப்பட்டு, அவரவர் தேவைகளுக்கும், தகுதிகளுக்கும் ஏற்ப புத்தகங்கள் பரிசில்களாக வழங்கப்பட்டன. இவ்வழிமுறை தமிழ் சமூகத்தில் தொடரவேண்டும்.

பேச்சுப் போட்டிகளில் மாணவர்களின் தகமைக்கும், வயதுக்கும் மீறிய விடயங்களும் வசனங்களும் காணப்பட்டமை பாரிய குறைபாடாகும். இக்குறைபாடு எதிர்காலத்தில் நிவர்த்திக்கப்பட வேண்டும்.

தமது தகமைக்கு உட்படவில்லை என்ற காரணத்திற்காக ஒரு பகுதியினர் இச்சிறுவர் விழாவைக்கூட பகிச்சரிக்கும்படி கோரினர். ஜேர்மனியில் சுமார் 20க்கும் மேற்பட்ட சஞ்சிகைகள் வெளிவந்தபோதும், "மண்", "தமிழ் நாதம்" ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மட்டும் இவ்விழாவில் கலந்துகொண்டு தமது பங்கைச் சிறப்புடன் செலுத்தினர். சிறுவர் சம்பந்தப்பட்ட விடயங்களில் பல பத்திரிகைகள் அலட்சியப்போக்குடன் காணப்படுவது, குணப்படுத்தப்படவேண்டிய நோய் ஆகும்.

சிறுவர் அமுதம் நடாத்திய சிறுவர் விழா

மனிதம்

மனிதம் இந்த இதழுடன் அதன் நான்காவது வருடத்தில் நுழைகிறது. மனிதம் தோன்றுவதற்கு முன்பும், அதன் பின்பும், மனிதத்தின் நோக்கிற்கு பலம் சேர்க்கும் வகையில் ஐரோப்பா முழுவதும் பல தமிழ்ச் சஞ்சிகைகள் முனைப்போடு வெளிவந்தன, வெளிவருகின்றன.

'கழுதை தேய்ந்து கட்டெறும்பாகியது' போல் ஈழத் தமிழ் இயக்கங்கள் தமது நோக்கில் இருந்து திசைமாறி– இறுதியாக 'விடுதலைப் புலிகள்' என்றும் 'விடுதலைப் புலி எதிர்ப்பு' (Anti-Tigers) என்றும் குறுகிக் கொண்ட நிலையில்....

சமூக விஞ்ஞானங்களை நெறியாகக் கொண்ட மூன்றாவது அணியின் தேவையை நோக்கிய தேடல் முயற்சியில் இப் பத்திரிகைகள் பலவும் ஈடுபடுகின்றன. புலிகளைப் பற்றிய மதிப்பீட்டை நோக்கி பல பரிமாணங்களைக் கொண்ட விவாதங்களைத் தொடர்ந்து நடாத்தி வருகின்றன.

எம்மைப் பொறுத்தவரை பல பரிமாணங்களில் இருந்தும் வெளிப்படும் இக் கருத்துக்களின் மோதல்கள் அவசியமான ஒன்றே. கருத்துக்களின் மோதல்கள் சரியான கருத்தை எட்டுவதற்குப் பதிலாக இந்த மோதல்களில் சிதறி விடுவதாக இருக்கக் கூடாது. அவை ஆரோக்கியமாக நிகழ்த்தப்பட வேண்டும். விவாதங்களை மேற்கொள்ளும் வழிமுறைகளில் பண்புகள் பேணப்பட வேண்டும்.

தற்போதைய நிலையில் இவ் விவாதங்களின்போது வெளிப்படும் பார்வைகளை கருதுகோள்களாகவே (அளவையியில் விஞ்ஞானப் பரிசோதனைக்கு முந்திய கருத்துக்கள்) கருத்தில் கொள்ள வேண்டும். இவ் விவாதங்களின் விளைவு ஒரு பொது உடன்பாட்டை நோக்கி நகர்த்துவதாக அமைய வேண்டும்.

ஆனால் இன்று விவாதங்களைத் தொடர்பவர்களில் பலர் தத்தமது கருத்துக்களில் மட்டும் ஊன்றி நிற்பதனாலும், மற்றவர்களின் கருத்துக்களை வலிந்து நோக்குவதனாலும் இன்னும் ஒரு குறைந்த பட்ச உடன்பாட்டை நோக்கிய அரும்பைக் கூடத் துளிர்ப்பதற்கான சூழலைத் தோற்றுவிக்கவில்லை.

இத்தகைய சூழலைக் கருத்தில் கொண்டு எம்மிடையே ஆரோக்கியமான நோக்கில் சரியான திசையில் செய்யப்படும் விவாதங்களே நாம் விரும்பும் அந்தப் புள்ளியில் எம்மை ஒன்று குவிய வைக்கும்.

புரட்டாசி
+
ஐப்பசி

1992
(இரு மாதத்திற்கு ஒருமுறை)

வாசகர்களே!
விமர்சனங்களையும்
ஆக்கங்களையும்
வரவேற்கிறோம்

Nur für Freundkreise

தொடர்புகளிற்கு:

MANITHAM
POSTFACH 12
3000 BERN 11
SWITZERLAND

இலங்கையிலிருந்து சில செய்திகள்

கொப்பேகடுவ கொலையும் பிரேமதாசாவும்

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் இலங்கையில் நிகழ்ந்த இராணுவ உயரதிகாரிகளின் உயிரிழப்பு அரச, இராணுவ ரீதியில் பெரிய இழப்பினை ஏற்படுத்தியுள்ளதாக சகல பத்திரிகைகளும் எழுதின. ஆனால் உயரதிகாரிகளின் கொலை சம்பந்தமாக பிரேமதாசா பெரியளவில் அனுதாபமோ ஆத்திர மூட்டலோ இன்றி ஒருவித போக்குடன் நகர்த்திவிட்டார். இப் போக்கு சிங்கள மக்களின் ஒரு பகுதியினரை வியப்புக்குள்ளாக்கி விட்டது. எதிர்க் கட்சிகள் –குறிப்பாக சுதந்திரக்கட்சி– அனுதாபத் துடன் கூடிய ஆதரவைத் தேடும் முயற்சியில் இறங்கின. அரசுக்கு எதிரான கோசங்களை உயர்த்திப் பிடித்ததுடன் 'உயரதிகாரிகளின் கொலைக்கு அரசுதான் பொறுப்பேற்க வேண்டும்' என பிரசுரங்கள் மூலமாகவும், பத்திரிகைகள் வாயிலாகவும் அறிக்கைகள் விட்டிருந்தன. 'நாட்டுக்காகவும் பயங்கரவாதத்திலிருந்து நாட்டை மீட்பதற்காகவும்' இறுதிவரை அவர்களின் பங்களிப்பு இருந்ததினால் தேசிய துக்கதினமாக பிரகடனப்படுத்தும்படியும் கோரிக்கை விட்டன. இவைகளெல்லாம் பிரேமதாசா அரசால் கவனத்திற்கு எடுக்கப்படவில்லை.

இறுதிக்கிரியை தினத்தன்று 83 யூலையில் நடந்த தொடக்கச் சம்பவம் போன்று எதிரணியினரால் திட்டமிட்டு பொரளை கனத்தை மயானத்தில் கலவரம் முடுக்கிவிடப்படுவதற்கான ஆரம்பக் கட்டமாக, மயான மதில் உடைப்புக்களும் கல்லெறிக் கலாட்டாக்களும் நடை பெற்றன. அன்றைய அரச உயரதிகாரிகளும், சில மந்திரிகளும் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டனர். அவர்களும் கல்லெறிக்குத் தப்பவில்லை. மந்திரி அமரதுங்காவுக்கு துரத்தித் துரத்தி கல்லெறி விழுந்தது. சிலரது வாகனங்களை அடித்து நொறுக்கியும் கொளுத்தியும் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் எதிரணியினர் இறங்கினர். சில இராணுவ சிப்பாய்களும் சிவில் உடையில் வந்து குழப்பம் ஏற்படுத்தியதாக கூறப்படுகிறது. கலக்காரர் (எதிரணியினர்) கல்லெறியும் போது, " 'பெரியவர்' இப்போ தம்புள்ளையில் விழாக் கொண்டாடுகிறார், நாங்கள் இங்கே விழாக் கொண்டாட வேண்டாமா ? " என்று கேள்வி எழுப்பி கூச்சலிட்டனர்.

இறுதிக் கிரியை கனத்தை மயானத்தில் நடந்த வேளை பிரேமதாசா தம்புள்ளையில் பாடசாலை, வைத்தியசாலை திறப்பு விழா நடாத்திக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. புதிதாக திறக்கப்பட்ட பாடசாலைக்கு கொப்பேக்கடுவவின் பெயரையும், வைத்தியசாலைக்கு மற்றைய அதிகாரியான விஜயவிமலரத்தினவின் பெயரையும் சூட்டி இரங்கல் கூட்டம் மாதிரி நடாத்தி, மக்களின் அனுதாப அலையை தனதாக்க முயற்சித்தார். குழப்பத்தை ஏற்படுத்த முனைந்த எதிரணியினருக்கு பிரேமதாசாவின் தந்திர நடவடிக்கை பலத்த அடியாக இருந்தது.

உயரதிகாரிகளின் குண்டு வெடிப்புச் சம்பவம் பற்றி சூபவாகினியில் கூட, முதலில் அரியாலையில் நடந்ததாகவும், பின்பு ஊர்காவற்துறையில் நடந்ததாகவும், இறுதியில் அராலித்துறையில் நடந்ததாகவும் முன்னுக்குப் பின் முரணாகவே செய்திகள் வாசிக்கப்பட்டன. முக்கியமாக இக் காலகட்டத்திலேயே அவுஸ்திரேலியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான 5 நாள் கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசாங்கம் கூடுதலான பொலிஸ், இராணுவ ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்ததோடு பத்திரிகை, தொலைக்காட்சி மூலம் இப்போட்டிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டும் இருந்தன. அந்த சமயத்தில் பெரும்பாலான சிங்கள மக்களின் கவனம் விளையாட்டிலேயே மூழ்கியிருந்ததைக் காணமுடிந்தது. இதன் காரணமாக கணிசமான அளவு அனுதாப அலைகள் இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டது.

இத்தனைக்கும் அராலித்துறையில் குண்டு வெடிப்புச் சம்பவம் நடைபெற்ற இடம் இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசமாகும். இக் குண்டு வெடிப்பில் 9 இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டனர். இக் குண்டு வெடிப்புக்கு

அரசியல் காரணங்களோடு எப்படி, யாரால், ஏன் நடாத்தப்பட்டது என்பது இப்பவும் ஒருசாராருக்கு மர்மமாகவே இருக்கிறது.

முன்னர் ரஞ்சன் விஜேரட்ன கொலை செய்யப்பட்டபோது, புலிகள் உரிமை கோராமலும், மறுக்காமலும் மசாலா மனப்பான்மையுடன் நடந்து கொண்டனர். ஆனால் பின்னர் அக் கொலை பிரேமதாசாவின் வேலை எனப் பலராலும் பேசப்பட்டது. கொப்பேகடுவேயின் கொலையும் இந்த வரிசையில் சேர்ந்து விட்டது. இராணுவ உயர்மட்டத்துள் நிலவிய முரண்பாடுகள் வெளியில் கசிந்த வேளை, வடபகுதிமீது பாரிய இராணுவத் தாக்குதல் (பல்வேகய) கொப்பேகடுவ தலைமையில் திட்டமிட்டு நடத்தப் பட்டது. கொப்பேகடுவவும் மற்றும் கடற்படை, விமானப்படை உயரதிகாரிகளும் கொலை செய்யப் பட்டும் கூட எந்தவித தடுமாற்றமோ, தாமதமோ இன்றி இராணுவம் மாதகல் வரை முன்னேற வழிகாட்ட முடிந்தது தற்செயலானதுதானா ? என்ற கேள்விக்கு பலர் விடை தேடித் திரிந்தனர். பிரேமதாசா இச் சம்பவம்பற்றி அதிர்ந்து போகாதது மட்டுமல்ல, இறுதிக் கிரியையில் கூடப் பங்கு பற்றாமல் தமது வழமையான அலுவல்களுடன் திரிந்தார். இவையெல்லாம் இக் கொலைகளும் பிரேமதாசாவின் வேலைதான் என்ற ஊகத்தை மக்களிடம் பலமாகவே எழுப்பியுள்ளன.

பிள்ளைபிடி பீதி

கொழும்பில் பாடசாலைப் பிள்ளைகள் கடத்தப்படுவதாக பரவலாக பரபரப்புடன் கதைகள் உலாவின. வதந்தி என்றும், உண்மை என்றும் இருவிதமாக பேச்சுக்கள் அடிபட்டன. அரச உயர்மட்டத் தலைவருக்கு (பிரேமதாசாவுக்கு எனச் சொல்லப்படுகிறது) 'ஆசீர்வாதம்' வேண்டி மத அனுஷ்டான வழிப்படி உயிர்ப்பலி கொடுப்பதற்காகவே பாடசாலைப் பிள்ளைகள் கடத்தப்படுவதாகப் பேசப்பட்டது. பொதுவாக 10 வயதுக்கும், 14 வயதுக்கும் இடைப்பட்ட பிள்ளைகளே கடத்தப்படுவதாக ஒரு தகவல். "இதில் உண்மையில்லை, இது ஓர் வதந்தியே" என அரசாங்கம் திட்டவட்டமாக 'மறுப்புத்' தெரிவித்தது. சூபவாகினி தொலைக்காட்சிப் பேட்டியின்போது, மாவட்ட பொலிஸ் அதிகாரி 'பிள்ளைகள் கடத்தப்படுவதாக தமக்கு புகார்கள் ஏதும் வரவில்லை' எனக் கூறினார். ஆனால் "இது உண்மைதான்" என 'அத்த' சிங்களப் பத்திரிகை எழுதியது. பெற்றோர், ஆசிரியர், பிள்ளைகள் மத்தியில் இச்சம்பவம் பீதியூட்டுவனவாக இருந்தது. பெற்றோர்களே பாடசாலைக்குப் பிள்ளைகளைக் கூட்டிச் செல்வதை யும் மீண்டும் பாடசாலை முடிய அழைத்து வருவதையும் பரவலாக கொழும்பின் பல இடங்களில் காணக் கூடியதாக இருந்தது.

லொத்தர் அலை

இன்று கொழும்பைப் பீடித்துள்ள ஒரு நோய் லொத்தர் (lotto) சீட்டு விற்பனையாகும். முன்னைய காலங்களில் இரண்டு மூன்று விதமான லொத்தர் சீட்டு வகைகளே இருந்து வந்தது. அதற்கான ஆகக் கூடிய பரிசுப் பொருளாக கார் ஒன்று அல்லது ஒருலட்சம் ரூபாவாகவே வரையறுக்கப்பட்டிருந்தது. இன்றைய கொழும்பில் எங்கு திரும்பினாலும் லொத்தர் சீட்டு விற்பனைதான் அமோகமாக நடைபெறுகிறது.

லொத்தர் சீட்டு விற்பனை விளம்பரத்தால் கவரப்பட்டவர்கள் ஏராளமாக உள்ளனர். பரிசுத் தொகைகளும் பத்து லட்சம், இருபது லட்சம் என விளம்பரப்படுத்தப்படுகின்றன. இதனால் கவரப்பட்ட மக்கள் ' போனால் 10 ரூபாய்! வந்தால் 10 லட்சம்!! ' என்று பெரும் எதிர்பார்ப்புடன் ஏமாறுகின்றனர். லொத்தர் விற்பனைகள் நடைபாதை வியாபாரமாகவும் வியாபித்திருக்கின்றன. பல ஏழைக் குடும்பங்கள் லொத்தர் சீட்டு விற்பனை செய்வதில் கிடைக்கும் வருமானத்தில் பயன் பெறுகின்றனர் என்பதையும் பார்க்க முடிகிறது.

சூபவாகினி தொலைக்காட்சியில் கிழமை ஏழு நாட்களும் ஏதோ லொத்தர் சீட்டிழுப்பு நடாத்தப்படுவதால் அரசாங்கமும் சீட்டிழுப்பினை ஊக்குவிக்கிறது.. லொத்தர் சீட்டு விற்பனை வறிய மக்களிடமும் நடுத்தர வர்க்கத்தினரிடமும் ஆசையைத் தூண்டி பகல் கொள்ளை அடிப்பதற்கு ஒப்பானது. தொழிலாளரின் உழைப்பைச் சுரண்டி அவர்களை வறுமை நிலைக்குத் தள்ளி விடுவதுடன் நின்று விடாது, அவர்களை இதை உணரவிடாது கவனத்தைத் திசைதிருப்பி அதிஸ்டத்தின் மீது நம்பிக்கை கொள்ள வைத்து எஞ்சிய சில்லறைகளையும் பிடுங்கி விடுகிறார்கள்.

திருமலை நிலைமை

வடக்கிற்கு உணவுப் பொருட்கள் உட்பட பொருளாதாரத் தடைகள் 90 யூன் முதல் அமுலில் இருந்து வருவது தெரிந்ததே. குறிப்பிட்டளவு அனுமதிக்கப்பட்ட பொருட்களே வடக்கிற்குக் கொண்டு செல்ல முடியும். இந்நிலைமை திருமலையில் குறிப்பிட்ட சில கிராமங்களிலும் காணப்படுகிறது. மூதூர், கட்டைப்பறிச்சான், தம்பலகாமம்

போன்ற இடங்களில் உள்ள மக்களும் பொருளாதார தடைகள் மூலம் பல துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். இவர்களின் துன்ப நிகழ்வுகளை எந்தவொரு பத்திரிகைகளும் இதுவரை வெளிக்கொணரவில்லை. மண்ணெண்ணெய் கூட பொலித்தீன் பையில் குறிப்பிட்டளவு தான் கொண்டு போக முடியும். பொருட்கள் எதுவாக இருந்தாலும் பாதுகாப்பு இராணுவ அதிகாரிகளின் பார்வைக்கு தெரியக்கூடிய மாதிரி கொண்டு செல்ல வேண்டும்.

திருகோணமலை நகர்ப்புறம் முழுவதும் பாதுகாப்பு வலயமாக பொலிஸ், இராணுவ, கடற்படைகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன. வடகிழக்கு மாகாண சபை, அரச அலுவலகங்கள் முழு அளவில் திருகோணமலை நகரத்துக்குள் குவிக்கப்பட்டிருக்கிறது. தனியார் வீடுகளும் வாடகைக்கு அமர்த்தப்பட்டு எல்லாம் அரச அலுவலகங்களாக காட்சியளிக்கின்றன.

வரதராஜப் பெருமாள் 'முதல்வராக' இருந்த காலத்திலேயே கூடுதலான காரியாலயங்கள் புதிதாகத் திறக்கப்பட்டன. மாவட்ட காரியாலங்கட்கு கூடுதலான பணியாட்கள் தேவைப்பட்டதால், நகரத்தை மையமாகக் கொண்டு கூடுதலான தமிழ் ஊழியர்கள் குடியிருப்புக்களை நாடினர். அயல் கிராமங்களிலிருந்தும் (சீனன்குடா, தம்பலகாமம், மூதூர், கட்டைப் பறிச்சான்) மக்கள் பயபீதி காரணமாக நகரை நோக்கி இடம் பெயர்ந்தனர். இதனால் நகரப்பகுதி முழுவதும் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதியாக காட்சியளிக்கின்றது. யாழ்ப்பாணத்துடன் ஒப்பிடும்போது நகரப்பகுதியில் எவ்வித குழப்பமும் கடந்த ஒரு வருடத்திற்கு மேல் நிகழவில்லையென அங்குள்ளவர்கள் ஒருவித நிம்மதியுடன் தெரிவிக்கின்றனர். அதேசமயம் அயல் கிராமங்களில் பிரச்சனைகள் தொடரத்தான் செய்கின்றன.

தம்பலகாமம் , சீனன்குடா பகுதி தமிழ் மக்களில் பெரும்பாலானோர் அகதிகளாக இந்தியாவுக்கும், ஒரு பகுதியினர் நகரப்பகுதிக்கும் நகர்ந்துள்ளனர். எஞ்சிய சில பகுதியினரே ஆங்காங்கு பீதியுடன் வாழ்க்கையை ஓட்டுகின்றனர். தமிழ் மக்கள் விட்டுச் சென்ற வீடுகளின் அத்திவாரங்களைத் தவிர ஏனைய பாகங்கள் எல்லாம் களவாடப்பட்ட நிலையில் காட்சியளிக்கின்றன. கடற்கரை கிராமங்களில் சிங்கள மக்கள் செறிவாக வாழ்கின்றனர். வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் பெயரளவில் இயங்கினாலும் கூட, அரச நிர்வாக பணிமனைகள் நகரில் ஒன்று குவிக்காதிருக்குமானால் நகரப்பகுதிகூட திட்டமிட்டபடி சிங்களக் குடியேற்றம் நடந்து முடிந்து இன்று சிங்கள மாவட்டமாக காட்சியளித்திருக்குமென்றே தெரிகிறது.

நந்தகுமார்

தொடர்----37

"கோமாளிகளின் இன்றுவரையான T.V நிகழ்ச்சிகள் - ரூபவாகினியில் - ஓரளவு பார்க்கக் கூடியவை. ஐரோப்பிய நிகழ்ச்சிகள் இத்தகைய தரத்துக்கு இறங்குவதற்கான காரணம் இங்குள்ளவர்களின் கலாரசனை மட்டம் தான்" என்று ஒரு நண்பர் துள்ளிப்பாய்ந்தார்.

நண்பரின் கருத்தில் பகுதி உண்மையும் உண்டுதான். என்னவெனில், தென்னிந்திய நடிகர் கூட்டம் உருவாக்கிய மட்டரக கலாரசனைக்கு ஏற்ப தம்மை இறக்கிக்கொள்ள வேண்டியதேவை இந்த ஈழத்துக் கலைஞர்களுக்கு உருவாகிவிடுகிறது. விளைவு : நிகழ்ச்சியின் தரம், கலை வளர்ப்பு என்பன எல்லாம் கேள்விக்குட்பட சிரிப்பு மட்டுமே மிஞ்சிவிடுகிறது.

கலை என்பது - ஆடலும், பாடலும், சிரிப்பும் மட்டுமல்ல அது தன்னுள்ளே இன்னும் பல சிறப்பான அம்சங்களையும் கொண்டிருக்கிறது. இதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். மட்டரகமான கலாரசனைக்குள் மூழ்கிச் செல்லும் எம்மவரை வெறுமனே விமர்சித்துக்கொண்டிராமல் இதிலிருந்து அவர்களை மீட்டெடுக்கும் பணியில் இன்றைய சூழலில் கலைமுயற்சிகள் முளைவிடுவது வரவேற்கத்தக்கது.

குறிப்பாக ஐரோப்பாவில் எம்மக்கள் மத்தியில் உள்ள இயக்கம்சார்புள்ளவர்களும் அல்லது இயக்கம்சார் பற்றவர்களும், தன்னார்வக்குழுக்களும் இன்று கலை முயற்சிகளில் ஈடுபடத் தொடங்கியிருப்பது ஆரோக்கியமானதே. இத்தகைய முயற்சிகள் பலம் பெறுவதன் மூலமே - நல்ல கலைப்படைப்புக்களை படைப்பதன் மூலமே - எம்மவர் கலாரசனை மட்டத்தை உயர்த்தமுடியும்.

* க. தீபன்

நம்பிக்கையில்

எனது மனம்
இன்னும் நம்பிக்கையிலேயே
புரளுகிறது.
வேதனைகளின்
ரணங்களுக்கு
நம்பிக்கை ஒத்தடமே
இன்னும் நான்
கொடுப்பது.

இருண்ட வானத்தில்
ஒரு மின்னல்.....
வரண்ட பூமியிலே
ஒரு மழைத்துளி ,
புதைந்த கால்களுக்கு
ஒரு உந்து
இப்படி இப்படி
உதாரணக் கற்றைகளால்
உணர்வுகளை
ஒற்றிக் கொள்வேன்.

அழுத கண்ணீரைத்
துடைத்து ஆற்றியபடி
என் துணைவி
கேட்கிறாள்.
" நிம்மதி இல்லையாங்கோ? "

" மகன் வானத்தைப் பார் "
ஏதோ இரைஞ்சு கேட்குது
வயதான என் தாய்...

வாழ்ந்தபடி செத்துக்கொண்டே
வானத்தைப் பார்த்தபடி...
தினம் தினமுமாய்
இப்படியே தானா வாழ்க்கை ?
இறுதியாக இப்படியும்
நினைவு தட்டும்.

" சுதந்திரம் வேண்டாம்
ஒரு
மண்ணாங்கட்டியும்
வேண்டாம்.
நிம்மதியாய் செத்தாலே போதும் "

ஆனாலும் என் மனம்
இன்னும் நம்பிக்கையிலேயே
புரளுகிறது.
அது... சுதந்திரத்திற்காகவா ?
சுகமான சாவுக்காகவா ?
இது மட்டும்
புரியவில்லை..

இளைய அப்துல்லா

* * *

சந்தாவிபரம்

இலங்கை இந்தியா – இலவசம்

தனிப்பிரதி 3sfr
ஒருவருட சந்தா 22sfr
ஐரோப்பிய நாடுகளிற்கான சந்தா 25sfr
(தபால் செலவு உட்பட)

வங்கிக்கணக்கு இல:–
Spar Konto 0094-157146-60-1

வங்கி முகவரி:–
Bücher Verkauf
Scwezerische Kreditanstalt
Switzerland

விமர்சனமா ? தாக்குதலா ?

ஈழ விடுதலைப் போராட்டம் தோல்விகளையும் பின்னடைவுகளையும் சந்தித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில், கடந்த கால இயக்கங்களின் தோல்விகளின் வரலாறுகளையும் தற்போதும் ஆதிக்கத்தில் உள்ள சக்திகளின் செயற்பாடு, பின்னணி போன்றவற்றை விவாதித்து, குறைந்தபட்சமான ஒரு ஐக்கியத்திற்குத் தானும் வர வேண்டிய தேவை இன்னும் எதிர்காலத்தின் மீது நம்பிக்கை வைத்து செயற்பட்டுக் கொண்டிருக்கிற சக்திகளிடம் எதிர்பார்க்கப்படுகின்ற ஒன்றாக இருக்கிறது.

இவ்வாறான ஆரோக்கியமான ஓர் சூழலை வேண்டி நிற்கும் ஓர் ஆதங்கமான நிலையில்.....
சமர் 5–6 இல் 'தேசவிடுதலைப் போராட்டமும் தேசிய சக்திகளும்' என்ற கட்டுரையில் மனிதம் மீதான தாக்குதலைத் தொடுத்துள்ளது. மனிதத்தில் கரிகாலன் எழுதிய கட்டுரையொன்றை மனிதத்தின் கருத்தாக பிரதி பண்ணியதோடு, ' திரிபுவாதிகள் ' என்ற முத்திரையையும் குத்தியுள்ளது. 'மனிதத்தில் கரிகாலன் எழுதிய கட்டுரை' என்று கூறப்படும் பத்திரிகை நெறியைக் கடைப்பிடிக்கத் தவறியதே சமர் செய்த கடுமையான தவறாகும். ஒரு பத்திரிகையை வெளியிடும் நபர்களே இந்த நெறியைப் புரிந்து கொள்ள மறந்திருப்பார்கள் என்று மனிதம் எதிர்பார்க்கவேயில்லை. இந்த தவறை சமர் இனிமேலாவது உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஏற்கனவே தூண்டில், உயிர்ப்பு, சமர் போன்றவற்றில் "தேசிய சக்திகள்" பற்றி நடைபெற்றுக் கொண்டிருக்கும் விவாதத்தை மனிதத்தில் கரிகாலன் எழுதிய " புலிகள் தேசிய, தரகு, ஏகாதிபத்தியங்களின் பிரதிநிதிகள் அல்ல " என்ற கட்டுரையானது வேறு ஒரு பரிமாணத்திலிருந்து நோக்குவதால், அக் கட்டுரையின் சரிகள் தவறுகள் பற்றிய மாற்றுக் கருத்துக்களை அறியும் நோக்குடன் ஆர்வத்துடன் பிரசுரிக்கப்பட்டது.

இந்த விவாதங்களுக்கூடாக சிறப்பான முடிவுகளுக்கு வந்தடைய வேண்டிய தேவையை மனப்பூர்வமாக விரும்பினால், முதலில் மாற்றுக் கருத்து உள்ளோரை அங்கீகரிக்கும் மனப்பக்குவம் வேண்டும், மாறாக மாற்றுக் கருத்துள்ளோரை எதிரணிக்குத் தள்ளுதல், அவர்களின் கேள்விகள் கருத்துக்களின் தர்க்க நியாயங்களுக்கு சரியான முறையில் பதிலளிக்காமல் பிற்போக்காளர், திரிபுவாதிகள் என்று முத்திரை குத்தி அவதூறு பொழிதல் எமது பலவீனமாகவே அமையும்.

கரிகாலனின் கட்டுரை மீது அதிக முரண்பாடுகள் கொண்டிருப்பவரும் கூட, 'திரிபுவாதம்' என்று முத்திரை குத்துவதை மனிதம் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இந்த முத்திரை குத்தல்கள் சரியான கருத்துக்களைக் கூட ஜீரணிக்க மறுத்து விடுகிறது. மனிதம் குழுவில் இல்லாத ஒரு ஆக்கதாரரை மனிதமாகக் கண்ட சமரின் விமர்சனத்தில் கூட, அவ் ஆக்கதாரருடன் முரண்படும் தமது கருத்தக்களையெல்லாம் 'திரிபுவாதம்', 'திரிபு' என்பதன் ஊடாக வடித்தெடுப்பதைக் காணமுடியும். இது ஒரு விமர்சனப் பண்பாகாது. கரிகாலனின் கட்டுரை விவாதத்தைத் தூண்டும் பாணியில் இல்லை என்பதை மறுப்பதற்கில்லை, இந்த உண்மையைச் சுட்ட வந்த சமரின் நல்ல நோக்கம் ' திரிபுவாதிகள் ' என்ற முத்திரை குத்தல் பண்பால் பலவீனப்படுத்தப்படுகிறது. கரிகாலனின் கட்டுரையின் (விவாதத்தை மறுக்கும்) போக்கு பிரசுரிப்பதற்கு தடையானது அல்ல என்பது எமது நிலைப்பாடு.. மேலும் கரிகாலன் கூறியவற்றில் கருத்தைச் சிதைக்கும் வகையில் வசனங்களைப் பிரித்தெடுத்து, சமர் விவாதித்த முறையும்கூட விமர்சனங்களையும் மாற்றுக் கருத்துக்களையும் தடை செய்யும் போக்குத்தான்.

இன்று சஞ்சிகைகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தேசிய சக்திகள் பற்றிய விவாதத்தில் மனிதம் குழு தனது விவாதங்களை வைக்காதது ஒரு குறைபாடுதான். நாட்டிலிருந்து பல்வேறுபட்ட காரணங்களுக்காக வெளிநாட்டுக்கு வந்த உதிரிகளின் சமூகப் பொறுப்புணர்வை காப்பாற்றி வளர்த்தெடுப்பதோடு, செயற்பட வேண்டிய தேவையுடனும் மனிதம் வெகுஜன அமைப்பாக உருப்பெற்றது. மேலும் இவ்வாறான அமைப்புகளின் தேவையும் அதன் உருவாக்கமும் பற்றியும் ஏற்கனவே வலியுறுத்தியுள்ளோம். மனிதத்தை ஒரு புரட்சிகர அமைப்புடன் பொருத்திப் பார்ப்பதோ மிகைப்படுத்துவதோ உண்மைக்குப் புறம்பானவை. சமுதாய நலனில் அக்கறை யுடையவர்கள் என்ற அடிப்படையில் பாசிசம், பிற்போக்குத்தனங்களுக்கு எதிராக இணக்கமும், தத்துவார்த்தப் பிரச்சனையில் கருத்து வேறுபாடுகளும் உள்ளன. இப் பிரச்சனை சம்பந்தமாக நாம் கற்றுக் கொள்கிறோம் – விவாதிக்கிறோம். இத் தத்துவார்த்த தளத்தில் எமக்குள்ளான விவாதங்களையும் படிப்பையும் தூரிதப்படுத்த வேண்டிய தேவையை சமரின் கட்டுரை உணர்த்தியுள்ளது என்பதை நாம் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும்.

தேசிய சக்தி பற்றிய பிரச்சனையின் களத்தில் சமர் போன்று தாக்குதல் மேற்கொள்வதைத் தவிர்த்து, சஞ்சிகைகளும் முற்போக்கு சக்திகளும் ஆரோக்கியமான முடிவை எட்டும் பண்புடன் சந்திக்க வேண்டும். இதை நோக்கி முன்னேறுவோம் !

ஆசிரியர் குழு –

எழுத முடியாத கதை

" Hello....Hello ! டேய் மூசேசி கதயனடா "
(மூதேவி எண்டிறத அவன் மூசேசி எண்டுதான் சொல்லுவான்) ஏழு வருசத்துக்குப் பிறகு அவன்ர குரல மட்டும் ரெலிபோனுக்கால இண்டைக்குக் கேக்கிறன். உண்மையில எனக்கு என்ன கதைக்கிறதெண்டு தெரியாமத்தான் கேக்கிறன். உண்மையில எனக்கு என்ன கதைக்கிறதெண்டு தெரியாமத்தான் போச்சு. எனக்கு கையுமோடேல்லக் காலுமோடேல்ல. முதல்ல அவனோட கதைக்கிறபோது என்ர குரல்ல ஒரு நடுக்கந் தெரிஞ்சது.
" என்னடா மூசேவி அப்செற்றாப் போட்டியே? "
அம்மாவாணை எனக்கும் என்ன கதைக்கிறதெண்டு தெரியயில்லயெண்டு சொன்னாலும். அவன்தான் இவ்வளவு நேரம் கதைச்சுக் கொண்டிருக்கிறான்.

"டேய் மூசேவி எப்பிடிடா இருக்கிறாய் ? வாவனடா லண்டனுக்கு. உன்னப் பார்க்கவேணும் போலயிருக்கடா. உன்னப் புடிச்சுக் கடிக்கவேணும் போலயிருக்கடா. " உண்மையாக அவன் கடிச்சுத் திண்ட ஒரு உணர்வோடதான் சொன்னான்.

கனக்க நேரந்தான் இண்டைக்கு அவனோட கதைச்சுப் போட்டன். அவனோட கதைக்கிறதுக்கெண்டே நூறு குரோணர் சில்லறையாக்கிக் கொண்டு வந்தனான். ஏற்கனவே சில்லறையா என்னட்ட கிடந்தது.

எல்லாம் முடியிற வரை கதைச்சிருக்கிருக்கிறன். அதவிட பின்னேரம் ஆறு மணிக்குப் பிறகு ரெலிபோன் பூத்தில மெல்லமாத்தான் காசு ஓடும்.

கனநேரந்தான் சோம்சோட கதைச்சுப்போட்டன். சோமகந்தரம் எண்ட அவன்ர பேர சோம்ஸ் எண்டுதான் நாங்க சொல்லுறது.

ஏதோ பெரிய சுமை இறங்கின மாதிரிக் கிடக்கு. வாசுகியும் கொஞ்ச நேரம் என்னோட கதைச்சது. சோம்ஸ் வாசுகியத்தான் கட்டியிருக்கிறான். யூனிவசிட்டியில படிக்கிறபோதே சோம்சும், வாசுகியும் காதலிச்சதுகள். சரியான பிரச்சனைக்குள்ளதான் ரெண்டு பேரும் லவ் பண்ணினதுகள். வாசுகியட அப்பருக்குத்தான் விருப்பமில்ல. ஆனா வாசுகி சோம்சோட எந்த தொடர்பும் இல்லாத மாதிரிக் காட்டிக் கொள்ளும். கம்பசுக்குள்ள மணித்தியாலக் கணக்கிலயிருந்து சள்ளடிப்பினம். அதவிட இரவில வாசுகி வீட்ட போய் பின்பக்கச் சின்ன கேற்றடியில இருட்டுக்குள்ள ரெண்டு பேரும் நிண்டு கதைப்பினம். நாங்க கொஞ்சந் தூரத்தில தள்ளி நிண்டு ஆராவது வருகினமாண்டு சென்றி பாப்பம். ஒரே த்றில்லிங்கா இருக்கும். வாசுகி ஏதாவது சாப்பாடு வீட்டில களவெடுத்து அதுக்குள்ள கடிதமும் வச்சுக் குடுத்து விடும் சோம்ஸ்சட்ட. றூமுக்குப் போனபிறகு அவர் கடிதத்த ரசிச்சு வாசிக்கிறதில மினக்கடுவர். சாப்பாட்ட நாங்க அடிச்சு முடிச்சிடுவம்.

எங்களுக்கு பெரிய சந்தேகம் என்னண்டால், ஒவ்வொருநாளும் கம்பசுக்குள்ள சந்திச்சு கதைக்கினம், இரவில கேற்றடியில களவாக் கதைக்கினம். பிறகென்ன கடிதத்தில எழுதவேண்டிக்கிடக்கு? அப்பிடி என்னத்தத்தான் எழுதித் தள்ளுகினம். ஏதோ.. எங்களுக்கு ஒவ்வொரு நாளும் மாம்பழம், கொய்யாப்பழம், நண்டுக்கறி, பிட்டு எண்டு விதவிதமாக தின்னுறதுக்கு கிடைக்குதே, அது போதும் எண்டு எதையுமே சோமஸ்சட்ட கிளறிக் கேக்கிறதில்ல. எது எப்பிடியோ இப்ப அதுகள் ரெண்டும் கலியாணம் கட்டிற்றுதுகள் எண்டு கேட்டபிறகு சரியான சந்தோசமாத்தான் கிடக்குது.



சோம்ஸ் வாசுகியக் கட்டினது, ரெண்டு பேரும் லண்டனுக்கு வந்தது, ஒரு ஆம்பிளப் பிள்ள இருக்கிறது இதெல்லாம் எனக்கு இண்டைக்குத்தான் தெரிஞ்சது.

இந்த ஏழு வருசத்துக்குள்ள எவ்வளவு விசயம் நடந்து போச்சு. இந்த மாற்றங்களெல்லாம் எனக்குத் தெரியாமல் போற அளவுக்கு இந்த சனத்த விட்டு என்னால எப்பிடித்தான் அந்நியப்பட்டிருக்க முடிஞ்சது ?

எல்லாம் இப்ப நடந்தது போல கிடக்கு. முணு குமர் சீதனத்த (என்ர ஊர் கணக்குப்படி) ஏஜென்சிக்கு குடுத்துத் தலைமாத்தி நோர்வேக்கு வாறதுக்கும் முதல், கரையூர் எஞ்சின் போட்டில ரெண்டாயிரம் குடுத்து ராமேஸ்வரம் வந்தன், உதுக்கும் முதல் , இயக்கத்தில வேலை செய்ய வெளிக்கிட்டதுக்கும் முந்தி சோம்ஸ். குணாளன். மணி. கிருபா. நான் இவ்வளவு பேரும் செய்து திரிஞ்ச அட்டகாசங்கள் இப்ப நடந்தது போலத்தான் கிடக்கு. ஆனா இவ்வளவும் ஒரு பிள்ளை பிறந்து ஆறு வயசில பள்ளியில சேர்ந்து பெயில் விடாமல் ஏழாம், எட்டாம் வகுப்புப் படிக்கிற காலமளவு ஓடிப் போச்சு

உண்மையில பகுமையான காலந்தானது. இவங்களோட திரிஞ்ச அந்தக் காலத்தையும் அந்தச் சோக்கான வாழ்க்கையையும் பற்றி எழுதவேணுமெண்டு நிறயத்தரம் முயற்சி செய்து பார்த்தன். ஆனால் முடியேல்ல. முடியேல்ல எண்டால். பொறுமையில்ல. அவ்வளவையும் எழுதிறதாயிருந்தால் ஒரு பென்னம் பெரிய நாவலா வரும். அந்தளவுக்கு பொறுமையில்ல எனக்கு. அதயெல்லாம் ஒரு இடத்தில குந்தியிருந்து எழுதிற அளவுக்கு சகிப்புத் தன்மையும் பொறுமையும் இருந்திருந்தா, இவங்கட தொடர்புகள விட்டிட்டு இருந்திருக்க மாட்டனே...?

தனிய இருந்தா நிறய எழுதலாம், வாசிக்கலாம் எண்டு ஒரு காலத்தில எனக்கிருந்த தன்ம போய், தனிமை எண்டிறது என்னச் சுத்த சோம்பேறித்தனம் எண்டு சொல்லிறத விட இப்பல்லாம் மண்டேக்க நிறக் குறுக்கீடு, அல்லட சீரில்லாத நிலம எண்டுதான் சொல்லவேணும்.

எழுத வேணுமெண்டு நினைச்சுக் குந்தினா நெஞ்சுக்குள்ள ஏதோ பாரமா, அந்தரத்தில தொங்கிக் கொண்டிருக்கிறமாதிரி ஒரு உணர்வு.
இப்படியான ஒரு நிலைய எழுதிற எழுத்து நான் சொல்லவந்த விசயத்த, முழுமையாச் சொல்லுறமாதிரி அமையுமா எண்ட சந்தேகங்கள் கூட வந்திடும்.
குழப்பிப் போட்டனோ எண்டிற கேள்விகள் கூட எனக்குள்ள எழும்பும். எண்டாலும் இன்னும் குழம்பிப் போகேல்ல, விரக்தியடயேல்ல எண்டு சமாதானஞ் சொல்லித் திருப்திப்பட்டிடுவன்.

சோம்ஸ்சோட இண்டைக்குக் கதைச்ச பிறகு ஏதோ மூச்சுத் திணறல்லேந்து விடுபட்ட மாதிரி .:பீலிங்ஸ்.

குணாளன் கலியாணங் கட்டிற்றானாம். மனுசியோட கனடாவிலயாம். மணியும் கனடாவிலயாம் பெட்டையோடதான் இருக்கிறானாம்.

கலியாணம் கட்டிற்றானா எண்டிறது தெரியாது. ஆள் பூவிலங்கு முரளியட ரைப். மணி எண்டுதான் நாங்க கூப்பிடுறது. ஆனா அது பேர் சரியில்லையெண்டு அவன்ர பெட்டை மாறன் எண்டு வச்சாவாம். அப்படித்தான் அவவும் கூப்பிடுவா. ஆனால் அவவுக்கு முன்னாலேயே நாங்க வேணுமெண்டு, கொழுவுறதுக்காக மணி எண்டுதான் கூப்பிடுவம். அவவுக்கு பேயேத்தம் ஏறும்.

கிருபாதான் பாவம். இன்னும் கல்முனையிலேயே இருக்கிறான். சுகமில்லாத அம்மாவ விட்டிட்டு வெளியில வர அவனுக்கு விருப்பமில்ல.

நாளைக்கு கனடாவுக்கு ரிங் பண்ணி குணாளன், மணியோட கதைக்க வேணும் போலயிருக்கு.

கையில இருந்த காசும் முடிஞ்சு போச்சு. கனடாவுக்கு கதைக்கிறதெண்டால் கனகாசு வேணும். Bank இலயும் ஒண்டுமில்ல. இண்டைக்கு அடிச்சுப் பாத்தன். பதினேழு குரோணர்தான் கிடக்கு. (இது பரவாயில்ல. வழமையா மைனசிலதான் கிடக்கிறது.) Bank இல நாளைக்கு அந்த தடிச்ச கிழவியட ஒரு முந்நூறு குரோணர் மைனசில கேட்டாத் தரும். நல்ல மனுசி! கனதரம் தந்திருக்கு. மற்ற சின்னப் பெட்டையொண்டிருக்கு, அது பிசாசு, தராது.
அந்தக் காலம், அந்த அருமையான வாழ்க்க திரும்ப வராதா எண்ட ஏக்கம் எனக்குள்ள கிடந்து அடிச்சுக் கொண்டுதானிருக்கு, கவலயின்ர நிழல் கூட அண்டாத அந்தச் சந்தோசமான வாழ்க்க என்ன விட்டுத் தூரப்போச்சுதெண்டது எவ்வளவு உண்மையோ, அதேயளவு உண்ம அந்த வாழ்க்க திரும்ப எனக்குக் கிடைக்காது எண்டதும். ஆனால் நான் சாகிற வர இந்த இழப்புக்கள் பற்றின ஏக்கம் என்ர ஆத்மாவ அரிச்சுக் கொண்டுதான் இருக்கும்.

தமயந்தி

இப்ப கூட அந்தச் சந்தோசமான வாழ்க்கய எழுதலாமெண்டு நினைக்கிறன். ஆனா ஒரு பயம். அத எழுத்தில கொண்டு வந்தனெண்டால் சிலவேளையில அந்தச் சம்பவங்களின்ர சுவையான உயிர்க்கலங்கள் சிதைஞ்சு போடுமோ எண்ட அச்சம் என்னப் பயமுறுத்துது. → பக்கம் 24

நினைவுத் தொடரில்

நீள் தொலைவில்
வெண்பனிப் போர்வையுடன்
முடிவிலா மலைத்தொடர்கள்.

கோடையின் வருகைக்கு
கோலமிடும் பூக்கள்
நீண்ட இரவைத்
துரத்தி நின்று
வேடிக்கை பார்க்கும்
நள்ளிரவு சூரியன்.

ஆழ்கடலின்
அமைதி குலைத்து
ஆர்வத்தோடு
கரைதேடும்
அலைகள் ,
கரை மணலோடு
கதை பேசும் அழகை
மறைந்திருந்தே
செவிமடுக்கும் செம்பரிதி.

செம்பந்தை
திசை தெரியாது
உருட்டிச் சிறைசெய்து
ஆட்சி பிடிக்கும்
இரவு.

பச்சை மஞ்சள்
வண்ணங்களிழந்து
நண்பனின் பிரிவுக்காய்
துக்கம் காக்கும்
தாவர இராச்சியம்.

இரவின் பிடியில்
இலவசமாய் தரைதொடும்
வெண் பனித்துகள்கள்
வெள்ளிகளைத் துணைக்கழைத்து
வீதி உலா வரும் வெண்ணிலவு.

இவையனைத்தும்
ஒருங்கே கொண்ட
கரையோரத் தீவுகளைப்
பிரிய நேர்ந்தது.

இயற்கை இழந்த
இயந்திரம் விழுங்கிய
தலை நகரில், எனது
நாட்களை இழக்க
நிர்ப்பந்திக்கப்பட்டேன்

எதற்காக .....?

ஃஃஃஃஃஃஃ **பாமினி**

சுதந்திரத்தின் இறுதி நாள் !

மனித உரிமை ஜனநாயகம் என்றெல்லாம் ஓலமிடும் அமெரிக்காவின் லட்சணத்தை சர்வதேசமன்னிப்புச்சபை அம்பலப்படுத்துகிறது.

பழங்குடியினரான செவ்விந்தியர்கள்மீது 500 வருடகாலமாக தொடர்ச்சியாக திட்டமிட்ட வன்முறைகள் கொலைகள் காட்டுமிராண்டித்தனமாக நடாத்தப்பட்டு வருவதாக மன்னிப்புச்சபை கண்டிக்கிறது.

செவ்விந்தியர்களின் சொந்தப் பூமியில் கொலம்பஸ் கால்பதித்து 92 அக்டோபர் 12ம் திகதி 500 வருடங்கள் ! இந்தத் தினத்தை அமெரிக்க கண்டம் முழுவதிலுமுள்ள செவ்விந்தியர்கள் "சுதந்திரத்தின் இறுதி நாள்" என்று பிரகடனம் செய்து ஆர்ப்பாட்ட எதிர்ப்பு ஊர்வலங்களில் இறங்கியுள்ளனர்.

அதேவேளை.... அமெரிக்காவில் இன்னும் உயிர்வாழும் மூன்று கோடி செவ்விந்தியர்களுக்கு எதிரான அமெரிக்காவின் திட்டமிட்ட வன்முறைகள் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன.

85 இல் எத்தியோப்பியா
92 இல் சோமாலியா

o சி. அருதன்

80 களின் நடுப்பகுதியில் எத்தியோப்பியா !
92 இல் சோமாலியா !

இதன் தொடர்ச்சிப் போக்கில் சூடான் மாலாலி, சம்பியா, மொசாம்பிக். . . . என்று நீளுமா யின் மொத்தத்தில் 2000ஆம் ஆண்டில் இந்த ஆபிரிக்க நாடுகளில் கறுப்பின மக்கள் யாருமே இல்லாமல் போய்விடுவார்களோ என்று அச்சம் கொள்ள வேண்டியிறுக்கிறது. அந்தளவு க்கு இந்நாடுகளில் இயற்கையின் வரட்சியும் ஆயுத வன்முறைகளும் – யுத்தங்களும் – தலை விரித்தாடுகிறது.

இன்று மேற்குலக தொலைக் காட்சிமுதல் பத்திரிகைகள் ஈராக சோமாலியாவை ஆளும் பட்டினிப்பேய் பற்ற "வருந்துகின்றன", மிகவும் "கரிசனையோடு" மேற்கு அரசுகளின் அவசர உதவிகள் கொண்டு செல்லப்படுகின்றன. ஐ.நா. வும் அமெரிக்காவும் ஒருபடி மேலே போய் உணவுகளை பங்கீடுசெய்யவும் அமைதிகாக்கவும் "நீலத் தொப்பி" அணிந்தவர்களும், ஆயுதம் தரித்தவர்களுமாக படைகளை அனுப்பியிருக்கின்றன.

இத்தனை நிலைமைகளைக் கடந்தும் இன்று நாளுக்கு 50-100 பேர் வரை சோமாலியாவில் பட்டினியால் செத்துக் கொண்டுதான் இருக்கின்றனர். இதுவரை ஆயிரக்கணக்கில் பட்டினிப் பேய்க்கு இரையாகிப் போய்விட்டனர். Baidoba சோமாலியாவில் பட்டினிப் பேயின் கடுமையான தாக்குதலுக்கு உட்பட்ட பிரதேசம். சூரியன் நெருப்புக் கொட்ட மண் முழுவதும் கடும் சிவப்பாகி ளரிகிறது. கொடிய வரட்சி. இந்தப் பகுதி அரசுக்கெதிரான கிளர்ச்சியாளர்களின் "சோமாலியா விடுதலை இராணுவத்தின்" கட்டுப்பாட்டில் இருக்கிறது. இங்கு நாளுக்கு 5000 பேர் இறப்பதாக செய்திகள் வேறு.

நாட்டின் 80வீதம் குழந்தைகள் பட்டினியாலும், தொற்று நோய்களாலும் மரணப்படுக்கையில் வீழ்ந்து கிடக்கின்றன. அண்டை நாடுகளுக்கு தப்பியவர்களும் பட்டினி பொறுக்க இயலாமல் கடலில் குதித்திவர்களுமாக "சோமாலியா கறுப்பின மக்கள்" வெள்ளைத்தேசங்களில் சுவார்சியமான செய்திகள் ஆகிவிட்டனர்.

"இங்கே செத்துக் கொண்டிருப்பவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று எவருக்குமே தெரியாது" என்று செஞ்சிலுவைச்சங்க அதிகாரி ஒருவர் கைவிரிக்கின்றார். இம் மக்களுக்கான உதவி உடனடியாக பன்மடங்குப் படுத்தப்பட வேண்டும் என பரவலாக எல்லாப் பத்திரிகைகளும் எழுதுகின்றன.

பிரான்ச் அரசு சோமாலியா மக்களுக்கு உதவும் பொருட்டு பாடசாலை மாணவர்கள் எல்லோரையும் ஒரு கிலோ அரிசி கொண்டு வரும்படி அறிவித்திருந்தது.

இன்று ஆபிரிக்காவில் பெருகிவரும் வரட்சிக்கும் பட்டினிப் பேயின் ஆட்சிக்கும் ஓர் உதாரணம் சோமாலியா. நேற்று எத்தியோப்பியா அதற்கு முன்பு biatra நாளை. . . . ?

இன்றைய உலகில் வருடத்துக்கு 2கோடி மக்கள் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கின்றனர். 50கோடி மக்கள் இதன் பிடிக்குள் சிக்கித்தவிக்கின்றனர். அதிலும் ஆபிரிக்காவில் மட்டும் 4கோடி மக்கள் இன்றோ நாளையோ செத்துமடியும் நிலையில். . .

ஆனால் அமெரிக்காவின் பார்வையிலோ இன்றைய உலக அமைப்புத்தானாம் ஒழுங்காக இருக்கிறது. ஆயினும் இது உள்வீட்டிலேயே கேள்வியாகிவிட்டது. ஒவ்வொரு 10வது அமெரிக்க பிரஜையும் வறுமைக்கோட்டின் கீழ் பட்டினியால்

அல்லற்படுவதாக Brot für welt அமைப்பு சொல்கிறது.

2000 ஆண்டில் உலக மக்கள் தொகையில் பாதிக்கும் மேலானோர் சமூக நெருக்கடிக்குள் பேராட்டங்களுக்குள் மூழ்கிவிடுவர். அதற்கான சூழல்கள் இன்றே கருக்கொள்ளத் தொடங்கி விட்டன என்று சர்வதேச அரசியல் ஆய்வாளர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார். இதுதான் உண்மையும்கூட.

பெருகிவரும் சனத்தொகை, இராணுவ சர்வாதிகார ஆட்சி, கிளர்ச்சிக் குழுக்களின் ஆயுத வன்முறை, இயற்கையின் வஞ்சகம் போன்ற காரணிகள்தான் 3ம் உலக நாடுகளின் பட்டினிக்கான காரணம் என்கிறது மேற்குலக அரசுகள். அதிலும் ஆபிரிக்காவில் பெருகி வரும் பட்டினிப்பேய்க்கான முக்கிய காரணம், இந்நாடுகளின் ஒழுங்கற்ற அரசியல் பொருளாதார திட்டங்களும் யுத்தங்களும் என்று மேற்குலகம் அழுது வடிகிறது. ஆனால் உண்மைக் காரணம் என்னவெனில் ஒருபுறம்; கம்யூனிச பூச்சாண்டிகாட்டி 80வருடகாலமாக அமெரிக்கா ஆடிய நாடகத்தில் ஆபிரிக்கா கண்டத்தில் சோமாலியா இராணுவ முக்கியத்து வம்வாய்ந்த புள்ளியாக இருந்திருக்கிறது. ஆபிரிக்க நாடுகளுக்கு 20மில்லியடன் பெறுமதியான ஆயுதங்களை விற்பனை செய்தது. இதில் பெரும்பகுதி சோமாலியாவுக்கு. அத்தோடு இத்தாலி ஜேர்மன் போன்ற நாடுகள் கொட்டியவை மேலதிகமாக உண்டு.

மறுபுறம் உலகவங்கி சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றின் பொருளாதார திட்டங்களால் – வாங்குதலும், ஏற்றுமதி செயிதலும், என்றதத்துவத்தில் – இவ் ஆபிரிக்க நாடு களின் நிலவளங்களும் சூசடிக்கப்பட்டன / படுகின்றன.

உதாரணத்துக்கு; தெற்கு ஆபிரிக்க நாடுகளின் "உணவுக் களஞ்சியம்" என்று சொல்லப்பட்ட சிம்பாபே முன்பு போதுமான அளவு நீர் வளத்தை / மழையைக் கொண்டிருந்தது. உலகவங்கி தலையிட்ட பின்பு மழையே இல்லாத வரண்ட நாடுகளின் பட்டியலுக்குள் தள்ளப்பட்டு விட்டது.

இந்த உலகவங்கியின் திட்டத்தின் கீழ்த்தான் இந்தியாவிலும் எமது தேசத்திலும் பல புதிய நெல் வகைகள், மரங்கள், – இப்பிலிப்பி போன்றவை – உரவகைகள் அறிமுகப்படுத்தப் பட்டன. இவை மேற்குலக நாடுகளிலும் அமெரிக்காவிலும்கூட தடை செய்யப்பட்டனவாக இருப்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய உலகவங்கியின் திட்டங்கள் காலப்போக்கில் மண்ணின் இயற்கை நீர்வளத்தை உறிஞ்சி எடுத்து வரட்சியாக்கிவிடுகிறது. இங்கே குழாய் கிணறுத்திட்டமும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். அடிநில நீர்ஊற்றுப்படுக்கையை உறிஞ்சி எடுக்கும் ஆபத்தான ஒன்றுதான் குழாய்க்கிணறு.

மொசாம்பிக், தென்மடகங்கார் மாலாவி, சிம்பாபே, பொச்வான, தெற்கு அங்கோலா, சுவாட்சிலார் போன்ற தென்பகுதி ஆபிரிக்க நாடுகளும் சூடான் சோமலியாவும் வரட்சியிற் தாக்குதலுக்கும் பட்டினிப்பேயின் ஆட்சிக்கும் இலக்காகின்றன.

சோமாலியாவில் ஒரு தசாப்தத்துக்கும் மேலாக நீடித்து வந்த யுத்தத்தோடு வரட்சியும் சேந்து பட்டினிப்பேயை ஆட்சிக்கு கொண்டுவந்தது.

60களில் இங்கிலாந்திடமிருந்தும் இத்தாலி யிடமிருந்தும் கொலனி ஆதிக்க பிடியில் இருந்து சுதந்திரம் என்னும் பெயரில் சோமாலியா ஒரே ஆட்சியின் கொண்டுவரப்பட்டது.

70களின் ஆரம்பத்தில் முன்னைய சோவியத் யூனியனின் உதவியுடன் ஜெனரல் சியாட் Barre ஆட்சிகவிழ்ப்பு நிகழ்ந்தது. சோமாலியா "சோசலி" முகமூடியில் இராணுவமயப்படத் தொடங்கியது. இராணுவ அரசு சோவியத்யூனியன் முகாமுக்குள் சேர எங்கும் நிகழ்வதுபோல ஜனநாயகத்தின் காவலன் எதிர்க்கிளர்ச்சிக்கு ஆயுதங்களை வாரி வழங்கவும் நாடு முழுவதும் ஆயுதம் குவிந்தது.

பனிப்போர் முடிந்ததோடு அமெரிக்கா மேற்கு ஐரோப்பாவுடன் நெருக்கமாகி தன்பார்வையை முன்னாள் சோவியத்யூனியனின் கூடியரசுகளிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் செலுத்த தொடங்கியது. ஆபிரிக்க வளர்ப்பு பிள்ளைகள்

உழைப்பின்

உயிர்ப்பு

பாலமோகன் ooo

அவலமாய் விழும்
மழைநீர்த் துளியும்
துகள்களாய்ச் சிதறி
மறைந்தே போயின.
ஆனால்
வெள்ளம் என
சேதி வந்தது
மறுநாள்
- - - -
எழுகிறேன் !
உடைந்த என் கனவுகளை
நம்பிக்கைகளால் ஒட்டிக்கொண்டு
எழுகிறேன்!!

அம்போ என கைகழுவப்பட்டனர்.

இன்று சோமாலியாவில் 1 80 000 பேர்வரை ஆயுதபாணிகளாக உள்ளனர். அரசு ஒன்று இருப்பதாக தெரியவில்லை அந்தளவுக்கு கிளர்ச்சிக் குழுக்களின் வன்முறைகள் மலிவாகிவிட்டன. பட்டினிப்பேய் இவர்களின் வேலையை இலகுபடுத்தி விடுகிறது.

இவ்வருட ஆரம்பத்தில் ஆபிரிக்காவில் குறிப்பாக சோமாலியாவில் மூண்டுவரும் பட்டினித் தீபற்றி ஐ.நா செயலாளர் சர்வதேச கவனத்திற்கு கொண்டு வந்தார். அதிலும் மொசாம்பிக்கில் மட்டும் 15 இலட்சம் மக்கள் பட்டினியால் தவிப்பதாக 91இலே உலகுக்கு செய்தி வந்தது. இந்நாடுகளின் மண்ணில் கடைசியாய ஒரு நீர்த்துளி 91அக்டோபரில் தான் வீழ்ந்தது.

வருடநடுப்பகுதியில் சோமாலியாவில் நாள் ஒன்றுக்கு 50 - 100 - பட்டினியால் - இறந்து கொண்டிருக்கும் போது ஜேர்மனியில் சந்தித்த பணக்கார நாடுகளின் - கைத்தொழில் வளர்ச்சியடைந்த- தலைவர்கள் யூகோசிலாவிய யுத்தத்தை எப்படி முடிவுக்கு கொண்டுவரலாம், பங்குபோட்டுக் கொள்ளலாம் என்று ஆலோசித்தனர். ஐ. நா.வின் செயலாளரோ அவசரமாக இவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். "பட்டினியால் சாகும் சோமாலியாவின் பக்கம் உங்கள் பார்வையை கொஞ்சம் திருப்புங்கள் என்று.

ஆயினும் இவர்களின் கவனம் பல்கனில் நிகழும் "பணக்கார யுத்தத்தின்" பக்கமாகவே இருந்தது. சோவியத்தின் சிதைவு கோர்ப்பியின் வீழ்ச்சி போன்றவற்றில் காட்டிய ஆர்வம் இந்த ஆபிரிக்க மக்களின் பட்டினிச் சாவின் மீது காட்டவில்லை. காரணம்: தோலின் நிறமா? அன்றி இந்த மக்களிடமிருந்து இனி என்னதான்- சுரண்ட- கிடைக்கப் போகின்றது என்றோ?

சோமாலியாவிலும் சரி மற்றும் ஆபிரிக்க நாடுகளிலும் சரி இந்தளவுக்கு வரட்சி பெருக்கெடுப்பதற்கான காரணம் தொடரும் யுத்தம், உலக வங்கியின் திட்டம், இயற்கையின் வஞ்சகம் போன்றவை என்று முன்னமே தெரிந்து கொண்டோம். இப்போ இயற்கை செய்யும் வஞ்சகம் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும் தென்பகுதி ஆபிரிக்காவுக்கு நூற்றாண்டு வரட்சி வரலாறு உண்டு. ஒவ்வொரு 5 வருடங்களுக்கும் இங்கே கால நிலையில் தாக்கமான மாற்றங்கள் ஏற்படுகின்றது. அத்தோடு ஒவ்வொரு நாட்டின் புவிசார் அமைப்பும் இயற்கை அனைத்தங்களின் அளவுகளை தீர்மானிக்கும் காரணியாக இருக்கிறது.

விஞ்ஞானம் வளர்ச்சி அடைந்த உலகில் நிதி இருந்தால் இயற்கையின் வஞ்சகத்தை எதிர்த்து நிற்கலாம். வெறும் பாறைகள் கொண்ட Isrel இல் தோடைகள் முளைத்து பழுக்கின்றது என்றால் ஆபிரிக்க நாடுகளில் மட்டும் அல்ல உலகின் ஏனைய பகுதிகளிலும் கூட ஏன் இயற்கையின் வஞ்சகத்தை எதிர்த்து நிற்கமுடியாது? ஆனால் மக்கள் நலனில் அக்கறை இல்லாத அரசுகளிற்கு தேசத்தின் மீது அக்கறை எங்கே?

குறிப்பாக இந்த ஆபிரிக்க நாடுகளில் பூமியின் வரட்சி வெடிக்கப் போகிறதென்று விஞ்ஞான வளர்ச்சியடைந்த அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்கனவே தெரிய வந்துவிடும். ஆயினும் இவர்கள் மௌனிகளாகவே இருப்பர். கடைசியில் நிலமை படுமோசமாகும் போது விழுந்தடித்து ஓடுவர். அன்று 85இல் எதியோப்பியாவில் நிகழ்ந்தவை இதற்கு ஆதாரம். இன்று சோமாலியா. **நாளை....?**

எம் மண்ணில் அவலம்

எம் மண்ணில்
பலவித அவலங்கள்
அங்கோரிடத்தில்
இப்போது தாய்மார்கள்
போற்றி வணங்குவது
நாயைத்தானாம் ! ஏனெனில்
தம் பிள்ளைகளின் உயிரை
காப்பாற்றுவதினால் !

தர்ம சீலன்

கண் கொடுப்பார் யாரோ . . . ?

சூடானின் 7இலட்சத்து 50ஆயிரம் மக்கள் கண்பார்வை அற்று உள்ளனர். இதில் குழந்தை கள்தான் அதிகமாக பார்வை இழந்துள்ளனர். சின்னம்மை நோயினால் தாக்கப்பட்டவர்களுக்கே இந்தப்பரிதாப நிலை. இவர்களுக்கு சிகிச்சை அளிக்கவென அரசு 90இல் ஒரு கண் வங்கி ஒன்றையும் ஆசுப்பத்திரி ஒன்றையும் தொடக்கியது. ஆயினும் இன்றுவரை இந்தப் பார்வை அற்றவர்களுக்கு சிகிச்சை செய்ய சூடான் அரசுக்கு யாரும் உதவவில்லை என்பதுதான் உண்மை. மேற்குலகிடம் அதிக விலை கொடுத்து கண்களை வாங்கும் அளவிற்கு அரசிடம் வசதியில்லை. இலங்கா அரசிடம் மட்டுமே சூடான் அரசு கண்களைக் கேட்டுள்ளதாம். . . .

சுவிஸிலிருந்து பத்திரிகைகள் ஸ் அரசு

(பேர்ண்)

இப்போது பரபரப்பாக பேசப்படும் வி தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவது சம்பந்தமான விவகாரம் மிழ் ஏட்டின் நிருபர்கள் சுவிஸின் அகதிகளுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச் க நலன்புரி சங்கங்களின் தலைவர்கள்

கல்யாண திரணகம உடன்

ஒரு நேர்காணல் !

மனித உரிமைகளுக்கும் அதன் உருவாக்கத்திற்குமான சட்டத்தரணிகள் சங்கத்தின் (Lawyers For Human Rights And Developement) சார்பில் இலங்கையில் இருந்து, ஒக்ரோபர் மாத நடுப்பகுதியில் சுவிஸ் வந்திருந்த கல்யாண திரணகம அவர்களை 16.10.92 அன்று சந்தித்து உரையாடினோம். உரையாடலின் போது இலங்கையில் மனித உரிமை மீறல்கள் சார்பாக அவரிடமிருந்து பெற்ற சாரங்களைக் கீழே நோக்குவோம்

ஆ – ர் குழு

? : உங்கள் சுவிஸ் பயணம் பற்றி சுருக்கமாகக் கூறுவீர்களா ?

O : ஆம் ! நான் சுவிசுக்கு மட்டும் வரவில்லை. ஜேர்மன் டென்மார்க் போன்ற நாடுகளிலும் இருக்கின்ற மனித உரிமை அமைப்புக்களிடம் இலங்கையில் நிகழும் மனித உரிமை மீறல்கள் பற்றி LHRD சார்பில் தெரியப்படுத்த வந்துள்ளேன். சுவிற்சலாந்தில் குறிப்பாக ஐ.நா.சபையின் மனித உரிமை நிறுவனத்துடன் சில பேச்சுக்களை நடத்தியுள்ளேன்.

? : உங்கள் மனித உரிமைகளுக்கும் அதன் உருவாக்கத்திற்குமான சட்டத்தரணிகள் சங்கத்தைப் போன்று மனித உரிமை மீறல்களுக்கு எதிராக வேறு அமைப்புக்களும் இலங்கையில் உள்ளதாக அறிகிறோம். இவை பற்றி அறியத் தர முடியுமா?

O : எமது அமைப்பைப் பொறுத்த வரையில் இது, 1986ல் உருவாக்கப்பட்டது. சகல அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களையும் சகல இனத்தை, மதத்தை சேர்ந்தவர்களையும் உறுப்பினர்களாக கொண்ட அரசியல் சார்பற்ற சுயாதீனமான ஒரு அமைப்பு. உதாரணத்திற்கு இதன் உபதலைவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்தவர், பொருளாளர் ஒரு முஸ்லிம். பத்திரிகைகளுக்கு அறிக்கைகள் விடுவதில் காட்டும் அக்கறையை விட செயற்பாடுகளிலேயே அதிக கவனம் செலுத்தி வருகிறோம்.

எமது அமைப்புடன் சேர்த்து இன்றும், சிவில் உரிமைகள் அமைப்பு (Civil Rights Movement), ஜனநாயக உரிமைகளுக்கான பாதுகாப்பு அமைப்பு (Movement For Defence of Democratic Rights), இனங்களுக்கிடையிலான சமாதானத்திற்கும் நீதிக்குமான அமைப்பு (MIRJE) ஆகிய வெவ்வேறு அமைப்புக்கள் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக செயற்பட்டு வருகின்றன.

- ! இனவாத எதிர்ப்பு
- ! தமிழ் மக்கள் மீதான அரசியல் நடவடிக்கைள் தாக்குதல்களுக்கு எதிர்ப்பு
- ! தேசிய இனப் பிரச்சனையில் சுயநிர்ணய உரிமையைக் கோருதல்

ஆகிய கொள்கைகளில் இவ்வமைப்புகள் அனைத்தும் ஒருமைப்பாடு உடையவர்கள். இவற்றின் தமிழ் சிங்கள வெளியீடுகளாக 'மக்கள் உரிமைகள்', 'சக்தி' (பெண்கள் வெளியீடு), யுக்தியஆகிய பத்திரிகைகள் வெளிவருகின்றன. 'யுக்திய' (இதன் தோழமைப் பத்திரிகை சரிநிகர்) ஏழாயிரம் தொடக்கம் பதினேழாயிரம் பிரதிகள் வரை சிங்களத்தில் மட்டும் விற்பனையாகிறது. இன்று மக்களுக்கு அரச எதிர்ப்பு அவசியமாகப்படுவதினால் அரச எதிர்ப்பு பத்திரிகைகள் வாசிப்பதில் ஆவலும் அதிகரித்துள்ளது.

இன்னும் 'ராவைய' (எதிரொலி) – (இதன் ஆசிரியர் விக்ரர் இவான். 1971 ஜே.வி.பி கிளர்ச்சியுடன் தொடர்புற்றுஇருந்தவர்.),
லக்திவா – (இதுவும் முன்பு ஜே.வி.பி சார்பாக இருந்தவர்களினால் வெளியிடப்படுகிறது.), ஆகியன
தமிழ் மக்களின் பிரச்சனைகளை நியாயமான அளவிற்கு சிங்களத்தில் எழுதிவருவதுடன் சிங்கள மக்கள் மத்தியில்

செல்வாக்குப் பெற்ற பத்திரிகைகளாகவும் காணப்படுகின்றன. 'லக்திவா' பத்திரிகை ராஜினி திரணகமவின் 'முறிந்த பனைமரம் ' (Broken Palmyrah) நூலை மொழி பெயர்த்து பிரசுரித்து வருகிறது.

'மக்கள் உரிமை' , சக்தி, யுக்திய ஆகிய மூன்று பத்திரிகைகளினதும் ஆசிரியர்கள் "பாராளமன்றக் சலுகைக் குழு" (arliament Previlage Committee) வின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். உயர் நீதிமன்றத்திற்கு மேலான அதிகாரங்களைக் கொண்டு, தண்டனை வழங்கும் தகுதி இந்த பாரளுமன்ற சலுகைக் குழுவிற்கு உண்டு.

இன்னும் வடபகுதியில் காணப்படும் அமைப்புக்களாக Home For Human Rights , யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் மனித உரிமைச் சங்கம் ஆகியனவும் உண்டு.

? : இவ் வடபகுதி அமைப்புக்களுக்கும் உங்களுக்கும் தொடர்புண்டா ?

o : நிச்சயமாக! H.H.R அமைப்புடன் இருந்த கந்தசாமி (Tamil Information Centre) கொலை செய்யப்பட்டபின் இவ் அமைப்பின் மூலகர்த்தாவான சேவியர் கனடா சென்றுவிட்டார்.
(இவர் இன்று கனடாவில் செயற்பட்டு வருகிறார்). அதன் பின் அதன் செயற்பாடுகளை நாமே பொறுப்பேற்று நடாத்துகிறோம். மோதிலால் நேரு போன்ற ஒரு சிலர் தவிர ஏனைய தமிழ் சட்டத்தரணிகள் பலரும் பணத்தைக் குறியாக வைப்பதினால் அரசினால் கைதாகும் இளைஞர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளுக்கு ஆஜராவது இல்லை.

யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் மனித உரிமைச் சங்கத்திற்கும் எமக்கும் தொடர்புண்டு. அவர்களில் பலர் இப்போ தலைமறைவாக உள்ளனர்.

? : அண்மைக்காலமாக இலங்கையில் காணப்படும் மனித உரிமை மீறல்கள் பற்றியும் அதற்கெதிரான உங்கள் நடவடிக்கைகள் பற்றி அறியத் தருவீர்களா ?

o : ஆம் ! அண்மைக்காலம் என்னும்போது 1988 இலிருந்து ஆரம்பிக்கிறேன். 1988 தொடக்கம் 1990 வரை ஜே.வி.பி யின் தீவிர செயற்பாடுகள் தலைவிரித்தாடிய போது ,
அரசின் செயற்பாடுகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்து தென்பகுதி ஜே.வி.பி யின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. பாடசாலைகள் ஆறு மாதங்கள் மூடப்பட்டு கிடந்தன. பல்கலைக் கழகங்கள் இரண்டரை வருடங்கள் மூடப்பட்டன. பஸ் உட்பட வாகனப் போக்குவரத்துக்கள் தடைப்பட்டன. கடைகள் கூட ஒழுங்காக திறக்கப்படவில்லை, இச் சந்தர்ப்ப த்தில் ஜே.வி.பி க்கு எதிரான அரசின் செயற்பாடுகளில் முக்கியமானது – அம்பாந்தோட்டையில் மட்டும் 40 கிலோ மீற்றர் இடைவெளியில் 242 மனித உயிர்களை சடலங்களாக்கிய பயங்கரமாகும். ஜனாதிபதி தேர்தலில் ஜே.வி.பி யின் பகிஸ்கரிப்பை தமக்குச் சாதகமாக்கிய பிரேமதாசா ஜே.வி.பி க்கு ஆதரவாகவே செயற்பட்டார். இதன் மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு, கிடைக்க வேண்டிய 96000 வாக்குகளில் 124 வாக்குகளை மட்டுமே பெற வழிசெய்யப்பட்டது.

இப் பயங்கர சூழலில் சகல மனித உரிமை அமைப்புக்களும் செயலிழந்த நேரம் ..... பல சட்டத்தரணிகள் ஜே.வி.பி யினால் கொலை செய்யப்பட்டனர். சர்வோதய சங்க சட்டத்தரணி அரசினால் கொல்லப்பட்டார். அதிகமான சிங்கள சட்டத்தரணிகள் லண்டன் சென்றனர். நாம் மட்டும் செயற்பட்டோம். பல மனித உரிமை அமைப்புக்களின் வேலைகளையும் நாமே பொறுப்பேற்றோம். அரசியல் சார்பற்ற எமது சுயாதீனமான போக்கே இதற்கு சாட்சியாகிறது.

மக்கள்மீது கைவைக்க வேண்டாம் என ஜே.வி.பி க்கு அறிவித்தோம். அதேவேளை தற்பாதுகாப்புக்காக எதிர்த் தாக்குதல் செய்யத் தயங்கக்கூடாது என கிராமப் புறங்களிலெல்லாம் மக்களுக்கு அறிவுறுத்தினோம். இன்னும் சட்ட ஆலோசனைகளையும் வழங்கினோம். ஆரம்பத்தில் எமது செயற்பாடுகளை ஜே.வி.பி தமக்கு எதிரானதாகக் கருதவில்லை. ஆனால் பிற்பகுதியில் இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவரை எனது வீட்டில் வைத்து கட்டுக் கொன்றனர். என்னையும் எனது குடும்பத்தையும் கொல்ல முயற்சித்தனர். ஆனால் நானோ மனித உரிமை மீறல்களுக்கு எதிரான எனது வேலையைத் தொடர்ந்தேன் ... தொடர்கிறேன்....

தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட சுமார் 15,000 பேரில் 7,500 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். இதில் எமது சட்டத்தரணிகள் 50 பேர் வரை செயலில் இறங்கியுள்ளனர். இச்சந்தர்ப்பத்தில் குமார் பொன்னம்பலத்தை கோடுகளில் காணவே முடியாது.

சித்திரவதைகளுக்கெதிராகவும் காணாமல்போனவர்கள் தொடர்பாகவும் பல வழக்குகளைத் தொடர்ந்துள்ளோம். சகல பகுதிகளிலும் –குறிப்பாக கண்டி, மாத்தறை, காலி, கேகாலை போன்ற இடங்களில்– தமிழ் சிங்கள மக்கள் மத்தியில் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான பொது வகுப்புக்களையும் நடாத்திச் சட்ட ஆலோசனைகளையும் கொடுத்துள்ளோம்.

மேலதிகரிகளின் சட்ட விரோத உத்தரவுகளை செயற்படுத்த நினைத்தால், சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வோம் எனக் கூறி நுவரெலியா பொலிசாருக்கு அறிவுறுத்தியதுடன், அத்தகைய செயற்பாடுகள் பற்றிய செய்திகளை, திட்டங்களை அறியத் தரும்படியும் கேட்டுக் கொண்டோம். இதனால் நுவரெலியாப் பகுதியில் பொலிசாரின் அத்துமீறல்கள் வலுவாகக் குறைக்கப்பட்டது. அதிகமான வழக்குகள் இராணுவத்திற்கும் பொலிசாருக்கும் எதிராக தாக்கல் செய்யப்பட்டதினால் பொலிசாரிடத்தில் ஒருவித அச்சமும் விழிப்பும் ஏற்பட்டிருக்கிறது.

சாக் மாநாட்டின் போது 50 பாடசாலை சிறுவர்கள் உட்பட 3000 வறியவர்கள் கொழும்பு நகரிலிருந்து பிரேமதாசாவினால் மறைக்கப்படனர். இச் சிறுவர்கள் மறைக்கப்பட்டதற்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளோம். நீதிமன்றம் கவனிக்கவில்லை. இப்போ இச் சிறுவர்களை UNICEF பொறுப்பேற்றுள்ளது. இச் சிறுவர்கள் 50 பேரும் கதிர்காமத்திற்கு அருகிலுள்ள 'மிடியகம' எனும் இடத்தில் வைக்கப்பட்டுள்ளனர். சிறுவர்கள், தொழிலாளர், விவசாயிகள் பற்றிய சட்டங்களை உரிமைகளை நீதிபதிகளே அறிந்திருக்காததினால், நீதிபதிகளுக்கும் சட்டத்தரணிகளுக்கும் UNICEF மூலம் பல வகுப்புக்களை (Seminars) நடாத்தினோம்.

'அத்த' பத்திரிகையில் அரசை இழிவுபடுத்தி வந்த கார்ட்டூனை (Cartoon) வரைந்ததற்காக கார்ட்டூன் ஓவியர் Unuss (முஸ்லிம்) அரச குண்டர்களின் அடாவடித்தனங்களை பொறுக்க முடியாமல் பொலிஸில் புகார் செய்யச் சென்றார். பின் பொலிஸிலிருந்து திரும்பிய போது அவரது கை வெட்டப்பட்டது. அரசிற்கு எதிரான அத்துலத்முதலியின் கையெழுத்து வேட்டையின்போது கோட்டைப் புகையிரத நிலையத்தில் உள்நாட்டு – வெளிநாட்டுப் பத்திரிகையாளர் அனைவரினதும் கமராக்கள் பறிக்கப்பட்டு, தாக்கப்பட்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். கடந்த ஜனவரியிலிருந்து ஆகஸ்ட்வரை யிலான காலப்பகுதியில் சுமார் 40 பத்திரிகையாளர் அரச குண்டர்களால் தாக்கப்பட்டுள்ளனர்.

சுதந்திர வர்த்தக வலயத்தில் சுமார் 2000 ஏழைப் பெண் தொழிலாளர்கள் 1250 ரூபா சம்பளத்திற்கு 26 நாள் வேலை செய்கிறார்கள். சில வேளைகளில் மேற்குலக நாடுகளில் 'ஓடர்களை' வேளைக்கு முடித்துக் கொடுப்பதற்காக 'முழுனெயஅெயசமள' நிறுவனம் 3 கட்ட வேலையை (24 மணித்தியாலம்) தொடர்ந்து செய்யும்படி வற்புறுத்தப்படுகிறார்கள். சுதந்திரவர்த்தக வலயத்தில் வேலை செய்வோருக்கு தொழிற்சங்க உரிமைகளோ அல்லது தமது பிரச்சனைகளுக்காகப் போராடும் உரிமைகளோ இல்லை. இதனால் நாமே இப் பெண்களை அணுகி சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஆலோசனைகளை வழங்குவதுடன் அவர்கள் சார்பாக தொழிற் தீர்ணைக்களத்திற்கு எதிராக நாமே வழக்குத் தொடர்ந்துள்ளோம்.

(மிகுதி அடுத்த இதழில்)

நூல் அறிமுகம் – விமர்சனம்

இரு கவிதைத் தொகுதிகள்

நிருபதாம்
நூற்றாண்டு

ஈழத்துப்
புறநானூறு

இரா. றஜீன்குமார்

தாய் மண்ணைப் பிரிந்து, புலம்பெயர்ந்து நெடுந்தூரம் வந்திருந்த போதும், எமது உள்ளங்கள் இன்னும் தாய் மண்ணிலேயே உறைந்திருக்கின்றன என்பதற்கு, வருடா வருடம் வெளிவரும் கலை இலக்கியங்கள் சாட்சியங்கள் ஆகின்றன. சென்ற ஆண்டு நவம்பரில் ஜேர்மனியில் இருந்து வெளி யாகியிருக்கும் " **ஈழத்துப் புறநானூறு** " (இரா றஜீன்குமார்), பிரான்சிலிருந்து சென்ற மார்ச்சில் வெளியாகி இருக்கும் " **கட்டிடக் காட்டுக்குள்** " (செல்வம்) ஆகிய கவிதைத் தொகுதிகள் மேற்படி கூற்றுக்குக் கிடைத்த மேலதிக சான்றுகள் !

இவ் இரு கவிதைத் தொகுதிகளையும் அறிமுகம் செய்வதற்கு முன்பாக, கவிதை பற்றிய சில விளக்கக் குறிப்புகளை இரத்தினச் சுருக்கமாக நோக்குவோம். புதுக் கவிதைத் துறை வளர்ச்சியடைந்ததன் தாக்கம்..... பல புதிய, இளைய கவிஞர்களை தமிழ்க் கவிதையுலகம் இனங்காண்பதற்கு வாய்ப்பாக, அமைந்திருப்பது உண்மைதான். ஆனால் இதன் நேர் எதிர் விளைவாக கவிதை என்றால் என்ன என்பது பற்றிய உணர்வு, தெளிவு பலருக்கு வறுமையாகியிருப்பதும் – ஒரு கசக்கும் உண்மையாகும்.

இச் சந்தர்ப்பத்தில் .....

" கவிதையின் கூறுகளை கவிதையாகக் காணும் போக்கே புதுக் கவிதையின் முக்கிய பலவீனம் என்று தோன்றுகிறது " என்று சிவசேகரம் உரைத்திருப்பதும் உற்று நோக்கற்பாலதே !

" என்று தணியுமிந்த சுதந்திர தாகம்
என்றுமடியும் எங்கள் அடிமையின் மோகம் "

" பாரதியின் இதே வரிகளை யாப்பற்ற வடிவத்திற்கு (இயைபு, சீர், தளை, தேமா, கருவிளம், நேர், நிரை ஒழுங்குற அமையாத உரை வடிவத்திற்கு) மாற்ற முடியும். அவ்வாறு மாற்றும் போதும் அது தன் கவிதைத் தன்மையை முற்றிலும் இழக்காது. உதாரணமாக :–

" இந்த சுதந்திர தாகம் எப்போது தணியப் போகிறது.

எங்கள் அடிமையின் மோகம் எப்போது மடியப் போகிறது. "

என்று பாரதியின் வரிகளை வேறு ஊடகத்துக்கு மாற்றினாலும் அது இன்னும் தன் கவித்துவப் பாதிப்பை இழந்து விடுவதில்லை. ஏனெனில் இங்கு வெளிப்படுத்தப்படுவது ஒரு கருத்தல்ல. ஒரு ஆழமான உணர்வு ! வேட்கை ! இந்த உணர்வின் வீச்சே சாரம்சத்தில் இதைக் கவிதை என்று நிர்ணயிக்கிறது. அல்லாமல் இதன் யாப்பும் இசையும் அல்ல. இவை இதற்கு ஒரு மேலதிக வீச்சைக் கொடுக்கின்றன, அவ்வளவுதான் ! " என்பது கவிதை பற்றிய எம்.ஏ.நு:மானின் (மாக்சியமும் இலக்கியத் திறனாய்வும், பக்கம் 34–35) ஒரு ஆழமான கருத்து. இதே கருத்தை அ.மார்க்ஸ் வேறு விதத்தில் விளக்குவதை கீழே நோக்குவோம்.

" சமூக மயப்பட்ட அனுபவங்கள், போராட்டங்கள் ஆகியவற்றின் பின் வெளிப்பட்ட இக் கவிதைகள் முதற்கட்ட தன்னுணர்ச்சிக் கவிதைகளைத் காட்டிலும் ஆழமாயும் – செறிவாயும் கலாபூர்வமாயும் இருந்தன.

பாரதியில் கூட இதைக் காணலாம். 'தனிமை இரக்கம்' போன்ற அவரது முதற்கட்ட தன்னுணர்ச்சிக் கவிதைகளைக் காட்டிலும், அரசியல் அனுபவங்களின் பின்னே அவரது இறுதிக் காலத்தில் வடிக்கப்பட்ட காதல் பாடல்கள், கவித்துவம் மிக்கதாயும் மனித நேயம் மிக்கதாயும் அமைந்தன. '**தண்ணீர்**

விட்டோ வளர்த்தோம்', 'என்று தணியும் இந்த சுதந்திரதாகம்' போன்ற கவிதைகள் தூலத்தன்மை குறைந்து, தன்னுணர்ச்சித் தன்மை மிகுந்து, என்றென்றைக்கும் விடுதலைக்காகப் போராடும் மனிதர்க்குச் சேதி சொல்வனவாய் நிற்பதில் வெற்றி பெற்றன. (சோகங்களிலும் துயரமானது (கௌரி) கவிதைத் தொகுதியின் பின்னுரையில் இருந்து)

அனுபவங்களை உணர்வுடன் வெளிப்படுத்தும்போதே சிறந்த கவிதைகள் தோன்றுகின்றன. அவைகளே உணர்வு பூர்வமான தன்னுணர்ச்சிக் கவிதைகளாகவும் முடியும் என்பதே மேற்படி கூற்றுக்களின் சாரமாகும் . தொடர்ந்து றஜீன்குமார் செல்வம் ஆகியோரது கவிதைகளை நோக்குவோம்.

முதலில் .....
இரா.றஜீன்குமாரின் **20ம் நூற்றாண்டின் ஈழத்துப் புறநூறு** கவிதைத் தொகுப்புக்கு வருவோம்.

றஜீன்குமார் எமது தமிழ்ச் சமூகத்தின் பழக்க, வழக்கங்களை கலாச்சாரரீதியாக போலி வார்த்தைப் பிரயோகங்களை கேள்விக்குள்ளாக்குவதும், அவற்றில் மாற்றம் வேண்டும் என்பதுமான மனஇயல்புடையவர் என்பதை இத்தொகுப்பில் இனங்காட்டுவதை கீழ்வரும் சில வரிகளில் கண்டு கொள்ளலாம்.

முனகி
முக்கி
மலமும் கழிந்து
யோனி கிழிந்து
குருதி வழிந்து
– – – –

என்று மரண வேதனையுடாக பெண்கள் குழந்தைகளைப் பிரசவிக்கும் போதும் 'சுகப் பிரசவம்' என்று பெண்களின் வேதனையை இலேசு படுத்தும எமது சமூகத்தை நோக்கி நக்கலாகக் கேட்கிறார்...
" என்ன சுகம் என்ன சுகம்
அப்பன் ஆகுதல் என்ன சுகம்..."
என்ற வரிகளின் மூலம்.

இதேபோல் ஒருவரை ஒருவர் நேசித்து வாழ்க்கை ஒப்பந்தத்திற்கு வந்த போது "பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால்" என்ற போலிப் பதங்களைத் தாங்கி வருகிற திருமண அழைப்பிதழ்களைப் பார்த்துக் கேட்கிறார்.

சந்தேகம் அறவே அற்று நானறிவேன்
நீங்கள் இருவரும் நிச்சயம் செய்ததே !
அழைப்பிதழ் சொன்னது
பெரியோர்கள் என்று

மலையக மக்களின் உணர்வினை பிரதிபலிக்கும் பல கவிதைகள், பலரிடம் இருந்து வடிக்கப்பட்ட போதும், இதுவரை காணப்பெறாத ஒரு புதிய அம்சம் ' பகிரங்க மன்னிப்பு ' எனும் கவிதை.

மலையகத்து மானிடனே
சிறு வயதில் பிழை செய்த
இந்த யாழ்ப்பாண
வடலியினை
மனதார மன்னிப்பாய்

இதில் 'வடலி' படிமமாக கப்பட்டிருப்பதும் ஒரு புதிய அம்சமே !

வருடம் முழுதும்
ஓடிக் களைத்த
மேகக் குதிரை
தள்ளிய நுரையாய்
தரையில் பரவிய வெண்பனி
தன் முகத்திரை கிழிந்து
கொடிய குளிராய்
ஆதிக்கம் செலுத்தும்

கடைகளின் முன்னே
விற்பனைக்காக
தொங்கிக் கிடக்கும்
வசந்த கால ஆடைகள்
' நிரந்தரமல்ல உன் ஆதிக்கம் ' என
குளிரிடம் சூளுரைக்கும்.

என்று '19 மாசி1991 நினைவலைகள்' எனும் கவிதையில் இந்நாட்டு 'குளிர்காலச் சூழலிலும் வசந்தகால ஆடைகள் சூளுரைப்பதும்' குறிப்பான படிமம் ஆகும்.

இவை இக்கவிதைத் தொகுப்பின் பிழிவுகளின் சில பகுதிகள் ஆகும்.

ஆனால் 1981இல் ஜேர்மனிக்கு வந்து, தமிழ்ஈழப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொள்வதற்காக தாயகம் மீண்டு (எப்போ சென்றார் என்பது குறிப்பிடப் படவில்லை) மீளவும் 1985ல் ஜேர்மனிக்கு வந்தார்..... என்ற றஜீன்குமார் பற்றிய பின்னட்டைக் குறிப்பை கண்ணோட்டம் விட்ட பின் ,

றஜீன்குமாரின் முன்னுரையில் தொடங்கி, சுசீந்திரன் – கௌரிதாஸ் ஆகியோரின் முடிவுரை வரை இத்தொகுப்பைப் படித்துவிட்டு என்னுள் எழுந்த ஒரு வினா– இவர் (றஜீன்குமார்) எவ்வளவு நாள் ஈழத்துப் போராட்டச் சூழலில் தரித்திருந்தார் என்பதுதான். ஈழத்துப் புறநூறு என்று தொகுப்புக்குத் தலைப்பிட்டிருந்த போதும் ஈழத்தில் 1985ல் அவர் நின்ற காலப் புகுதிகளில் நிகழ்ந்த அனர்த்தங்கள் – அவலங்கள் கூட அவற்றிற்குரிய உணர்வு களுடன் பிரதிபலிக்கப்படவில்லை.

‘ சிரிப்பு – அழுகை ’ கவிதையில் வரும்

மாங்காய் தேங்காய்
எல்லாம் இப்போ
மனிதனை விடவும்
பெறுமதி நானோ

இவ் வரிகள் மட்டுமே 1985க்கு முற்பட்ட சூழலை ஓரளவு உணர்வுடன் கூடிப் பிரதிபலிக்கிறது. (இச்சந்தர்ப்பத்தில் 1985க்கு முற்பட்ட அவலங்களை அதற்குரிய அனுபவ உணர்வினைக் கண்முன் நிறுத்துகின்ற ‘மரணத்துள் வாழ்வோம்’ கவிதைத் தொகுதியினை நினைவுபடுத்திக் கொள்வது நல்லது.)

றஜீன்குமாரின் ஏனைய, ஈழத்து அவலங்களைப் பிரதிபலிக்கும் ‘எனது தேசத்துக் குயில் பாட்டு’ கவிதையில்,

ஆம் !
எனது தேசத்தில்
ஆடுகள் குரைக்கின்றன
புறாக்கள் ஊளையிடுகின்றன
சிசுக்கள் கர்ப்பத்திலேயே
தாயின் கருப்பையைப் புசிக்கின்றன.
குயிலே நீ கூவவும் வேண்டாம்
காகம் என்பதில் உறுதி கொள்
அசுரத் தலைமைகள்
பல்பமாய்ப் போகும்
தீக்கங்கின் சமிக்ஞையாய்
சிறு குயிலே நீ.....

ஆகிய வரிகளும்

‘ மயான காண்டம் ’
‘ எல்லோரும் மீட்பார்களே ’
‘ எச்சரிக்கை ! யுத்தச் செய்திகள் ’ ஆகிய கவிதைகளில் வரும் சில சில வரிகளுமே தாய்மண்ணின் அவலங்களை ஓரளவு சித்தரித்த போதும், உண்மை அனுபவ உணர்வினைப் பகிர்வதாகத் தெரியவில்லை. இந்திய இராணுவம் ஈழமண்ணை ஆக்கிரமித்திருந்த காலத்தை ‘தழலிலும் குளிக்கும் துளிர்’ எனும் கவிதை மட்டும் இலேசாகத் தழுவிச் செல்கிறது.

நுனித்து நோக்குவோமாயின் இத் தொகுதிக்கு ஈழத்துப் புறநானூறு’ (20ம் நூற்றாண்டின்) தலைப்பு சிறிதும் பொருத்தமல்ல என்பதை இலகுவாகக் கண்டு கொள்ளலாம். மேலும் ‘வார்த்தைகளில் உலகம்’ கவிதையில் வரும் ‘கே.எஸ்.ராஜா பாணியில்’ – என வரும் சொற்சேர்க்கை கவிதையுடன் சேர்வதாகத் தெரியவில்லை. அதே கவிதையில் வரும் ‘துண்ட எலும்புகள்’ பழைய படிமம். சகிக்க கூடியதாக இல்லை. இன்னும் ‘ தீங்காங்கு, ஆயுதபூசை, ஆயுதம், காத்தான் குடியிலோ, கே.எஸ்.ராஜா, பூண்டுலோயா ’ ஆகிய பதங்களுக்கு அடிக்குறிப்பிட்டிருப்பது வாசகர்களின் தரத்தை குறைத்து மதிப்பிடும் செயலாகவே தோன்றுகிறது.

றஜீன்குமாரின் இத் தொகுப்பில் எல்லாக் கவிதைகளும் கவிதை நடையுடன் ஒன்றிப் பிறந்து, சில நல்ல படிமங்களைக் கொண்டிருந்தபோதும், அனுபவ உணர்வினை வெளிப்படுத்தும் கவித்துவத்திறன் போதியதாக இல்லை. இச் சந்தர்ப்பத்தில் மீண்டுமொரு முறை சிவசேகரத்தின் கூற்றை நினைவு படுத்திக் கொள்கிறேன்.

“ கவிதையின் கூறுகளைக் கவிதையாகக்

காணும் போக்கே புதுக்கவிதையில் முக்கியமான பலவீனம் என்று தோன்றுகிறது ". (சேரனின் 'எலும்புக் கூடுகளின் ஊர்வலம்' விமர்சனத்தில் இருந்து)

வெளியீட்டு முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நண்பர் சுசீந்திரன் – கலை, இலக்கியம் பற்றிய சரியான தெளிவான விமர்சனத்தை படைப்பாளிகளுக்கு முன்வைக்க வேண்டும். தெளிவான விமர்சனங்கள்தான் படைப்பாளிகளை, மேலும் உரமேற்றும் ஆயுதமாகும். உற்சாமூட்டுதல் என்ற 'சாக்கில்' படைப்பாளியை ஏற்றிப் போற்றுவது, அப் படைப்பாளியை சுயதிருப்திக்கு இட்டுச் செல்லும். இது அவரது வளர்ச்சியைத் தடைசெய்வதற்கு ஒப்பாகும். இத் தொகுப்பில் சுசீந்திரன், ரஜீன்குமாரை பாரதியுடன் ஒப்பிட்டமை மகத்தான அபத்தம் ! அபத்தத்திலும் அபத்தம் !!

1992 மார்ச்சில் வெளியான இத் தொகுதியில் 86 க்கு முன் எழுதப்பட்ட கவிதைகளே அதிகம். 87 இல் எழுதப்பட்ட இரு கவிதைகளும், 88 இல் எழுதிய ஒரு கவிதையும் உண்டு. 86 க்குப் பின் இவர் அவ்வளவாகக் கவிதை எழுதவில்லையோ என்னவோ இத் தொகுதியில் சேர்க்கப்படவில்லை. 87 க்கு முற்பட்ட கவிதைகள் கூட ('கட்டிடக் காட்டுக்குள், 'கடிதங்களில் வாழும் மனிதர்கள்' நீங்கலாக) கிடைக்கப்பெற்ற செய்திகளை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட 'அரசியல் கவிதைகள்' என்ற தலைப்புக்குள்ளேயே அடங்கிவிடுகின்றன. இச் சந்தர்ப்பத்தில் 'அரசியல் கவிதைகள்' பற்றி அ.மார்க்ஸின் சிறு குறிப்பொன்றை நோக்குவோம்.

" ---- அரசியற் கவிதைகளைப் பொறுத்தமட்டில் சற்றுத் தூலமாய் உள்ளதாலும், குறிப்பிட்ட காலகட்டத்தோடும் சம்பவங்களோடும் பின்னிக் கிடக்க நேர்வதாலும் இவற்றில் புனைவு அம்சம் மிகுந்தும், தன்னுணர்ச்சி அம்சம் குறைந்தும் போய்விட ஏதுவாகிறது. இதனால்தான் 'சோசலிச எதார்த்த வாதத்தின்' தொடக்க கட்டத்தில் தன்னுணர்ச்சிக் கவிதைகள் (lyrics) பாடுவதே இழிவாகக் கருதப்பட்டது. மாயகாவ்ஸ்கி, எலுவார்ட், பிரெக்ட், நெருடா போன்றோர்கூட இதற்குப் பலியாக நேர்ந்தது. இதன் மறுதலையைத் தமிழக வரலாற்றில் காணலாம். பாரதி 'மகாகவி' விவாதத்தின் போது (1930 – 1940) அவரது அரசியற் கவிகள் 'கவித்துவம் அற்றவை, காலத்தில் அழியாமல் நிற்க இயலாதவை' என கலை உபாசகர்களால் அவதூறு செய்யப்பட்டது.

ஆனால் சற்று நுணுகிப் பார்த்தோமானால், இந்த நேரெதிரான கருத்துக்கள் இரண்டுமே தவறானவை என்பது தெரியும். உன்னதங்களை எட்டத் துடித்த மாயாகாஸ்க்கி போன்றவர்களால் இறுதிவரை தன்னுணர்ச்சிக் கவிதை பாடுவதில்லை என வீறாப்பாய் இருக்க முடியவில்லை. அவரது பிற்காலக் கவிதைகளாகிய IT, Lenin, Fine போன்ற உன்னதக் கலைச் சிகரங்கள் தன்னுணர்ச்சி வெளிப்பாடாய் மிகுந்தபோதே அரசியற் செய்திகளையும் சொல்லத்தான் செய்தன. சொல்லப் போனால் இவையே மிகச் சிறப்பாகவும் ஆழமாகவும் செய்திகளை வெளிப்படுத்தின. " (கௌரியின் 'சோகங் களிலும் துயரமானது' கவிதைத் தொகுதியின் பின்னுரையில் இருந்து)

அரசியற் செய்திகளையும், தன்னுணர்ச்சிக் கவிதைகளினூடாக வெளிப்படுத்தும்போதே அவை கவித்துவத்துடன் மிளிர முடியும் என்பதே மேற்படி கூற்றில் இருந்து கண்டுகொண்டோம். ஆனால் 86 இல் எழுதப்பட்ட செல்வத்தின் கவிதைகளில் 'கட்டிடக் காட்டுக்குள்', 'கடிதங்களில் வாழும் மனிதர்கள்' ஆகிய இரு கவிதைகளும்

ஏனைய கவிதைகளிலிருந்து வேறுபடுகின்றன. இவை, அகதி வாழ்வுக்குட்பட்டு அனுபவித்த வாழ்வினை அதற்குரிய உணர்வுடன்கூடிய தன்னுணர்ச்சிக் கவிதைகளாக (Lyrics poerty) வெளிப்படுகின்றன. உதாரணமாக,

சூரியன் கிழவனாகி மங்கிக் கிடந்தது
பனிப்பூக்களைச் சூடினாலும்
மரங்கள் விதவையாகி
அழுது வடிந்தது

ஆகிய படிமங்களுடன் தொடங்கி,

வெள்ளை முகங்கள்
சிவந்து சிணுங்கியது
புகழ் கொண்ட செயின்
கரையோ தூங்கி வழிந்தது
கட்டிடக் காட்டுக்குள்
இந்தக் காலத்தில் தான்
நான் புகுந்தேன்.
கனவுப் பணம் தேட
கடல் கடந்தோம்
நானும் நாங்களும்
அகதித் திரையில்
முகமிழந்தோம்.

வாழ்க்கை கடினமாகின்றது
ஒவ்வொன்றும் கால தாமதமாகின்றது.

' கட்டிடக் காட்டுக்குள் ' கவிதையில் வரும் மேற்படி வரிகளும்,

உருத்துக்கள் உறவுகள்
நெருப்புக்குள் வாழ
அவர்கள் இருப்பின் சுகமறிய
காலையில் விடிந்ததும்
கடிதங்களைத் தேடுகிறோம்
வீட்டுக்கு வெளியே குளிர் கொட்ட
நெஞ்சுக்கூடு நெருப்புக்குள் அவியுது.

'கடிதங்களில் வாழும் மனிதர்கள்' கவிதையில் வரும் இவ் வரிகளும் சிறப்பான படிமங்களைக் கொண்டு உணர்வினைத் தொடுகின்றன. இன்னும் " பனிப் பாறைக்குள் முளைகள் கிளம்பும் " போன்ற சிறந்த படிமங்களும் இவ் இரு கவிதைகளிலுமே அதிகமாகக் காணப்படுகின்றன.

செல்வம் தாம் வாழும் சூழலை, சூழலை மையங்கொண்ட மனித அவலங்களை, அனுபவங்களை கவிதைப் பொருளாக்கும்போது அவை சிறந்த தன்னுணர்ச்சிக் கவிதைகள் ஆகும், என்பதற்கு மேற்காணும் கவிதைகள் தக்க சான்றுகள்.

இப்படி நல்ல கவிதைகளை பிரசவிக்கும் ஆற்றல் கொண்ட செல்வம் 'புறாக் கூண்டு' படிமத்தையும், 'செவ்விரத்தம் பூவிழந்தோம்', 'செவ்விளநீர் மறந்தோம்' வரிகளையும் ஒன்றுக்கு மேற்பட்ட கவிதைகளில் மீளப் பாவித்திருப்பது சொல்வளத்திற்கு ஏற்பட்ட வறுமையோ என்று நினைக்கத் தோன்றுகிறது. மேலும் ....

செவ்விரத்தை பூவிழந்தோம்

செவ்விளநீர் மறந்தோம்

என்னத்தைத்தான் நினைத்தோம்

சேரனே ! ஜெயபாலனே !

ஈழத்துக் கவிஞர்களே !

நினைவை விட்டு அகலாததெல்லாம்

உங்கள் உயர் தமிழ்க் கவிதைகள் தாம்

ஆகிய வரிகள் சேரன், ஜெயபாலன் ஆகியோரால் செல்வம் ஆகர்சிக்கப்பட்டுள்ளார் என்பதை புலப்படுத்தியபோதும், அவர்களுக்கான ஒரு 'வாழ்த்துப்பா' என்ற பிரமையையும் கொடுக்கின்றது. இவ் இருவரது நாமங்களையும் கொண்டு வருவதற்காகவே, ஏற்கனவே 'மெல்லச் சாகுது மனுசம்' கவிதையில் வந்த .....

' செவ்விரத்தம் பூவிழந்தோம்
செவ்விளநீர் மறந்தோம் '

வரிகளை மீண்டும் 'நேற்றிருந்தோம்' கவிதையில் பாவித்திருக்கிறாரோ என்று சந்தேகிக்கத் தோன்றுகிறது. வளர்ந்து வரும் குறிப்பிடத்தக்க கவிஞர்களுள் ஒருவராகத் திகழும் செல்வம் இத்தகைய 'வாழ்த்துப் பாடல்களினால்' தம்மைத் தாமே இரண்டாந் தரக் கவிஞர் என்ற நிலைக்கு இட்டுச் செல்வது வேதனையைக் கொடுப்பதாகும்.

→ பக் 24

தமயந்தி

பூ பாள நேரத்தில் ஒரு பாடல் - பூ ங்
காற்றோடு எனை வந்து தீண்டிடுதே
காற்றினைந்த கவிதைகளை கரைத்தவன் யாரோடி
கரையின்வெண் மனலில், கவிதைகள் விதைத்து
நடந்தது யாரோடி ?

பாறையின் மேனியில் மோதிடு மலையிற்தன்
சோகங்கள் கரைத்தானோ . . . ?
அந்த சோகங்கள் எந்தத்
தீயிலும் வேகா தென்றவன் நடந்தானோ
நடந்தவன் சுவடுகள் கரையிற் கண்டேன் - அந்தச்
சுவடுகள் பற்றி நான் தொடர்வேன்
யாரவன் கூறடி தோழியென்றேன் - அவன்
மனுவெனக் கூறி நீயகன்றாய்
நான் தொடர்வேன் . . . அவன்
சுவடுகள்பற்றி நான் தொடர்வேன். . .

பூ மியின் மடிதனில் ஓடிடும் அருவியில் - வெண்
மேகங்கள் கரைந்தனவோ
அந்த மேகங்கள் எந்தச்
சாபங்களாலே சோகங்க ளானதுவோ
மிதந்தது மூங்கிற் குழல் அலையில் - அந்தக்
குழலும் துயரம் பாடுவதேன்
யாரவன் கூறடி தோழியென்றேன் - அவன்
மனுவெனக் கூறி நீயகன்றாய்
நான் தொடர்வேன் . . . அவன்
சுவடுகள் பற்றி நான் தொடர்வேன் . . .

இன்னொரு பாடல்

..... தொடர் 23

'கட்டிடக் காட்டுக்குள்' கவிதைத் தொகுதி ஈழத்து இலக்கிய வானில் இன்னும் ஒரு கவிதை நட்சத்திரத்தை (செல்வம்) இனங் காட்டியுள்ளது என்றால் மிகையாகாது.

—மோகதாஸ்—

..... தொடர் 10

தயவுசெய்து மன்னிச்சுப் போடுங்கோ. சித்தெறும்புக்கும் ஒரு சுயவரலாறு இருக்குமெண்டதப் போல, உங்களுக்குள்ளயும் என்ர கதையப் போல நிறையக் கதையள், நிறைய வசந்த நினைவுகள் மறைஞ்சு கிடக்கும். அதில காதல், ஊடல், நட்பு, தெரிஞ்ச ஒரு சில விசயங்கள மட்டும் வச்சுக் கொண்டு பெரிய மேதாவியளப் போல விவாதஞ் செய்த சம்பவம் இப்பிடி நிறைய இருக்கும். அதுகள இப்ப நீங்க நினைச்சுப் பாருங்கோ. நானும் என்ர பழய காலத்துக்குக் கொஞ்சம் போய் வாறன்.

நாடெங்கே?

ஜேர்மனியத் தெருக்களில் சுமக்கமுடியாமல் கைக் குழந்தையைச் சுமந்துகொண்டு பிச்சை கேட்கும் இந்தச் சிறுவன் யார் ?

மழை பெய்த ஈரத் தெருவில் உட்கார்ந்து குழந் தையை மடியில் படுக்கவைத்துக் கொண்டு கைநீட்டி பிச்சையெடுக்கும் இந்தத் தாய் யார் ?

பொருளாதாரத்தில் பலமாகிக்கொண்டுவரும் ஜேர்மனியில் பிச்சை கேட்கும் இவர்கள் ஜேர்மன் மக்கள்தானா ?

இல்லை! இவர்கள்தான் றோமா, சிந்தி மக்கள்.

சித்திரவதை, புறக்கணிப்பு,அவமானம், சிறை ச்சாலைகளில் கொலை, விரட்டியடிப்பு. . . இன்னோரன்ன கொடுமைகளுக்கு பல ஆண்டுகளாக ஆளாகிக் கொண்டிருக்கும் றோமா, சிந்தி மக்கள் தான் இவர்கள்.

இவர்களை "சிகொய்னர்"Zigeuner - நாடோடி கள் - என்றே பல ஆண்டுகளுக்கு முன்பிருந்து இன்றுவரை அழைக்கிறார்கள். "சிகொய்னர்" என்பது ஜேர்மன் மொழியில் இழிவானதைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

இன்று மேற்கு ஜேர்மனில் சுமார் 40 ஆயிரம் ஜேர்மனிய றோமா, சிந்தி மக்கள் வாழ்கிறார்கள். இவர்கள் நீண்டகாலம் இங்கு வசித்து இவர்களளவில் "ஜேர்மனியர்கள்" ஆகியுள்ளனர்.

றோமா, சிந்தி மக்களின் தாய்நாடு - வட - இந்தியா என்று நம்பப்படுகிறது. ஏன் இவர்கள் சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன் இந்தியாவை விட்டு வெளியேறினார்கள் அல்லது வெளியேற்றப் பட்டார்கள் என்பது இன்றுவரை தெரியவராத செய்தியாகவே உள்ளது. ஜேர்மனிய சிந்தி மக்கள் சுமார் 600 வருடங்களாக மத்திய ஐரோப்பாவில் வாழ்கிறார்கள் என்று அறியப்பட்டுள்ளது. இவர்கள் அடுத்ததாக பல்கன் நாடுகளுக்கு இடம் பெயர்ந்தார்கள்.

சிந்தி, றோமா மக்களின் தாய்மொழி "றோமனச்" என்பதாகும். இம் மொழி இந்திய சமசுக்கிருதத்துடன் உறவுடையது. காலங்கள் போகையில் வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்த றோமா சிந்தி மக்கள் வேறுபட்ட "றோமனச்" மொழியைப் பேசலானார்கள். அத்துடன் தாங்கள் வாழ்ந்த அந்தநாட்டு மொழியில் உள்ள சில சொற்களையும் தமது மொழியில் சேர்த்துக் கொண்டார்கள்.

முதன் முதலில் மத்திய ஐரோப்பாவுக்கு வந்த சிந்தி மக்கள் எகிப்திலிருந்து வந்த தல யாத்திரிகர்களாகவே கருதப்பட்டனர். பின்னர் இவர்கள் ஏமாற்றுக்காரர்கள், மாயாஜாலக்காரர்கள் என்றகருத்து உருவாகி வளர்ந்தது. இக் கருத்தின் அடிப்படையில் எழுந்த வெறுப்பினால் 1449ம் ஆண்டு பிராங்போர்ட்டில் - Frankfurt-வாழ்ந்த சிந்தி மக்கள் துரத்தி அடிக் கப்பட்டனர். ஏனைய பகுதிகளில் வாழ்ந்தவர்கள் எந்தவித உரிமையும், பாதுகாப்பையும் பெற முடியாதவர்கள் என பிரகடனப்படுத்தப் பட்டார்கள். அத்துடன் இம் மக்களின் வாழ்க்கை முறையையும், "விளங்கமுடியாத" மொழியையும் ஒப்பிட்டு இவர்கள் துருக்கிய உளவாளி களாகவும் கருதப்பட்டனர்.

1551ஆம் ஆண்டு காலப்பகுதியில் துருக்கியர் மீதிருந்த பயத்தினால் ஒக்ஸ்புர்க் -Augsburg- பாராளுமன்றம் 3 மாதத்திற்குள் சிந்தி, றோமா மக்கள் நாட்டைவிட்டு வெளியேறிவிட வேண்டும் என்று உத்தரவிட்டது.

16ஆம் நூற்றாண்டு மத்தியில் பிரஜாவுரிமை உள்ள எவரும் தங்கள் இடங்களுக்கு, சொத்துகளுக்கு அண்மையில் உள்ள சிந்தி, றோமா மக்களைக் கொல்லலாமென கொடூர அனுமதி வழங்கப்பட்டது. இக் கொலைகளுக்கு தண்டனை வழங்கப்பாடாது என்றும் அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து வந்த நூற்றாண்டு காலத்திலும் சிந்தி, றோமா மக்களின் நிலமையில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. விரும்பத் தகாதவர்களாய் நடாத்தப்பட்டார்கள், அழிக்கப்பட்டார்கள்.

செத்துவிடு அல்லது கொன்று விடுவோம்

18ஆம் நூற்றாண்டில் பிறப்பிக்கப்பட்ட பிரகடனத்தால் அக் காலப்பகுதியில் ஜேர்மனியில் வாழ்ந்த சிந்தி மக்கள் வேட்டையாடப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டார்கள். பத்திரிகைகள் எல்லாம் சிந்தி மக்கள் செய்யாத குற்றங்களை எழுதியிருந்தும் சிந்தியினர் மனிதர்களைப் பிடித்துச் சாப்பிடும் நரமாமிசக் கும்பலென்று சித்தரிப்பது வரை இம்மக்கள் கொல்லப் படுவதற்குத் தூண்டுகோலாக இருந்தன.

1725இல் பிற்டிறிக் வில்கெல்ம் - Friedrich wilhelmi - என்ற அரசன் விசாரணைகள் எதுவுமின்றி 18 வயதிற்கு மேற்பட்ட எல்லா ஆண், பெண் சிந்தி மக்களையும் தூக்கில் இடும்படி உத்தரவிட்டான். அத்துடன் சிந்தி மக்களது காது வெட்டப்படுதல், முக்கிய உறுப்புக்களில் தீமூட்டப்படுதல், உடம்பில் கூரான ஆயுதங்களால் கீறப்படுதல். . . போன்ற சித்திரவதைகளுக்கு ஆளானார்கள். இவர்களை சுட்டுக் கொல்லும் கொலையாளிகளுக்கு பரிசுகளும், பாராட்டுதல்களும் வழங்கப்பட்டன. மத்திய ஐரோப்பாவில் நிரந்தரமாகிய முதலாவது சிந்தி மக்கள் தங்கள் இன அடையாளங்கள் அழித்துக் கொள்வதற்கு பலவந்தப்படுத்தப் பட்டார்களா என்பது அறியப்பட வில்லை. 18ஆம் நூற்றாண்டில் தாங்கள் வாழ்ந்த பெரும்பான்மைச் சமூகத்தின் வாழ்க்கை முறைகளை சிந்தி மக்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

1726ஆம் ஆண்டில் கிறாவ்வொன் விற் கென்ச்ரைன் - Graf von wittgenstein - என்பவர் ஒரு கூட்ட சிந்தி மக்களை தனது பகுதிகளில் குடியமர்த்த அனுமதித்தாலும் 12 வருடங்களின் பின் அம் மக்கள் திரும்பவும் விரட்டப்பட்டார்கள். மறியா தெரசிய - Maria thersia - என்பவனும் யோசப்2 - Joseph2- என்பவனும் சிந்தி, றோமா மக்களை நிரந்தர பண்ணை அடிமைகளாக்க விரும்பினார்கள்.

நூறன்பேர்க்கிற்கும் - Nurnburg - அதன் சுற்று வட்டாரத்திற்குமான புரட்சுதாந்து திருச்சபை 1828ஆம் ஆண்டு ஆசிரியரை ஏற்பாடு செய்து பிறிடிறிக்ச்லோறா -Fried richslohra - என்ற இடத்தில் வாழ்ந்த சிந்தி மக்களை பெரும்பான்மைச் சமூகத்தின் வாழ்க்கை முறைகளுக்குப் பழக்கும்படி பணித்தது. 1835இல் இந்த இடத்தில் 80 - 100 பேரே வாழ்ந்தார்கள். இத்திட்டம் அங்கு வாழ்ந்த பெரும்பான்மைச் சமூகத்தின் எதிர்ப்பால் நடைமுறைக்கு கொண்டுவரப்படவில்லை. சிறிது காலத்தின்பின் மக்தபேக் - Magde burg - அரசு சிந்தி மக்களில் வளர்ந்தவர்களை வேலைத் தளங்களிலும், குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களிலும் தங்கவைத்தது.

19ஆம் நூற்றாண்டு சட்டப் புத்தகங்களில் "சிகொய்னர்" என்பதற்கு பதிலாக பிச்சைக்காரர், நாடோடிகள், நாடற்றவர்கள் என்றே சிந்தி மக்கள் குறிப்பிடப்பட்டனர். அத்துடன் பெரும்பாலான வெளியீடுகள் சிந்தி மக்களையும் எதிர்த்துத் தீவிர பிரச்சாரங்களை மேற்கொண்டனர்.

இக் காலகட்டத்தில் சிந்தி மக்கள் "உள்நாட்டு சிகொய்னர்,வெளிநாட்டு சிகொய்னர்" என்று பிரிக்கப்பட்டனர். வெளிநாட்டவர் என்று பிரிக் கப்பட்டவர்கள் உடனடியாக அவர்கள் எங்கிருந்து வந்தார்களோ அந்தந்த நாடுகளுக்கே அனுப் பப்பட்டார்கள். உள்நாட்டவர்கள் என்று பிரிக்கப் பட்டவர்கள் சில சுற்று வட்டாரங்களில் இருக்க அனுமதிக்கப்பட்டார்கள்.

கொல்லப்பட்டறை வேலை, வீடு திருத்தி விற்பது, பழைய பொருட்களை திருத்தி விற்பது, கைத் தொழில் போன்ற வேலைகள் செய்ய அவர்களுக்கு விசே அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

1845ஆம் ஆண்டில் வெளிவந்த மன்கைமர் - Manheimer - என்ற பத்திரிகையின் 115 ஆவது வெளியீட்டில் சிந்தியும், றோமாவும் தங்களைவிற்றே பொருட்களை வாங்குகிறார்கள் என்று எழுதப்பட்டுள்ளது.

சிந்தி, றோமா மக்களை நடாத்தியமுறை ஜேர்மனியின் பழைய ஆபிரிக்க காலனித்துவ முறையைச் சேர்ந்தது என்று ஜோஅசிம் சிற்லோமன் - Joachim sitloman - என்ற எழுத்தாளர் குறிப்பிடுகிறார். மக்களை அடிமையாகக் கொண்டுவந்து வேலை வாங்கப்பட்டது என்றும், ஒரு நாளைக்கு ஒருநேரச் சாப்பாடு மட்டுமே கொடுக்கப்பட்டது என்றும், நோயினால் பாதிக்கப்பட்டிருந்தாலும் வேலை செய்தே ஆகவேண்டும் என்றும், வேலை செய்யாவிட்டால் கடும் தண்டனை என்றும் ஆபிரிக்க அடிமைகள் நடத்தப்பட்டது போலவே சிந்தி, றோமா மக்களும் பயன்படுத்தப் பட்டார்கள் என அவர் எழுதுகிறார்.

திட்டமிட்ட அழிப்பு

முஞ்சனில் "சிகொய்னர் நிலையம்" அமைக்கப் பட்டு அவர்களின் வாழ்க்கை விபரங்கள் பதியப்பட்டு, படங்கள் எடுக்கப்பட்டு, விரல் அடையாளங்களும் பதியப்பட்டன. 1926இல் எடுக்கப்பட்ட இவ் விபரங்களின்படி 14ஆயிரம் பேர் பதியப்பட்டிருந்தனர். இந்த விபரங்களின் உதவி யுடன் 1933இல் சிந்தி, றோமாவினரும் கருத்தரிக்க முடியாதபடி மலடாக்கப்பட்டார்கள் 1935இல் சிந்தி, றோமா, ஆரிய இனத்தவர்கள் தங்களுக்கிடையே திருமணம் செய்துகொள்வது தடைசெய்யப்பட்டது. அத்துடன் இவர்களின் பிரஜாவுரிமையும் பறிக்கப்பட்டது. இவற்றை நடை முறைப்படுத்துவதற்காக 36ம் ஆண்டு றொபேட் றிக்ரர் என்பவன் தலைமையில் "இன அழிப்பு சுகாதார நிலையம்" திறக்கப்பட்டது. 1938இல் கைன்றிச் கிம்லெர் - Heinrich Himler - என்பவன் "சிகொய்னர் எதிர்ப்பு அலுவலகம்" என்பதை ஆரம்பித்தான். இந்த இரண்டு அலுவலகங்களும் மொத்த சிந்தி, றோமா மக்களையும் பூண்டோடு அழிக்கும் நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொண்டனர்.

இக்காலகட்டங்களில் சிந்தி, றோமா மக்கள் கீழ்த்தரமான இனக்கலப்பைச் சேர்ந்தவர்கள் என்றும், தீய பழக்கவழக்கங்களை உடையவர் என்றும் அவதூறுப் பிரச்சாரங்கள் இனஆராச்சி ஆளர்களால் பரப்பப்பட்டன.

1939இல் கொண்டுவரப்பட்ட சட்டத்தில், அச்சட்டம் பிறப்பிக்கப்பட்டதிலிருந்து சிந்தி, றோமா என்ற இனம் தடைசெய்யப்பட்டு உள்ளதாகவும், தங்கள் இடங்களை விட்டு அவர்கள் உடனடியாக வெளியேறிவிட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது. கிறிமினல் பொலீசாரால் கூட்டு முகாங்கள் அமைக்கப் பட்டன.

1940இல் சிந்தி, றோமா மக்கள் போலந்துக்கு நாடுகடத்தப்பட்டதுடன் மிகப் பெரியளவிலான நாடுகடத்தல் ஆரம்பமாகியது. 1942இல் மிகுதி யாக இருந்த 10ஆயிரம் பேரும் நாடுகடத்தப் பட்டார்கள். 1943இல் இருந்து "சிகொய்னர் முகாம்" விடுதிகளுக்கு பல குடும்பங்கள் அனுப்பப்பட்டன.

1944இல் "சிகொய்னர் முகாம்கள்" மூடப்பட்டு, அங்கிருந்து 6ஆயிரம் சிந்தி, றோமா மக்களில் 3ஆயிரம் பேர் நாடுகடத்தப் பட்டார்கள். வேலைக் காக வைத்திருக்கப்பட்ட 3ஆயிரம் சிந்தி,றோமா மக்களும் இவர்களுக்கு மருத்துவம் செய்த வைத்தியரும் அதேயாண்டு August 3ம் திகதி கொல்லப்பட்டார்கள்.

இவர்கள் கொல்லப்படுவதற்கு முன் சீமன்ல - Siemens - ,டெய்ம்லர் - பென்ச் - Daimler, Benz - ஏ.ஈ.ஜி - A. E.G - ,பி.எம்.வே - B.M.W - ஜி.ஜி - கலர் - IG Colour - . . . போன்ற பிரமாண்ட தொழிற்சாலைகளில் சம்பளம், சாப்பாடு எதுவுமின்றி கட்டாயமாக வேலை வாங்கப்பட்டார்கள்.

நாசிகளால் கைப்பற்றப்பட்ட ஐரோப்பிய பகுதி களில் சுமார் அரை மில்லியன் றோமா, சிந்தி மக்கள் கோரமாகக் கொல்லப்பட்டனர். ஒவ்வொரு குடும்பம் குடும்பமாகப் பிடிக்கப்பட்டு நாசிகளின் சிறைக்கூடங்களில் வைத்துக் கொல்லப்பட்டார்கள்.

நடந்த கொலைகள் இனவாத அடிப்படையில் நடக்கவில்லை என்றும், அவர்களின் குற்றச் செயல்களுக்காகத்தான் இவை மேற்கொள்ளப் பட்டன என்றும் இக்கொலைகளுக்கு காரணங்கள் கூறப்பட்டன.

1956இல் தேசிய நீதிமன்றத்திலிருந்து வெளியிடப்பட்ட அறிக்கையில் சிந்தி,றோமா மக்கள் கிறிமினல்கள், மற்றவர்களின் சொத்துக்களில் கண் வைத்திருப்பவர்கள், மற்றவர்களுடையதை தங்களுக்கு உரிமை ஆக்குபவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டது.

இன்று

ச்பீகல் - Spigel - சஞ்சிகை சில காலங் களுக்கு முன்பு எடுத்த கருத்தெடுப்பின்படி இன்றும்கூட சிந்தி,றோமா மக்களை ஜேர்மனியர்கள் இழிவாகவே கருதுகிறார்கள். தற்போது எழுந்துள்ள வீடில்லாப் பிரச்சனை, வேலை இல்லாத் திண்டாட்டம் போன்றவற்றால் சிந்தி, றோமா மக்கள் புறக்கணிக்கப்படுவது தொடர்கிறது. அத்துடன் இவர்களை இங்கே தங்கவிடாமல் ருமேனியா, யூக்கோசிலாவிய நாடுகளுக்குத் தொடர்ச்சியாக விரட்டி வருகிறார்கள்.

பல நூற்றாண்டுகளாக அழிவை மட்டுமே சந்தித்துக் கொண்டிருக்கும் இந்த மக்கள் இன்றும் தெருக்களில் நின்று பிச்சைகூட எடுக்கமுடியாதவர்களாக தூரத்தப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இவர்களும் மற்ற இனத்தவர்களைப் போல நிரந்தர வாழ்க்கையை வாழ்வது எப்போது ?

நன்றி : தூண்டில்

குர்திஸ்தானிய எழுத்தாளர் கொலை

Musa Anter எனும் குர்திசுதானிய 74 வயது நிரம்பிய எழுத்தாளர் படுகொலை செய்யப்பட்டார். இவர் ஒடுக்கப்பட்டு வரும் குர்திசுதானிய மொழி, கலாச்சாரத்தினை அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டவர். திட்டமிட்டு அழிக்கப்பட்டு வரும் குர்திசுதானிய மொழிக்கு ஓர் அகராதி ஒன்றை உருவாக்கியுள்ளார். மறுபக்கத்தில் குர்திசுதானியர்களும், துருக்கியர்களும் ஒன்றாக வாழ வேண்டும் என போராடியவர். இவ்வருடத்தில் மாத்திரம் துருக்கியின் தென்கிழக்கு பகுதியிலுள்ள 9 பத்திரிகையாளர்கள் படுகொலை செய்யப்பட்டு உள்ளனர். இக்கொலையை துருக்கிய அரசின் ரகசிய கொலையாளி படையான Hizbollah எனும் படையே செய்துள்ளதாக அறியப்படுகிறது. இதுவரை கொலை செய்யப்பட்ட பத்திரிகையாளரின் கொலை பற்றி துருக்கிய பொலிசார் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இவ்வகையில் ஒடுக்கப்படும் ஓர் தேசிய இனத்திற்காக குரல் கொடுப்பவர்களை ஒடுக்கும் அரசுகள் தமது கைக்கூலிகள் மூலம் படுகொலை செய்து வருவது வழமையாகி விட்டது. இலங்கையிலும் டீ சொய்சா எனும் சிங்கள பத்திரிகையாளர் அரசின் அடாவடித்தனங்களை கதைகளாகவும், நாடக வடிவிலும் அம்பலப்படுத்தி வந்தார். இதனால் சிறிலங்கா அரசின் ஆட்கொல்லிப்படையினர் இவரைப் படுகொலை செய்தது யாராலும் மறக்க முடியாததே. இவ்வரிசையில் தென்ஆபிரிக்கா, எல்சவ்டோர், பேரு இன்னும் எத்தனை நாடுகளோ.....

புதிய கோள்

சூரியகுடும்பத்திற்கு வெளியே ஓர் புதிய கோளினை விண்வெளி ஆராய்ச்சியாளர் ஒருவர் கண்டுபிடித்துள்ளார். அவ்விஞ்ஞானி தனது கண்காணிப்பின் மூலம் இக்கோளினை உறுதிப்படுத்தியுள்ளார். இக்கோள் பூமியிலிருந்து 6000 மில்லியோன் km இற்கு அப்பால் உள்ளது. இதுவரைக்கும் சூரியகுடும்பத்திற்கு வெளியே இவ்வளவு தூரத்திற்கப்பால் கோள்கள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இக்கோளினை கண்டுபிடித்தவர் Hawai பல்கலைக்கழகத்தை சேர்ந்த Mauna Kea எனும் விஞ்ஞானி ஆவார். இக்கோளிற்கு தற்காலிகமாக "1992 QBI" எனப் பெயரிடப்பட்டுள்ளது. அவர் 2.2 m தொலைநோக்கு கருவி மூலம் இதனை அவதானித்துள்ளார். இக்கோளின் பிரகாசம் 6 மில்லியன் தரம் குறைவாகவே கண்ணுக்குப் புலப்படும். இதன் குறுக்குவிட்டம் 200m என கணக்கிடப்பட்டுள்ளது.

தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக மார்க்சிய பார்வையும் எமது இன்றைய பிரச்சினையும்

– சில குறிப்புகள்

மார்க்சு ஏங்கெல்சு ஆகியோர் தேசிய இயல்புகள் பற்றி அக்கறையுடன் தமது எழுத்துக்களில் ஆங்காங்கே குறிப்பிட்ட போதும் தேசியம் பற்றிய பிரச்சனை மீது அதிகம் தத்துவார்த்த மட்டத்தில் அக்கறை கொண்டிருக்கவில்லை.

அவர்கள் தமது காலத்தில் பல தேசியங்கள் மறைந்து கொண்டிருப்பதாக இனம் கண்டனர். உதாரணமாக வேல்சு, சுலேவ் ஆகியவற்றினை அவ்வாறு நோக்கினர். தொழில் மயமாக்கல் இப்போக்கை விரைவுபடுத்தும் எனவும் எதிர்பார்த்தனர். தேசியங்கள் மறைந்து போவதை இட்டு அவர்கள் கவலை கொண்டிருக்கவும் இல்லை. தொழில் மயமாக்கும் போக்கு சகல நாகரீகமடைந்த நாடுகளையும் ஒரு பொருளாதார வலைக்குள் கொண்டு வரும் எனவும் நம்பினர். இதில் பூர்சுவாக்களின் பிரத்தியேக நலன்களே ஓங்கி இருக்கும் என்பதால் முரண்பாடுகள் தொழிலாள வர்க்கத்திற்கு தேசிய உணர்வை இல்லாமல் செய்யும் எனவும் எதிர்பார்த்தனர். இதனால் தொழிலாள வர்க்கம் நாடு என்ற எல்லைகளையும் மீறி ஒன்றுபடும் என்பதால்தான் உலக தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்றார். இவ் அடிப்படையிலேயே "தொழிலாளர்களுக்கு என்று நாடு இல்லை." (Workers have no country) என பிரகடனப்படுத்தினர்.

மார்க்சு, ஏங்கெல்சு தமது காலத்தில் தேசியம் தொடர்பாக ஸ்தூலமான கருத்து எதையும் முன்வைக்கவில்லை. தமது காலத்தில் நடந்த சில எழுச்சிகள், பிரச்சனைகள் தொடர்பாக தமது கருத்துக்களை முன்வைத்திருந்தாலும் தேசியப்பிரச்சனைகள் இந்த அளவிற்கு பெரிதாகும் என அவர்கள் எதிர்பார்க்கவில்லை. ஆனால் நடைமுறை அரசியல் தேசிய விடயங்களை முக்கியப்படுத்த வேண்டிய தேவையையே உருவாக்கியது. அப்பணியில் மார்க்சிற்குப் பின்னால் வந்தவர்களே அதிக கவனம் செலுத்தினார்கள். 1907 இல் போ:ர்(Bauer) , 1913 இல் Stalin ஆகியோர் தேசிய இனப்பிரச்சனை பற்றி எழுதினார்கள். Stalin தனது எழுத்துக்களில் தேசியம் என்பது வெறும் இன, கண தோற்றப்பாடு அல்ல என்றும், அதனை தீர்மானிப்பதாக பிரதானமாக பின்வரும் ஐந்து அம்சங்களை குறிப்பிட்டார்.

பொதுவான மொழி, பொதுவான பிரதேசம், பொதுவான பொருளாதார வாழ்வு மற்றும் ஒரு ஸ்திரமான தொடர்ச்சியான சமூகம் பொதுமைக் கலாச்சார இயல் என்பவற்றையே குறிப்பிட்டார். தேசியம் என்பது குறிப்பிட்ட வரலாற்று சூழ்நிலைகளிடையே ஓர் குறிப்பிட்ட சகாப்தத்தில் அதாவது முதலாளித்துவ வளர்ச்சி மற்றும் பெரும் பூர்சுவாக்களின் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு போராட்டம் என்பவற்றினூடாக உருவாகும் என Stalin குறிப்பிட்டார். இவ்விவாதத்தில் மார்க்சு ஏங்கெல்சு ஆகியோரின் கருத்துக்கு மாறாக Stalin தொழில் துறையின் வளர்ச்சி, தேசிய சந்தையின் தேவை, பொது சந்தையையும் பொதுமைப்படுத்தப்பட்ட மக்கள் கூட்டத்தையும் வேண்டி நிற்பதன் ஊடாக தேச உருவாக்கத்தை விளக்கினார். இத்தோற்றப்பாடு மேற்கு ஐரோப்பாவில் ஆரம்பிக்கப்பட்டு விட்டதென்றும் கிழக்கு ஐரோப்பாவில் பல் தேசிய அரசுகள் உருவாகிக் கொண்டிருந்தாலும் தொழில்துறையின் விசுதரிப்பு மேற்கூறிய எதிர்பார்ப்புகளையே பரவலாக்கும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

இவ்வரையறைக்குள் உள்ள எந்த தேசிய இனமும் தனது சுதந்திரத்தை கோரலாம் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. அதாவது ஜாரிசு மற்றும் உறட்சுபேர்க் (Habsburg empire) சாம்ராஜ்யத்தின் கீழ் உள்ள தேசிய இனங்களும் தேசங்களாக கணிக்கப்படலாம் எனவும் அவை சுதந்திரத்திற்காகப் போராட தகுதி பெற்றவையாகவும் கருதப்பட்டன. ஆனால் Stalin இன் வரையறையானது அப்போதே பல கேள்விகளை எழுப்பியது. ஆசிய நாடுகளில் தேசியங்களின் உருவாக்கம், மற்றும் உதாரணமாக ஆங்கில ஆதிக்கத்திற்கெதிரான சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில் நடந்த Skotland மக்களின் போராட்டத்தை தேசியப் போராட்டம் எனச் சொல்லலாமா? அவர்கள் ஒரு தேசம் அல்ல. வெறுமனே ஓர் தேசியம் மாத்திரமா? என்பவை பிரச்சனையாக இருந்தது.

முன்னர் கூறியது போல் தேசியம் என்பது தொழில் மயமாக்கலுடன் இல்லாமல் போகும் என்றே மார்க்சும் ஏங்கெல்சும் கருதினார்கள். தேசிய வாதம் வர்க்க உணர்வை மழுங்கடிக்கும் என்றும் கருதினார்கள். ஆனால் இன்று தேசியவாதம் பல்வேறு நாடுகளின்

தலைவிதியையும், தொழிலாள வர்க்கத்தின் நிலையையும் தீர்மானிக்கும் சக்தியாக மாறியுள்ளது என்பதுதான் நிதர்சனமான உண்மை.

1848-49 இல் Habsburge சாம்ராஜ்ஜியத்திற்கெதிராக Slav மக்கள் போராடிய போது ஜேர்மன் பேசும் Austria, Magyars களுக்கெதிரான இப்போராட்டம், அவர்கள் சிறுபான்மை இனங்களை கையாண்ட விதத்தில் பெருந்தேசியவாதிகளாக இருந்த போதும் இப்போராட்டம் பிற்போக்குவாதிகள் பயன்பெற உதவுகின்றது என்ற காரணத்திற்காக மார்க்சு, ஏங்கெல்சு ஆகியோர் அப்போராட்டத்தை எதிர்த்தார்கள். அக்காலகட்டத்தில் எல்லா சக்திகளையும் பிற்போக்கு, முற்போக்கு என இலகுபடுத்தி கறுப்பாகவும், வெள்ளையாகவும் பிரித்துப் பார்க்கும் பார்வையே மேலோங்கி இருந்தது. செக், ஜேர்மனி ஆதிக்கத்திற்கு எதிராக போராட்டம் நடத்திய போது செக்மக்கள் ஆண்டாண்டு காலமாக ஒடுக்கப்பட்டுள்ளதை ஏங்கெல்சு புரிந்து அனுதாபப்பட்ட போதும் போராட்டம் வெற்றி பெற்றால் செக் சரியான பாதையில் செல்லுமா எனும் சந்தேகத்தையும் கொண்டிருந்தார். அக்கட்டத்தில் ஜேர்மனி வளர்ச்சியடைந்த நாடாகவும் ஜாரிஸ்ட் ரசியா எதிர்ப்புரட்சிகர மையமாகவும் கருதப்பட்டது. அப்போராட்டத் தலைவர்களின் ரசிய ஆதரவுப் போக்கால், இப்போராட்டம் ரசியாவைப் பலப்படுத்தும் எனவும் எதிர்பார்த்தார். லெனின் தேசிய இனப்பிரச்சனையும் சுயநிர்ணய உரிமையும் என்ற நூலில் ஏங்கெல்சின் இக்கருத்தை ஆதரிக்கின்றார். கோரிக்கைகள் நியாயமாக இருந்த போதும் பிழையான கால கட்டத்தில் கேட்கப்பட்டதென்றும், மற்றய சக்திகளின் வளர்ச்சிப் போக்குகளின் முழுமையான கட்டத்தின் கீழ் பார்க்கும் போது அது பிற்போக்கு தனத்திற்கு உதவுவதாகவுமே இருந்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

போலந்தின் சுதந்திரத்திற்கான போராட்டத்தைப் பொறுத்தமட்டில், கோசம் உணர்ச்சிபூர்வமானதாக (Romantic) இருந்தது மட்டுமல்லாது ஓர் குறிப்பிட்ட அரசியல் சாராம்சத்தையும் கொண்டிருந்தது. "இப்போராட்டம் ஜாரைப் பலவீனப்படுத்தக்கூடியதாக இருக்கும். மேலும் இதனால் ஜேர்மனி ரசிய தலையீடு இல்லாமல் வளரும்" எனவும் மார்க்சு கணித்தார். போலந்து ரசியாவிற்கும் ஜேர்மனிக்கும் இடையில் தடுப்பாக இருக்கும் எனவும் எதிர்பார்த்தார். மார்க்சை பொறுத்த வரையில் போலந்து தனியாக இருக்க முடியுமா என சில சந்தேகங்களும் இருந்தன. இன்னோர் பக்கம் போராட்டத்தை முன்னெடுக்கும் சக்திகள் பொறுப்பற்ற பிரபுக்களினால் முன்னெடுக்கப்பட்டது. இவ்வர்க்கமானது கத்தோலிக்க திருச்சபையுடன் இணைந்து 19ம் நூற்றாண்டு முடியும் வரை இப்போராட்டத்திற்கு முன்னணியில் நின்றது. இச்சக்திகள் நாட்டில் உள்ள மக்கள் அனுபவிக்கும் வரையறுக்கப்பட்ட ஜனநாயக உரிமைகளையும் இல்லாமல் செய்து விடுமோ என்ற சந்தேகம் மார்க்சிற்கு இருந்தது. பின்னர் போலந்தில் விவசாயப் புரட்சி தேசிய விடுதலைக்கு முன்னிபந்தனையானது என்ற வேலைத்திட்டத்தைக் கொண்ட முற்போக்கான ஒரு பிரிவுக்கு மாத்திரம் கம்யூனில்ட் கட்சி அறிக்கையின் இறுதியில் ஆதரவு கொடுக்கப்பட்டது.

பிற்காலத்தில் ஏங்கெல்சு இதைப் பின்வருமாறு வேறு வடிவத்தில் வெளிப்படுத்தினார். அதாவது "போலிசு தேசிய விடுதலையானது எந்த ஒரு சமூக முன்னேற்றத்தையும் சாத்தியப்படுத்த ஒரு முன்னிபந்தனையாக இருக்கிறது. எந்த ஒரு நாடும் அந்நிய ஆட்சியில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்வதை பிரதான இலக்காக கொள்ளாத வரை வேறு விடயங்களில் கவனம் செலுத்துவது கடினமாக இருக்கும். மேலும் சர்வதேச தொழிலாள வர்க்க இயக்கங்கள், சமத்துவமான மக்களிடையே, சுதந்திரமான தொடர்புகள் இருக்கின்ற கட்டத்தில் தான் வளர்வதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளன." (1882 இல் மாசியில் ஏங்கெல்சு கோட்ல்கிக்கு எழுதிய கடிதம்) இங்கு அவர் தேசங்களை பற்றி குறிப்பிடும் போது இன்னும் சாம்ராஜ்ஜியங்களின் பிடியில் இருந்து விடுதலைப் பெறப் போராடுவதையே கருத்தில் கொண்டுள்ளார் என்பதை கவனிக்க.

இதற்கு மேலாக ஏங்கெல்சும் மார்க்சும் அயர்லாந்துப் பிரச்சனையில் அந்த தலைமையினுடைய தேசிய வாதத்திலோ அல்லது தலைமையிலோ பெரிய விருப்பு கொண்டிராத போதும் பிரித்தானிய தீவுகள் முழுவதினதும் முன்னேற்றத்தின் நலனின் அடிப்படையில் அயர்லாந்தினது சுதந்திரமானது முக்கியமானதெனக் கருதினார். சோசலிஸ்ட்டுக்களைப் பொறுத்த வரையில் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்க வேண்டும் என்ற முடிவு இவ் அனுபவங்களுடாக முன்தள்ளப்பட்டது. ஆனால் ஒவ்வொரு போரும் தவிர்க்க முடியாமல் பல்வேறு எதிர்பார்ப்புகளினதும் அபிலாசைகளினதும் கோரிக்கைகளை கொண்டுள்ளது. பழைய பிரச்சனைகளின் பாதிப்புகள், வரலாற்று ரீதியாக வளர்க்கப்பட்ட மனக் கசப்புகள், பீதிகள் என்பவை வெவ்வேறு நாடுகளிலே உள்ள தொழிலாளர்களிடையே உறவை வளர்ப்பதற்கு தடையாக இருந்தன. இவ் உணர்வுகள் பலமாகவும் இருந்தன. இது தொழிலாளி வர்க்கத்தையும் மற்றும் எல்லா வர்க்கங்களையும் பாதித்தது. ஆகவே ஆதிக்கத்தில் உள்ள அரசுகள் அந்நிய எதிர்ப்பு கோசங்களை எப்போதும் உயிரோட்டத்துடன் வைத்திருந்தன. ஓர்புறம் உள்நாட்டுப் பிரச்சனைகளையும், ஏனைய எதிர்ப்புகளையும் அடக்கவும் மழுங்கடிக்கவும் இது அவர்களுக்கு அவசியமாக இருந்தது. இவ்வகையான சிக்கல்கள் எல்லாம் தவறான நிலைப்பாடுகளுக்கு சோசலிஸ்ட்டுகளை ஈடு தூலமான நிலைமைகளில் தள்ளுவதற்கான சாத்தியப்பாடுகளைக் கொண்டுள்ளன.

ரசிய அனுபவங்கள்

ஜாரீஸ்ட் ஒடுக்குமுறைக்குள் தேசிய இனங்கள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் போது, லெனின் ஆதிக்கம் செலுத்தும் தேசிய இனத்தின் சோசலிஸ்ட்டுகள் ஒடுக்கு முறைக்கெதிராகப் போராடும் தேசிய இனங்களின் போராட்டத்திற்கு ஆதரவான நிலையையும், ஒடுக்கு முறைக்கு உட்படும் தேசிய இனங்களின் சோசலிஸ்ட்டுகள் குறுகிய தேசியவாதத்துள் அமிழ்வதை எதிர்க்கும் நிலைப்பாட்டையும் எடுக்கக்கூடிய ஒரு சமநிலையான போக்கை தீர்மானிக்கும் மூலோபாயத்தை உருவாக்க வேண்டி இருந்தது. இது மிகவும் கடுமையான ஒரு விடயமாகும். இதன் பின்னணியில்தான் Stalin இன் மார்க்சியமும் தேசிய இனப் பிரச்சனையும் என்ற நூல் போல்ஷ்விக்குகளின் அன்றைய பார்வையாக முன்வைக்கப்பட்டது. இதில் நாம் எக்கால கட்டத்தில் எந்த சூழ்நிலையில் அது முன்வைக்கப்பட்டது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஒரு புறம் ரசியாவில் தொழில்மயமாக்கல் பரவலாக்கப்படும் அந்தக் கட்டத்தில் 1905 ம் ஆண்டுப் புரட்சியின் தோல்வியின் விளைவாக மறுபுறம் தேசியவாதம் வளர்ந்து வரும் ஒரு சூழ்நிலை இருந்தது. இத்தேசியவாதத்திற்குள் தொழிலாள வர்க்கம் அமிழக்கூடிய நிலையை Stalin இனம் கண்டார். இதற்கெதிரான நிலைப்பாட்டை சோசலிஸ்ட்டுகள் எடுக்க வேண்டும் எனவும் கருதினார். Stalin ஜோர்ஜிய தேசிய இனத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் ஊடாகத்தான் அப்பிரச்சனையை கையாளக்கூடியதாக இருந்தது. இந்த அடிப்படையில்தான் ஆசுதிரிய சோசலிஸ்ட்டுத் தலைவர்களை, அவர்கள் Habsburg empire சாம்ராஜ்ஜியத்தில் உள்ள பல்வேறு தேசிய இனங்களை கையாண்ட விதத்திற்காக Stalin அவர்களை விமர்சித்தார்
அங்கு ஓரளவு கலாச்சார சுயாட்சி கொடுக்கப்பட்ட பின்பும் தேசியவாதப் போக்குகள் தொடர்ந்தும் தொழிலாளி வர்க்கத்தை இணைய விடாது இருந்தது.

பிரிந்து போகும் உரிமையை கொடுப்பதன் மூலமே தற்காலிகமாக பிரிந்து போவதை தடுக்க முடியும் எனக் கருதினார்கள். (தொழிலாளி வர்க்க தலைமையிலான புரட்சியைக் கட்டும் பின்புலத்தில் அதன் வெற்றிக்கான முன்னிபந்தனையாக அதன் முழு லேலைத் திட்டத்தில் ஓர் பகுதியை இணைத்தே அவர்கள் அதனைப் பார்த்தனர்.) இதன் மூலம் வர்க்கப் போராட்டத்தை முதன்மைப் படுத்தி, தேசியப் பிரச்சனையை இரண்டாம் பட்சமாக்கி காலப் போக்கில் தேசியப் பிரச்சனையை இல்லாமல் செய்ய முடியும் என லெனின் நம்பிக்கை கொண்டிருந்தார்.

போலந்துப் பிரச்சனையின் போது சில போலந்து சோசலிஸ்ட்டுகள் குறிப்பாக ரோசா லக்சம்பேர்க் தேசிய வாதத்திற்கு ஆதரவு கொடுப்பது ஒரு பிற்போக்கான செயல் எனவும் ரசிய போலந்து தொழிலாளர்களை ஐக்கியப்படுத்தும் சாத்தியப் பாடுகள் உண்டென்றும் வாதிட்டார். இதற்கு எதிராக லெனின் இரண்டு நாடுகளுக்கிடையேயான ஆரோக்கியமான சேர்க்கை போலந்தின் சுதந்திரத்தை அங்கீகரிப்பதன் ஊடாகவே பெறப்பட முடியும் எனவும் கருதினார்.

1916 ம் ஆண்டு 1ம் உலக மகாயுத்த காலத்தில் எல்லா சோசலிஸ்ட்டுகளும் சுயநிர்ணய உரிமையை கோட்பாடு ரீதியாக அங்கீகரிக்கும் கட்டத்தில் லெனின் திரும்பவும் சோசலிசத்தின் இலக்கு நாடுகளை இணைத்து எல்லா இனங்களையும் இணைத்து ஒரே குடும்பமாக கொண்டு வருவதே என்றும் ஒவ்வொருவருக்கும் தனது பாதையை தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பத்தை கொடுக்காத மட்டும் இது சாத்தியமற்றது என்றும் விவாதித்தார்.

1917 இற்கு பின்னர் பின்லாந்து, போலந்து என்பன பிரிந்து சென்ற பின்பும் பல்தேசிய இனங்கள் சோவியத் ஒன்றியத்தில் சேர்ந்தே இருந்தன. ஆனால் தேசிய உணர்வுகள், முரண்பாடுகள் இல்லாமல் போய்விடவில்லை.

1916 இல் ஜேம்சு கொன்னலி(James Connolly) அயர்லாந்தில் டப்ளின் எழுச்சிக்கு தலைமைதாங்கி தேசிய எழுச்சியுடன் சோசலிசத்தை இணைக்கும் முயற்சியை மேற் கொண்டார். அந்த முயற்சி அயர்லாந்தில் வெற்றி அளிக்கவில்லை. சில ஆசிய நாடுகளிலும் பல ஆபிரிக்க நாடுகளிலும் இனக் குழுக்களின் விருப்பு வெறுப்புகள், அவற்றின் அபிலாசைகள் பல்வேறு பிரச்சனைகளையும் குழப்ப நிலையையும் இன்றைய சோசலிஸ்ட்டுகளுக்கு உருவாக்குகின்றது. ஆனால் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நேரடியாக முகம்கொடுத்து போராட்டம் நடந்த நாடுகளில் தேசியவாதத்திற்கும், சோசலிசத்திற்கும் இணைப்பை ஏற்படுத்தும் முயற்சி ஆரம்பகால வெற்றிகளை ஈட்டியுள்ளது. உதாரணமாக வியட்நாம், சீனா, கியூபா, நிக்கரகுவா ஆகியவற்றை குறிப்பிடலாம்.

ஐரோப்பா போலல்லாமல், ஆசிய நாடுகளில் தேசியவாதத்தையும் சோசலிச வேலைத்திட்டத்தையும் சமாந்தரமாக கொண்டு போக முடிந்தது. சீனா, வியட்நாம் போன்ற நாடுகளில் சோசலிஸ்ட்டுகள் ல்தூலமான தாபனத்தையும் வேலைத்திட்டத்தையும் கொண்டிருந்தனர். இந்தியா இதற்கு விதிவிலக்காக இருந்தது. பிரித்தானிய ஏகாதிபத்தியம் சில அரசியல் சகிப்பு தன்மையுடாக ஒரு லிபரல் தேசிய இயக்க வளர்ச்சிக்கு இடமளித்தது. இந்திய மார்க்சிஸ்டுகள் மத்தியில் லிபரல்களுடன் இணைந்து போவதா இல்லையா என்னும் குழப்பம் இருந்தது.

மார்க்சில்டுகள் தமக்கென ஒரு இடத்தைப் பிடிக்க முடியாமைக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

காலங்காலமாக ஏற்பட்ட ஒடுக்குமுறைகள், கசப்புகளை ஒரு சமூகம் விரைவில் மறந்து விடுவதில்லை. பூர்சுவா தலைமைகளும் இவற்றை மையப்படுத்தியே தமது இருப்பை பேண முனைகின்றன. சிறுபான்மை தேசிய இனம் தேசிய வெறிக்குள் விழாமல் இருக்க வேண்டுமென்ற சிறுபான்மை இனத்தின் சோசலில்டுகளின் நிலைப்பாட்டையும் மீறி குறுந்தேசிய வெறிக்குள் வீழ்ந்துள்ளதை வரலாற்றின் பல அனுபவங்கள் காட்டுகின்றன. தேசிய இனங்களிடையே பரசபரம் இனவெறியை வளர்ப்பது ஏகாதிபத்தியத்தின் பிடியை இறுக்கமாகவே செய்யும். இது தேசிய வாதத்தையும் சோசலிசத்தையும் இணைப்பதென்ற விடயத்திற்கு எதிரானதாகும்.

காலனித்துவ எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டக் காலகட்டம்:

சோவியத் புரட்சிக்கு பின் மூன்றாம் உலக நாடுகளில் ஏற்பட்ட காலனித்துவ எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்கள் ஓர் மட்டத்தில் சோசலில்டுகளுக்கு, தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்களிப்பதற்கு மட்டுமல்ல அதனை தமது கருத்தமைவின் மேலாதிக்கத்தில் முன்னெடுத்து செல்வதற்கான வாய்ப்புக்களை சோவியத்யூனியனின் இருப்பு என்னும் புறநிலை யதார்த்தம் ஏற்படுத்திக் கொடுத்தது. மேலும் சோவியத் யூனியனின் பொருளாதார மற்றும் பல்வேறு தார்மீக உதவிகள் இவற்றுக்கு மிகவும் உதவிகரமாக இருந்தது. ஆனால் இன்று புறநிலையில் நம்பிக்கை கொடுக்க முடியாத, நடைமுறையில் சோசலிச நாடுகள் என்று கருதிய நாடுகளின் சிக்கல்களின் (Crisis) யதார்த்தமே எஞ்சியுள்ளது.

எனவே தேசியம் பற்றிய பிரச்சனை தொடர்பாக மார்க்சு காலத்தில் இருந்து நவகாலனித்துவ தேசங்கள் உருவாகிய காலம் வரை நாம் சுருக்கமாகப் பார்ப்போமாயின் தேசியப் போராட்டங்கள் பற்றி வெவ்வேறு கருத்துக்கள் இருந்து வந்ததை நாம் அவதானிக்கலாம்.

முதலாளித்துவத்தின் ஆரம்ப கட்டத்தில் அதன் வளர்ச்சி விதிகளின் அடிப்படையில் மார்க்சு ஆய்வு செய்தபோது அந்தக் கட்டத்தில் உள்ள சாம்ராஜ்ஜியங்களை முற்போக்கு, பிற்போக்கு என அவர் முடிவு செய்ததற்கேற்ப தேசியப் போராட்டங்களை நோக்கினார். அதன் சாதக பாதகமான அம்சங்கள் பற்றிய கருத்துக்களை முன்வைத்தார்.

முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் விளைவாக உருவாகிய ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சிக் கட்டத்தில் லெனின் தேசியம் பற்றிய தனது கருத்துக்களை முன்வைத்தார். ரசிய சாம்ராஜ்ஜியத்தில் சோசலிசப் புரட்சிக்கு முன்னர் ஜனநாயகப் புரட்சியின் தேவையை லெனின் உணர்ந்திருந்த அடிப்படையிலேயே வேலைத்திட்டத்தை வகுத்திருந்தார். இதற்காக ஜாரின் சாம்ராஜ்ஜியத்தில் உள்ள பல்வேறு தேசிய இனங்களையும் ஒரு பொதுநோக்கில் ஐக்கியப்படுத்த வேண்டி இருந்தது. இந்த அடிப்படையில் லெனின் தனது தேசியம் பற்றிய கோட்பாட்டை முன்வைக்க வேண்டிய தேவை லெனினுக்கு இருந்தது. வளர்ச்சி அடைந்த நாடுகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சி ஏற்படுவதனூடாக ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சி பற்றிய அதீத நம்பிக்கையின் பின்னணியில் சுயநிர்ணய உரிமை பற்றிய கோட்பாட்டை பாட்டாளி வர்க்கப் புரட்சியை உந்துவதற்கு சாதகமானதாக கருதியதில் தவறேதுமில்லை. இப்புரட்சிகள் பற்றிய நம்பிக்கையில் உழைக்கும் மக்கள் ஐக்கியப்படுவர். பூர்சுவா வர்க்கம் காலப்போக்கில் இல்லாது போகும் எனவும் கருதினார். இந்தப் பின்னணியிலேயே ஏகாதிபத்திய நாடுகளுக்கு எதிரான காலனித்துவ நாடுகளின் போராட்டம் ஏகாதிபத்தியங்களை பலவீனப்படுத்தும் என்ற அடிப்படையில் காலனித்துவ நாடுகளின் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களை சர்வதேச பாட்டாளிவர்க்க புரட்சியின் பகுதியாக இனம் கண்டார். இங்கு தேசிய விடுதலைப் போராட்டங்கள் என்று லெனின் கருதியது குறிப்பாக கீழைத்தேய நாடுகளின் போராட்டங்களையே.

இதே வேளை 1917 ம் ஆண்டு தொடக்கம் 2வது உலகயுத்தம் வரையிலான காலப் பகுதியில் சோவியத் கம்யூனில்ட் கட்சிக்கு தனது அரசையும் நாட்டையும் பாதுகாக்க வேண்டியது முக்கிய பிரச்சனையாக இருந்தது. சர்வதேச பாட்டாளி வர்க்க கட்சிகளும் இதையே முக்கிய கடமையாக கருதின. சோவியத்யூனியன் தனது சர்வதேச கோட்பாட்டை இப்பிரச்சனையின் பின்னணியிலேயே வகுத்துக் கொண்டது.

போல்சுவிக் கட்சியும், லெனினுடைய புகழும் இயற்கையாகவே, வெற்றிகரமான சோவியத் புரட்சியை தொடர்ந்த காலத்தில் உலகில் உள்ள சகல ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியிலும் அதிக மதிப்பை பெற்றிருந்தது. அப்போது உலகப் புரட்சியின் மீது அதீத நம்பிக்கை கொண்டிருந்த கட்டம். 1919 ம் போல்சுவிக் கட்சி புதியதொரு சர்வதேச தாபனத்தின் தேவையை பறைசாற்றி 1920 இல் 3வது அகிலம் மிகவும் உற்சாகமான ஒரு சூழலில் உருவாக்கப்பட்டது. இயற்கையாகவே சோவியத் கம்யூனில்ட் கட்சியின் ஆதிக்கம் அதில் சர்வ வியாபகமானது என்பது வெளிப்படை. காலப்போக்கில் சோவியத் கம்யூனில்ட்கட்சியின் உள் முரண்பாடுகளின் வெளிப்பாடுகள் சர்வதேச தாபனத்தின்

நிலைப்பாடுகளில் வெளிப்பட்டது. மேலும் ஜேர்மனியில் அரசியல் சக்திகளை கணிப்பிடுவதிலும், காலகட்டத்தை புரிந்து கொள்வதிலும் விட்ட தவறுகள். எதிர்மாறான முடிவுகள் என்பவற்றுக்கு சோவியத் யூனியனின் தேசியநலனின் பின்புறத்தில் இருந்து எடுக்கப் பட்டதும் காரணமாகும். இது நடைமுறையில் காரியவாதக் கண்ணோட்டத்தில் பின்னணியிலேயே உருவானது. ஆகவே மூன்றாவது அகிலத்தின் பார்வையை பிரதானமாக தீர்மானித்தது இதுவே. உதாரணமாக சோவியத் கம்யூனில்ட்கட்சியும் மூன்றாவது அகிலமும் சீனாவுக்கு வழங்கிய ஆலோசனை சீனக் கம்யூனில்ட் கட்சியை பாசிச எதிர்ப்பு யுத்தம் என்ற அடிப்படையில் கோமின்டாங்குடன் நிபந்தனை எதுவுமின்றி சேரும்படி நிர்ப்பந்தித்தது. நிபந்தனை அற்ற முறையில் தாபனம் பலமில்லாத நிலையில் கோமின்டாங்குடன் ஐக்கியப்பட்டு - 1926 - 27 இல் சியாங்கை சேக்கின் அரச அமைப்புடன் - சங்காய் ஒடுக்கு முறையுடனும் பல படுகொலைகளுடனும் கட்சி நிர்மூலமாக்கப் பட்டது. இப்படிப்பினைகளில் இருந்தே பின்னர் மாவோ தலைமையில் அன்றைய சூழ்நிலைகளை கவனத்தில் கொண்டு தாபனம் வேரூன்றக் கூடியதற்கான வேலைத்திட்டமும், புதிய கொள்கைகளும் வகுக்கப்பட்டன.

ஐரோப்பிய நாடுகளில் அந்தந்த நாட்டுக் கம்யூனில்ட் கட்சிகள் சோவியத் செஞ்சேனையின் உதவியுடன் ஆட்சியைப் பிடித்தன. இதனால் முதலாளித்துவத்திற்கு எதிராக சோசலிச நாடுகளில் பலமான இருப்பு - வெளித் தோற்றத்தில்- இருந்தது. சீனப்புரட்சியும் மற்றும் பல நாடுகளின் எழுச்சிகளும் ஏனைய நாடுகளுக்கும் உற்சாகத்தையும் நம்பிக்கையையும் கொடுத்தது. இது புரட்சி வெற்றி பெறுவது தவிர்க்க முடியாதது என்பதை ஏகாதிபத்திய நாடுகளுக்கு உணர வைத்தது. இவையும் முதலாளித்துவ நாடுகளின் ஆளும் வர்க்கங்களின் அரசியல் நடைமுறையில் பல தாக்கங்களை ஏற்படுத்தின. உள்நாட்டில் பல சீர்திருத்தங்களை ஏற்படுத்தின மேலும் பல ஆசிய ஆபிரிக்க நாடுகள் "அரசியல் சுதந்திரம்" அடைய உந்து சக்தியாகின. இருப்பினும் பொருளாதார ரீதியாக மூன்றாம் உலக நாடுகளில் தமது பிடியை ஏகாதிபத்தியங்கள் வைத்திருந்தன. காலனித்துவ வரலாறுகளினூடாக இந்நாடுகளின் சமூக வளர்ச்சி புதிய சிக்கலான நிலைமைகளுக்கு உட்படுத்தப்பட்டது. புதிய வர்க்கத் தோற்றங்கள், மேலும் பழைய வர்க்கங்கள் தேவைக்கேற்ப சில அம்சங்களில் பலமிழக்கப்பட்டும் பல அம்சங்களில் பலமூட்டப்பட்டும் காலனித்துவ உற்பத்தி உறவு முறை அடித்தளமிடப்பட்டது.

மார்க்சு நினைத்தது போல ஏகாதிபத்திய நாடுகள் காலனி நாடுகளில் நிலப்பிரபுத்துவத்தை உடைத்தெறிந்து முதலாளித்துவத்தை தங்கு தடையின்றி வளர்க்கவில்லை. மாறாக நிலப்பிரபுத்துவத்தை பல இடங்களில் தனது நலனிற்கேற்ப நிலைபெற செய்தது. காலனி நாடுகளில் முதலாளித்துவ வளர்ச்சி ஒரு விகாரப்பட்ட முறையில் செயற்கைத் திணிப்பின் ஊடாக தோற்றுவிக்கப்பட்டது. ஏகாதிபத்தியங்களின் பொருளாதாரப் பிடி மூன்றாம் உலக நாடுகளில் பல்வேறு வகையான பொருளாதாரத் தன்மைகளை ஏற்படுத்தியது. நவகாலனிப் பொருளாதாரம், குறைவிருத்தி பொருளாதாரம், தங்கு நிலைப் பொருளாதாரம் என பல்வேறு பெயர்களினால் அழைக்கப்பட்ட போதும் மூன்றாம் உலகநாடுகளில் ஏற்படும் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு அந்தந்த நாட்டு ஆளும் வர்க்கங்கள் தீர்வு காண முடியாமல் பலமற்ற நிலையில் இருந்தன. புறநிலையான ஏகாதிபத்தியங்களும், பொருளாதார ரீதியான சுரண்டல்களும் தொடரும் வரை அதாவது உலக பொருளாதார அமைப்பில் உள்ளார்ந்த முரண்பாடுகள் இருக்கும் வரைக்கும் ஓர் தனிநாட்டிலோ அல்லது உலக ரீதியாகவோ ஏற்படும் எத்தகைய சிக்கல்களுக்கும் ஏதோ ஓர் விதத்தில் நாம் அம்முரண்பாடுகளுடன் தொடர்புகளை காண முடியும். ஆனால் அம்முரண்பாடுகளுக்கும் அப்பால் சுயாதீனமான முறையில் அவ்வெளிப்பாடுகள் அரசியல் ரீதியாக வெளிப்படுவதற்கு வேறு அடிப்படைக் காரணங்களும் உண்டு. தனியே வெற்று மந்திரமாக பொருளாதாரக் காரணிகளை மட்டும் உச்சரிப்பது மிகவும் வெளிப்படையான உண்மையை அருவநிலையில் சிலாகிப்பது போன்றதாகும். ஒரு லதூலமான நிலையில், ல்தூலமான பல்வேறு காரணிகளையும் இனம் கண்டு கொள்வதே இன்றியமையாதது.

மேலும் அதன் மூலமாக ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் அகபுற நிலை சக்திகளின் வளர்ச்சி மட்டத்தை கணக்கிற் கொண்டு முன்னர் கூறிய பொதுவான அடிப்படை முரண்பாட்டை தீர்க்கும் நோக்கில் வெளித்தோன்றுகின்ற முரண்பாடுகளை இணைப்பதற்கு உள்ள சாத்தியப்பாடுகளை ஆராய்வது அவசியம். வரலாற்றின் ஒவ்வோர் கட்டத்திலும் அச்சாத்தியப்பாட்டிற்கான உள்ளார்ந்த வலு(Poteutial) இருக்கத்தான் செய்யும். ஆனால் அதனையும் விட வரலாற்று சமூகக் காரணிகள் வேறு திசையில், அவ் முரண்பாட்டின் தீர்வை எதிர்க்கும் திசையில் அதாவது பிற்போக்கு அரசியலை, இருப்பில் உள்ள சமூக பொருளாதார அமைப்பை இறுக்கமாக்கும் போக்கிற்கான உள்ளார்ந்த வலுவும் (Poteutial) அதிகமாக இருக்கலாம். அதனை இனம் காணாது அல்லது அதற்கு எதிராக சரியான புரிந்துணர்வுடன் செயற்படாத வரையில், செயற்கையான முறையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு, புரட்சி விடுதலை எனும் கோசங்களின் பின் உண்மையில் மக்களை வெறும் இனம், மத உணர்வுகளுக்குள் ஆழ்த்தி சவாரிவிடும் படு பிற்போக்கான அரசியலுக்கு முண்டு கொடுக்கும் கைங்காரியத் தையே இறுதி ஆராய்வில் செய்வதாக முடியும்.

இன்றைய யதார்த்தம் என்ன?

இங்குதான் நாம் ஏகாதிபத்திய எதிர்ப்பு, விடுதலை,புரட்சி என்பவற்றின் தார்பரியத்தை ஆழமாக ஆராய முற்படவேண்டும். அவற்றிற்கான உரைகள் என்ன? இன்று தேசிய விடுதலைப் போராட்டத்தின் சாராம்சம் என்ன? ஈழம் என்பதன் அரசியல் சாராம்சம் என்ன? போன்ற இன்னோரன்ன கேள்விகளுக்கு முகம் கொடுக்க வேண்டும். ஈழம் என்பது மக்களின் விடுதலை என்னும் இலக்கினை நோக்கிய பாதையில் எமது நாட்டின் சில பிரத்தியேகமான சமூக அரசியல் வளர்ச்சிப் போக்கின் ஓர் குறிப்பிட்ட கட்டத்தில் தோன்றிய ஒரு விடயப் பொருள் ஆகவே மார்க்சிய வாதிகளால் கருதமுடியும். மாறாக ஈழம் என்பதை விறைப்பான ஒரு இலக்காகக் கொள்ளுதல் ஈழத்தின் தோற்றமும், மக்கள் விடுதலையும் சாராம்சத்தில் ஒன்று என்ற தவறான முடிவுக்கு இட்டுச் செல்லும். ஆகவே ஈழம் என்பது மக்களின் விடுதலைக்கு உத்தரவாதம் செய்ய முடியாத அல்லது மக்களின் விடுதலைக்கு முற்றும் எதிரானதாக மாறும் போதும் அதனை இறுகப்பற்றி அதில் உள்ள உறுதித்தன்மையே புரட்சியின் அல்லது மக்களின் விடுதலையின் உரைகளாகப் பார்க்கும் நிலை தவறானதாகும். உண்மையில் குறுகிய இன மத உணர்வுகளின் அடிப்படை வாதத் தன்மைகளின் கண்மூடித்தனமான விடாப்பிடியான போக்கை, அதாவது சில கருத்தமைவுகளின் ஆழமான பிடி பற்றிய புரிந்துணர்வு இன்மையாலேயே இத்தவறு ஏற்படுகின்றது.

இத்தகைய விறைப்பான கருத்தமைவுகளை வெறும்பிரச்சாரத்தால் மட்டும் முறியடிக்க முடியாது. அவற்றின் பலத்தை ஆழமாகப் புரிந்து கொண்டு மேலோட்டமாக உதாசீனப்படுத்தாது அல்லது சிறுபிள்ளை விளக்கங்களை கொடுக்காது அதற்கெதிராக போராடுவது இன்றியமையாததாகும். அத்தகைய கருத்தமைவும் மக்களின் விடுதலை என்ற பெயரில் மேலும் மேலும் மக்களை பலமற்றவர்களாக மேலும் மேலும் புறநிலையில் ஏகாதிபத்திய பிற்போக்காளர்களின் கைப்பொம்மை ஆக்குவதிலேயே இறுதியில் இட்டுச் செல்லும் என்பதில் எமக்கு குழப்பங்கள் இருக்க முடியாது. ஆனால் அக்கருத்துகள் வேரூன்ற சாதகமாக இருந்த அம்சங்கள், புறநிலை ஒடுக்குமுறைகள் இவற்றைக் கணக்கில் எடுத்து, அப்புரிந்துணர்வுடனேயே நாம், தலைவிரித்தாடும் ஆதிக்க அரசியலுக்கு முகம் கொடுக்க வேண்டும். மேலும் நடைமுறையில் வெற்றுக் கோசங்களின் பின்னணியில், சாராம்சத்தில் பிற்போக்கான அரசியலின் வெளிப்பாடுகள் விடுதலை என்பதற்கு எதிராகவே பல்வேறு நடைமுறைகளை கொண்டிருக்கும். அதை இனம் கண்டு கொள்ள மக்களின் உண்மை நிலையை அதாவது அவர்களின் உள்ளார்ந்த வலு ஓர் குறிப்பிட்ட கட்டத்தில் எத்திசையில் வளர்த்தெடுக்கப்படுகிறது, அல்லது பயன்படுத்தப்படுகிறது என்பதை இனம் கண்டு கொள்வதிலேயே தங்கியுள்ளது.

ஓர் குறிக்கப்பட்ட சூழலில் இலங்கையின் தேச நிர்மாணம் என்ற போக்கில் இலங்கை பெரும்பான்மை ஆளும் வர்க்கம் தனது இருப்புக்காக வளர்த்த பௌத்த சிங்கள இனவாதம், புறநிலையாக ஈழத் தேச நிர்மாணத்திற்கான கருத்தமைவின் சாத்தியப் பாட்டின் ஓரத்திற்கு இலங்கைத் தமிழ் மக்களை தள்ளியது. ஆனால் ஈழத் தேச நிர்மாணத்திற்கு மாறாக, எமது போராட்ட நிகழ்வுப் போக்குகளில் தேச நிர்மூலம் மிக அதிவேகமாக நடைபெற்றதென்பதே அடிப்படை உண்மை. ஆகவே ஈழம் எனும் சாத்தியப்பாடு மக்கள், தேசம் எனும் நோக்கில் ஏகாதிபத்திய எதிர்ப்பு நோக்கில் அர்த்தமற்றதாகிவிட்டது. ஆனால் மக்கள், விடுதலைப் போராட்டம் என்பவற்றிற்கான சரியான உரைகல்லை விடுத்து இன்று ஈழம் என்பதற்கு அர்த்தம் கொடுக்க முற்படின் அது பொருளாதார சமூக நிலைமைகளில் மக்களின் நலனிற்கு முற்றிலும் மாறானதான நிலையில் செயற்கை உருவாக்கம் பெறுவது ஒருவேளை சாத்தியப்படலாம். அவ்வாறான தேசங்கள் உருவாக்கப்பட்டுமுள்ளன. உதாரணமாக இசுரேல். ஆனால் அத்தேச உருவாக்கத்தின்போது கூட எமது போராட்டத்தைப் போன்ற சுய அழிப்புத்தன்மையை எவ்வளவு தூரம் அதன் தலைமை சியோனிச கருத்தமைவின் பிடிக்குள் இருந்தும் கூட காணமுடியவில்லை.

எமது போராட்டத்தில் சக தோழர்களின் வாழ்வு பற்றிய எதுவித அக்கறையுமின்றி மூர்க்கத்தன மாக மக்களின் வலுவிற்குப் (will of the people) பதில் துப்பாக்கியின் வலுவின் (will of the gun) நிழலில், பொறியில் இட்ட பலமிழந்த மக்கள் கூட்டத்தை திக்குத் திசை இன்றி வெற்று இலக்கைக் காட்டி அழித்தொழிக்கின்றது. எந்தவித பாசாங்குமின்றி, விடுதலை அல்லது மக்கள் பற்றிய எந்தவித நெறிமுறைத் தார்மீக தடுப்புகளுமின்றி வெறுமனே தனது அழித்தொழிக்கும் ஆற்றலை நெறிமுறைப்படுத் துவதிலேயே இவ் அரசியல் தற்காலிகமாக தனது பிடியினை வைத்துள்ளது. அல்லது தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. அதன் இருப்பை அல்லது இயக்கத்தை உந்துகின்ற சக்திகள் யாவை? சர்வதேச ரீதியில் விடுதலை, மனித நேயம் போன்றவற்றின் வெளிப்பாடுகளாகத் தொழிற்படும் சக்திகள் இன்று கண்மூடித்தனமாக எமது போராட்டத்தை ஆதரிக்க தயாராக இல்லை. சர்வதேச ஆயுத வியாபாரிகளும், பல்வேறு உளவு தாபனங்களும் கடத்தல்காரர்களுமே இந்த இராணுவ இயந்திரத்துக்கு எண்ணை வார்க்கிறார்கள் என்பது வெளிப்படையாக தெரிய வர அதிக நாட்கள் செல்லாது.

இன்று விடுதலைப் புலிகளின் மதரீதியான நம்பிக்கை, மாற்றுக் கருத்துடையோரை அழித்தொழிக்கும் பாணியில் சிந்தனாரீதியாக

வளர்த்தெடுத்த ஊழியர்கள், இவையெல்லாவற் றையும் "முதலாளித்துவதேசியவாதம்", "தேசிய முதலாளித்துவ சக்திகள்" என்றவற்றிற்குள் மாத்திரம் விளக்கிவிட முடியாது. மேலும் தமிழ் மார்க்சிஸ்ட்டுக்கள் மத்தியில் தமிழ் ஈழப் போராட்டத்திற்கூடாகவே எல்லாப் பிரச்சனைகளையும் பார்க்கும் குறுகிய பார்வையே காணப்படுகிறது. அதனால் தான் சிங்கள மார்க்சிஸ்ட்களை பற்றி வெறுமனே நையாண்டி பண்ணும் போக்கு காணப்படுகின்றது. சிங்களப் பேரினவாதத்துடன், தென்பகுதி மார்க்சியவாதி களில் ஒரு பகுதியினர் சரணாகதியடைந்தது அல்லது முகம் கொடுக்க முடியாதிருந்தது பிரச்சனையின் ஓர் பகுதி வெளிப்பாடு. அவர்கள் சிங்களப் பேரினவாதத்திற்கு உயிரோ ட்டமாக முகம் கொடுக்க முடியாமலிருந்ததற்கு பல காரணிகள் உண்டு. அது பற்றிய பொறுப்பான ஆராய்வுகள் இல்லாதபோது ஏதோ சிங்களவர்களின் பிறப்புக் குணாம்சம் போல் காண்பிக்கும் பாணி எமது பகுதியில் அதுவும் குறிப்பாக தமிழீழப் போராட்டத்தினூடாக மார்க்சியத்திற்கு அறிமுகமான எமது தமிழ், இளைஞர்கள் மத்தியில் காணப்படுகிறது. ஆனால் அவர்கள் தாம் எவ்வளவு தூரம் குறுகிய தமிழ் தேசிய வாதத்திற்குள் அமிழ்ந்துள்ளார்கள் என்பதை புரிய முடியாதுள்ளனர். பரந்த உலகப் பார்வையோ, சர்வதேச அரங்கில் நடைபெற்று வரும் மாற்றங்களை ஆராய்வதற்கான ஆழமான பார்வையோ இன்றி மேதாவித்தனமாக கிளிப் பிள்ளைப் பாணியில் பிரதான எதிரி, இரண்டாம் எதிரி, முதலாளித்துவ ஜனநாயகம், ஏகாதிபத்தியம், திரிபுவாதம் என பிரல்தாபிக்கும் இவர்கள், இன்று உலகில் சோசலிச கருத்தமைவு மேலாதிக்கத்திற்கு வரமுடியாது இருப்பதும் அதற்கான முனைப்பில் ஏற்பட்ட தந்திரோபாயத் தவறுகள் மட்டும் அல்ல என்பதை இனம் கண்டு கொள்ள மறுக்கின்றனர் இவர்கள் அரசியலை ஒரு கலையாக "சரியான அரசியல்" என்பது பற்றி சிலாகித்துக் கொண்டு "கெட்டித்தனமானவர்களாக" காண்பிப்பது ஒரு போக்காக வந்துள்ளது. இவர்கள் மார்க்சின் பார்வையின் வளர்ச்சியையோ, அவரது "மானிட விடுதலைக் கோட்பாடுகளையோ அறியாதவர்களாக உள்ளனர். மாவோவின் முரண்பாடு பற்றிய புத்தகத்திற்கு அப்பால் மார்க்சீய தத்துவத்தை கிரகித்தவர்களாக தெரியவில்லை. இதனடிப்படை அவர்களது ஆராய்வில் ஈழம் எனும் தேசம் சிங்கள ஏகாதிபத்தியத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டதான குறுகிய தமிழ்த் தேசிய வாத அணுகுமுறையின் சாயல்கள் தெரிகின்றன. இங்கு தமிழ் தேசிய முதலாளித்துவம், தரகு முதலாளித்துவம் என்பன இலங்கை அரசில் உள்ள அல்லது தென்பகுதி பொருளாதாரத்துடனான தொடர்பினூடாக தீர்மானிக்க முயல்வது, உண்மையில் வர்க்க ஆராய்வு என்பது உற்பத்தி நிகழ்வுப் போக்கில் வகிக்கும் பாத்திரத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது என்பதற்கு முரணாவதாக காணப்படுகின்றது. உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் சர்வவியாபகத்தன்மை, அவ்விசுதரிப்புக்கு ஏகாதிபத்திய தோற்றத்தின் பங்களிப்பு அதில் இலங்கையின் பொருளாதார பிணைப்பு இவற்றின் பின்னணியில் ல்துாலமான இலங்கை உற்பத்தி நிகழ்வுப் போக்கில் பல்வேறு வர்க்கங்களின் இன்றைய நிலை என்பவற்றை புரியமுயலவேண்டும். தரகுத்தன்மை என்பது எல்லா சமுதாய அமைப்புக்களிலும் காணக்கூடியது. தரகு தன்மையை அல்லது தமிழ்த்தலைமையின் சரணாகதி, ஒத்துழைப்பு இவற்றை மட்டும் கொண்டு அவை "தரகு முதலாளித்துவம்" என்பது தவறு. இத்தகைய பார்வைக்கும் எட்டப்பன், தேசவிரோதி, துரோகி எனும் புலிகளின் பார்வைக்கும் அதிக வித்தியாசமில்லை. மினுக்கமான சொற் தொடர்களை தவிர, தமிழ்தலைமை ஏகாதிபத்திய சார்புளது என்பதும் இன்றும் எமது போராட்டம் ஏகாதிபத்திய சார்பு உள்ளடக்கத்தையே கொண்டுள்ளது என்பதும் மிக வெளிப்படை. இப்பின்னணியில் எமது போராட்டம் யாரின் நலனை பிரதிபலிக்கின்றது, என்பதை இனம் கண்டு கொள்ளுதல் அவசியமாகும்.

புலிகளின் அரசியல் இந்தியாவின் மேலாதிக்கத்திற்கெதிராக உள்ளது. சிறிலங்கா அரசிற்கு எதிராக உள்ளது என்போர், அது மக்களின் நலனிற்கு எதிராக் கறாராக தொடர்ந்தும் இருக்கும் விடாபிடித்தன்மையை ஏன் இனம் கண்டு கொள்ள மறுக்கின்றனர். அதனைப் புரிந்து கொண்டால் சிறிலங்கா அரசிற்கு எதிரானது இந்திய அரசிற்கு எதிரானது எனும் அம்சங்கள் எல்லாம் காலத்திற்கு காலம் சரணாகதியடைந்த தன்மைகளையும், அக்கட்டங்களில் ஏகாதிபத்தியத்தின் நலனைக்கூட பிரதிபலித்ததையும் இனம் கண்டு கொள்ளலாம். பல்வேறு சீரழிந்த இயக்கங்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையேயான வேறுபாட்டை புரிந்து கொள்ளும் போது தான் மற்றய சக்திகள் மக்களிற்கு தலைமை கொடுக்கத் தகுதியல்லா இயக்கங்களாக இருந்தாலும் மக்களை தொடர்ச்சியாக மந்தைகளாக்கி மிகவும் பலவீனர்களாக்கி தாபன, அரசியல் தமிழ் இனவெறிக் கருத்தமைக்குள் இறுக்கமாக வைத்திருக்கும் ஆற்றல்களைப் பெற்றிருக்கவில்லை என்பது புரியும். அத்திசையில் வளர்க்கப்படவும் இல்லை. அவர்களை மக்களால் தூக்கி எறிவதற்கான இடைவெளியை மூடவோ அல்லது தமது தாபனத்திற்குள்ளேயே இடைவெளியை முற்றாக மூடும் ஆற்றலோ இல்லாதவர்களாகவே இருந்தனர். எனவே விரக்தியுற்ற சக்திகள், நல்ல சக்திகள் வெளியேறவும் சரியானதை தேடவும் முயற்சித்தன. ஆனால் அவர்கள் புலிகளை நோக்கி அலை அலையாக செல்லவில்லை. ஆகவே இன்று தமிழீழ விடுதலைப் போராட்டமானது புலிகளின் அரசியலின் பலனாக சர்வதேச ரீதியில் மானிட விடுதலையை நேசிக்கும் சக்திகளிடம் இருந்து பிரிந்து சுனினிமைப்படுத்தப்படடும் ஈழத்தில் மக்கள் பலவீனப்படுத்தப்பட்டும் இறுதி ஆராய்வில் சிறிலங்கா அரசிற்கும், ஏகாதிபத்தியத்திற்கும் சாதகமான

→ பக்கம் 38 ல்

சினிமா:

நகைச்சுவையும் நலினப்படும் எமது ரசனையும் .....

O தம்பி உந்த தின்னையையும் பாயையும் ஒருக்கா கொண்டுவாரும்.

O அஞ்சு சதத்துக்கு கொஞ்சம் லாம்பெண்ணை.

இவை போன்று இன்னும் பல சொற்றொடர்கள் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு நகைச்சுவை என்று என் காதில் விழுந்தன. இதில் அஞ்சு சதத்துக்கு கொஞ்சம் லாம்பெண்ணை என்று. . . என்னை விரைவாகச் சொல்லும்படி தூண்டிவிட்டவர்களும். . . எப்படியோ என் தகப்பனாருக்கு இது தெரிய வந்து வேலி வாதராணித் தடி முறிய என் முதுகு சிவந்தும் சிறுபராய மனப்பதிவுகள்.

அதுசரி; எதற்காக இந்த இராமாயணம் என்று அலுத்துக் கொள்கிறீர்களா ? சரி நேரடியாக விசயத்துக்கு வருகிறேன். எந்த இரட்டை அர்த்த வசனங்களை சிறுவயதில் நகைச்சுவை என்று கருதினேனோ இதைவிட தரம் இழந்தவைகளும் கீழானவைகளும்தான் இன்றைய தமிழ் சினிமாவில் நகைச்சுவை ஆகிவிட்டன.

வேற்று நாட்டு அகதி வாழ்வில் நம் விடலைகள் கலை கலாச்சாரம் என்று மலிவாக பார்க்கக் கிடைப்பது தென்இந்திய திரைப்படத்துறையின் உற்பத்திகள்தான். இத்தகைய சினிமாவில் இருந்து நம் குழந்தைகளும் விடலைகளும் எதைப்புரிந்து கொள்கிறார்கள் ?

விசனப்பிடவைக்கும் இன்னுமோர் அம்சம் : இயல்பில் நகைச்சுவை உணர்வு அற்றவர்கள் நகைச்சுவை கலைஞர்கள் என்று - செந்தில் கவுண்டன். . . போன்றோர் - சினிமாவில் கூத்தடிப்பது அருவருப்பை உண்டு பண்ணுகிறது. - ஒருசில படங்களில் அத்தி பூத்தாற்போல் சில நகைச்சுவைகள் வெளிவந்துள்ளனதான். இவையும் அந்த படஇயக்குநர்களின் தரத்தைப் பொறுத்ததே.

N. S. கிருஷ்ணன், சந்திரபாபு, தங்கவேலு, கருணநிதி, நாகேசு போன்றவர்கள் தமிழ் திரைப்பட நகைச்சுவை வரலாற்றில் குறித்துக் கொள்ளப்படுபவர்கள். குறிப்பாக N.S. கிருஷ்ணன், சந்திரபாபு இவர்கள் நகைச்சுவைக் கலைஞர்களாக மட்டுமன்றி அரசியல் பிரக்ஞை கொண்டவர்களாக இருந்ததும் கோடிட்டுக் காட்டப்படவேண்டியவை. மனிதனை சிரிக்கவைப்பதோடு சிந்திக்கத் தூண்டும் வல்லமை கொண்டதுதான் நகைச்சுவை. இதுவும் ஓர் சிறப்பான கலை. சிரிக்கத் தெரிந்த மனிதன் சிந்திக்கிறான். மனசு நிறைந்து சிரிக்கும் மனிதன் நீண்ட ஆயுளைப் பெறுகிறான் என மானுட ஆய்வியலாளர்கள் சொல்கின்றனர்.

கடினமான விடயங்களையும் நகைச்சுவையூடாக - வாழைப்பழத்தில் ஊசியைப் புகுத்துவது போன்று - சொல்லஇயலும். இதை சப்ளின் என்ற கலைஞன் நிரூபித்தும் காட்டினான். நூற்றாண்டைக் கடந்தும் இந்தக் கலைஞனின் பெயர் உலகம் முழுவதும் வியாபித்திருக்கின்றது என்றால், உலக வரலாற்று சாதனையாளர்களின் வரிசையில் ஒருவராக பொறிக்கப்பட்டிருக்கிறான் என்றால் இந்த சப்ளின் வெறும் நகைச்சுவை கலைஞனாக மட்டுமன்றி நல்ல சமூகப் பொறுப்புடைய / அரசியல் பிரஞ்ஞைபுடைய ஒரு "உயர்ந்த" மனிதனாக இருந்ததும்தான்.

ஆனால் இன்றைய நம் சமூகத்திலுள்ள கலைஞர்களோ நான் முன்பு குறிப்பிட்டது போல் 20 வருடங்களுக்கு முன்பே புழித்துப்போனவற்றையே மீண்டும், மீண்டும் புது மெருகுகளில் கொண்டுவருகின்றனர். இங்கே ஒரு கேள்வி : நம் தமிழரிடையே நகைச்சுவையுணர்வே அருகிக் கொண்டே போகிறதா என்ன ?

ஐரோப்பாவில் அகதிகளாய் சிதறிப்போன எம்மவரிடையே கலைவளர்க்க தென்இந்தியாவில் இருந்தும் - கொழும்பில் இருந்தும் கோமாளிகள் - திரைப்படக் "கலைஞர்கள்" இப்போ அடிக்கடி படையெடுக்கின்றனர். இவர்களை அழைத்து நிகழ்ச்சிகளை ஒழுங்கு படுத்துவதன் மூலம் நாமும் கலை வளர சேவை ஆற்றுகிறோம் என்று எம்மில் சிலர் பெருமை வேறுகொள்கின்றனர்.

கலை வளர்க்கத்தானாம் இவர்கள் இங்கே வருகின்றனர். ஆனால் எந்தக் கலையை என்றுதான் புரியவில்லை. உண்மையில் இங்கே நிகழ்வது வியாபாரம். மண்டபம் நிறையும் ரசிகர்களை / பார்வையாளர்களை சிரிக்க வைத்துவிட்டோம் என்று இந்த "கலைஞர்களும்" கொடுத்த காசிற்கு சந்தோசமாய் சிரித்து, விசிலடித்தோம் என்று ரசிகர்களும் சமரசம் செய்து கொள்கின்றனரே தவிர கலை வளர்ப்பு என்றும் எதுவும் நிகழவில்லை. இன்னும் சொல்வதாயின் நம்மவர் கலைரசனை மட்டம் தேய்ந்து போகின்றது என்பதே சரியானதாகும்.

இயல்பாய் நகைச்சுவையை வெளிப்படுத்தமுடியாதவர்கள். குறிப்பாக கவுண்டன், செந்தில் போன்ற வெறும் நடிகர்களால் எப்படி ஒரு நல்ல நிகழ்ச்சியை வழங்கஇயலும் ?

பல்லாயிரம் பிராங்குகளை செலவழித்து இவர்களை இங்கே வரவழைத்து மேடைபோட்டு குசுபுவின் மாப்பிளையார் ? கலியாணம் எப்போ ? என்று கேட்பதுதானா எமது கலையுணர்வு ?

இந்த நடிக நடிகையர்களின் நிகழ்ச்சிகளிலும்சரி, நகைச்சுவைகளிலும்சரி பரவிக்கிடப்பது பாலியல் உணர்வுகளைத் தூண்டும் கருத்துக்கள்தான்.

O ஜெயலலிதா ரத்தம் சிந்தியிருக்கலாம் - ஆனால் அது தமிழ்நாட்டு மக்களுக்காக அல்ல
என்று தேர்தல் காலங்களில் ஆபாசமாய் பேசித் திரிந்த S.S. சந்திரன் அண்மையில் நடிகை குசுபுவுடன் சேர்ந்த கூட்டமொன்றோடு இங்கே வந்தான்.

மண்டபம் நிறையும் நம் மக்கள் / ரசிகர்கள் அப்பாடா. . . S.S கொட்டிய நகைச்சுவை இருக்கிறதே அது சராசரி தமிழ்சினிமா ரசிகனாலும் ஜீரணிக்க முடியவில்லை.

O நீங்கள் காலுக்குமேல் காலைப்போட்டுக் கொண்டு இருக்கும் போதே தெரிகிறது எதையோ அடக்கிக்கிட்டு இருக்கிறீங்கள் எண்டு - ஒருஆசையை.

O ஆறு மணிக்குப் பிறகு எல்லாம் கட்டை விரல்தான் - நானும் முன்பு சத்தியமாய்,

மேலே குறிப்பிட்ட அவ்வளவும் S.S. சந்திரன் மேடையில் கொட்டிய வக்கிரகங்கள். மேலும். . . . குசுபு மீது ரசிகர்களுக்கு ஆசையாம், ஆனால் குசுபுவால் அது இயலா தாம். . . . வேறொன்றுமல்ல ஒருக்கா குசுபுவைத் தொடத்தானாம்.

சிரிப்போமா நாம். . . சிரித்து அழுவோமா சொல்லுங்கள் ! இந்த நகைச்சுவை தேவைதான?
தமிழ் சினிமா எடுப்பவரிடம் கலையுணர்வு முற்றிலுமாக வற்றிவிட்டது. இன்று நம் திரைப்படங்களிலே வன்முறையும் இரட்டை அர்த்த வசனமும்தான் நிரம்பிவழிகின்றன.... என்று பிரபல ஒளிப்பதிவாளர் அசோக்குமார் விரத்தியுடன் குறிப்பிடுவதாக இந்தியன் டூடே எழுதுகிறது.

உண்மைதான் நாம் இங்கே புரிந்து கொள்ள வேண்டியது ; இந்த சினிமாவும், நடிகர்கூட்டமும் எம் இளம் சமூகம் மீது விதைக்கும் ஆபாசக்கருத்துக்களால் உருவாகப்போகும் ஆபத்துக்களைத்தான்.

இவர்கள் நம் மக்களின் கலாரசனையை மிகவும் கீழான மட்டரகமாக கருதியதோடு மட்டுமன்றி அதற்குமேலும் தீனிபோட ஆபாச வக்கிரகங்களை கலை என்று காவி வருகின்றனர்.

மூடத்தனங்களிலும், மாயைகளிலும், அருவ நம்பிக்கைகளிலும் நின்று உழலும் தமிழ் நாட்டு சகோதர்களை மேலும் ஏய்த்து காசு பிழியும் இந்த நடிகர் கூட்டம் ;

ஐரோப்பாவில் சிதறிய ஈழத்தமிழர்களையும் மிகவும் மட்டரகமான கலாரசனைக்கு உட்படுத்துவதுதான் வேதனை. ஒப்பீட்டளவில் நல்ல கலாரசனை கொண்டவர்கள் ஈழத்தவர்கள். என்னுடைய படத்தை அதிகநாள் ஓடவைக்கும் / பார்க்கும் யாழ்ப்பாணத்தவர்கள் என்று பாலச்சந்தரை பெருமைப்படவைத்தவர்கள்தான் இன்று மட்டரகமான கலாரசனைக்குள், வெறும் நடிகர் கூட்டத்துக்குள் வீழ்ந்து கிடக்கின்றார்கள்.

ஈழத்து ரசிகர்கள் ஒருபுறம் இருக்க ; ஈழத்து கலைஞர்களுக்கென்று ஒரு தனித்துவம் உண்டு. இது தமிழ்நாட்டுக் கலைஞர்களின் கணிப்பு, இதில் உண்மையும் உண்டு. ஆயினும் கொழும்பில் இருந்து வரும் கலைஞர்களின் இன்றைய நிகழ்ச்சிகளைப்பார்க்கும் போது நிலைமை வேறு விதமாகத் தெரிகிறது.

கொழும்பில் இருந்து வந்த கோமாளிகளின் முதல் முறை நிகழ்ச்சிகள் மண்வாசனை கலந்த கோமாளித்தனங்களாகவே இருந்தன. ஆனால் பிந்திய நிகழ்ச்சிகள் எல்லாம் கோமாளிக்கும்மாளத்தைவிட, தென்னிந்திய நடிக கூட்டத்தின் தரத்துக்கு குறைவின்றி ஆபாசம் தோய்ந்திருப்பதாக எம்மில் பலர் குறிப்பிட்டுக் கொள்கின்றனர்.

→ ம் பக்கம் 6

விண்வெளியில்

பறக்கும் வகுப்பறை



Mamoru Mohri lässt vor der Kamera einen Apfel schweben. *(Bild: Reuter)*

Endeavour எனும் அமெரிக்க விண்வெளி கலத்தில் முதன்முதலாக Mamoru Mohri எனும் ஜப்பானிய விண்வெளி ஆராய்ச்சியாளர் பயணம் செய்துள்ளார். இவர் எல்லோரும் வியக்கத்தக்க வகையில் தனது நாட்டு மக்களுக்கு அரை மணி நேர வகுப்பு ஒன்றினை விண்வெளியில் இருந்து நடாத்தினார். இவ்வகுப்பை ஜப்பானியர் அனைவரும் பார்க்கக் கூடிய வகையில் தொலைக்காட்சி நிறுவனம் ஒளிபரப்பியது. அதாவது தொலைக்காட்சி நிலையத்தில் 50 பாடசாலை சிறுவர்களும் 44 வயதுடைய Yoichicho பல்கலைக்கழகத்தை சேர்ந்த பொறியியல் விஞ்ஞானியும் விண்வெளியில் இருக்கும் மொரியிடம் கேள்விகளை கேட்டனர். இச்சிறுவர்கள் மொரி ஆரம்பக் கல்வி பயின்ற பாடசாலையை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மொரி தனது ஆரம்பப் பேச்சில் அனைத்து ஜப்பானிய சிறுவர்களுக்கும் விண்வெளியில் இருந்து வாழ்த்து கூறினார்.

"நான் பாரமில்லா உலக வெளியில் வாழ்கிறேன். இது நிச்சயமாக எனக்கு ஓர் விளையாட்டாகவே தெரிகிறது." என தெரிவித்தார். சிறுவர்கள் பின்வரும் கேள்விகளுக்கான விடையை அறிய ஆசைப்பட்டனர்.

O உலக வெளி அசௌகரியமாக உள்ளதா?
O நித்திரை கொள்ள உங்களால் முடியுமா?

இதற்கு மொரி இல்லை எனத் தெரிவித்ததோடு கப்பலில் இருக்கும் ஓர் அறையில் படுப்பது போன்று அல்லது தண்ணீர்ப் படுக்கை ஒன்றில் படுப்பது போன்று தான் உணர்வதாக தெரிவித்தார்.

மேலும் சிறுவர்களுக்கு ஓரிரு பரிசோதனைகளையும் செய்து காட்டினார். இறுதியாக மொரி இன்னுமொரு 20 வருடங்களுக்குப் பிற்பாடு நீங்களும் விண்வெளியில் பறக்கலாம் என தெரிவித்தார். ஜப்பானில் இவ் நிகழ்ச்சிக்குப் பிறகு பத்திரிகை ஒன்று சிறுவர்களுடன் பேட்டி கண்டதில் பெரும்பான்மையான சிறுவர்கள் எதிர்காலத்தில் தாமும் விண்வெளி ஆராய்ச்சியாளர்களாக வரப்போவதாக தெரிவித்தனர்.

தொடர்.... 35

குழலையே ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் இருந்து, மக்களின் நலனிற்கு சாதகமான சூழலின் உருவாக்கம் எமது சமூகத்தில் அரசியல் இடைவெளிகளையும் (political space) ஏன் காலத்தின் இடைவெளிகளையும் வேண்டி நிற்கின்றது. எமது மக்கள் தமது வரலாற்றை மீளப்பார்க்கவும், மீளாய்வு செய்யவும் அவை அவசியமாகின்றன. அதனை பெறுவதனூடாகவே காலப் போக்கில் ஆரோக்கியமான அரசியலிற்கு விதி சமைக்கலாம். அதனை எதிரி தனது தற்காலிக இருப்பினடிப்படையில் தர முயன்றால் அதனை மக்களிற்கு சாதகமாக பயன்படுத்த மனப்பக்குவம் உள்ளவர்களாலேயே மக்களின் விடுதலையை உறுதி செய்ய முடியும். எனவே சிக்கல்களுக்கு விடை தேட சிக்கல்களின் முழுப்பரிமாணத்தையும் புரிந்து கொள்ளும் மன ஆற்றலும், தேடுதல் வேட்கையும் யதார்த்தத்தில் மக்களின் உண்மை நிலையில் இருந்து பிரச்சனைகளை அணுகும் நோக்கும் அவசியமாகும்.

கிருஸ்ணகுமார் இலங்கை • 000

பேசத் துடித்த ....

தி. இராஜினி

தம்பு விம்லேஸ்வரன்

– லாங்ஸ்டன் கியூக்ஸ் (ஆபிரிக்கா)

ஜனநாயகம் இன்று வராது
இந்த வருடம்
இல்லை எப்போதுமே வராது
சமரசத்தின் வாயிலாகவும் பயத்தாலும்.

எவ்வளவு உரிமை அடுத்தவனுக்கு உண்டோ
அவ்வளவு எனக்கும் உண்டு
இரண்டு கால்களில் நிற்கவும்
பூமியை உரிமை கொண்டாடவும்தான்.

நாளை என்பது இன்னொரு நாள்
அவையவை
நடக்கும்போது நடக்கும்
என்று மற்றவர்கள்
சொல்லக் கேட்டுச் சோர்ந்து போனேன்.

செத்த பின்பு
எனக்குச் சுதந்திரம் தேவையில்லை
நாளைய உணவில் என்னால்
இன்று வாழ முடியாது.

சுதந்திரம்
ஒரு வலுவான விதை
நாளைய
மிகப் பெரிய தேவைக்காக
விதைக்கப்பட்டது.

உனக்குத் தேவைப்படுவது போலவே
எனக்குச் சுதந்திரம் தேவை.

தமிழில் : எஸ்.சண்முகம்
நன்றி : புதிய மனிதன்